# அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2022

பசில் ராஜபக்ஷ, பா.உ.
நிதி அமைச்சர்

2021 நவம்பர் 12 ஆம் திகதி

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் கீழ், அரசிறை உபாயக் கூற்று - 2022 (4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கிணங்கவும் ) மேலும் வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2022 (7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கமைவாகவும் கௌரவ நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ISBN 978-624-5674-060**

இல 118, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு லோட்டஸ் வீதி, கொழும்பு 01, இலங்கையில் அமைந்துள்ள நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பிரதான பொருளாதார குறிகாட்டிகள் | vii |
| 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் | viii |
| இணக்கப்பாடு - 2021 | ix |
| **பகுதி I** | |
| அரசிறை மூலோபாய கூற்று - 2022 | xiii |
| **01. நடுத்தரக் கால அரசிறை மூலோபாயம்** | 1 |
| 1.1 மேன்நோக்கு | 2 |
| 1.2 நடுத்தரகால அரசிறை உபாயங்கள் | 3 |
| **பகுதி II** | 7 |
| வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2022 | 9 |
| **01. அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு** | 11 |
| 1.1 மேன்நோக்கு | 13 |
| 1.2 அரசாங்க வருமானம் | 16 |
| 1.3 அரசாங்க செலவினம் | 35 |
| 1.4 திறைசேரி செயற்பாடுகள் | 38 |
| 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு | 40 |
| **02. பொருளாதாரத் தோற்றப்பாடுகள்** | 47 |
| 2.1 மேன் நோக்கு | 49 |
| 2.2 பொருளாதார வளர்ச்சி | 50 |
| 2.3 நாணயத் துறை அபிவிருத்திகள் | 58 |
| 2.4 பங்குச் சந்தை | 60 |
| 2.5 வெளியகத் துறை அபிவிருத்திகள் | 60 |
| **03. அரசுடமைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை** | 65 |
| 3.1 மேன்நோக்கு | 67 |
| 3.2 10 முக்கிய அரச உடமை வியாபார தொழில் முயற்சி நிறுவனங்களின் மீளாய்வு | 67 |
| **04. 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்** | 75 |

## அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| **பகுதி I** | | |
| அட்டவணை 1.1 | நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டம் - 2021 இலிருந்து 2025 வரை | 3 |
| **பகுதி II** | | |
| அட்டவணை 1.1 | அரசிறை செயற்பாடுகளின் சுருக்கம் | 14 |
| அட்டவணை 1.2 | மதிப்பிடப்பட்ட, உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2021 | 15 |
| அட்டவணை 1.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் | 16 |
| அட்டவணை 1.4 | பெறுமதி சேர் வரி செயலாற்றுகை | 17 |
| அட்டவணை 1.5 | உற்பத்தி வரி செயலாற்றுகை | 18 |
| அட்டவணை 1.6 | மோட்டார் வாகன இறக்குமதி, புதிய வாகனப் பதிவு | 19 |
| அட்டவணை 1.7 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி | 19 |
| அட்டவணை 1.8 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் | 20 |
| அட்டவணை 1.9 | முத்திரைத் தீர்வை மற்றும் மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்களின் செயலாற்றுகை | 20 |
| அட்டவணை 1.10 | அரசாங்க வருமான வேறுபாட்டிற்கான பகுப்பாய்வு (2021 ஜனவரி – ஆகஸ்ட் வரையில்) | 21 |
| அட்டவணை 1.11 | அரசாங்க செலவின செயலாற்றுகை | 35 |
| அட்டவணை 1.12 | அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2020 - 2021 | 36 |
| அட்டவணை 1.13 | நலனோம்பல் செலவினம் | 37 |
| அட்டவணை 1.14 | அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று | 38 |
| அட்டவணை 1.15 | சாதனங்கள் அடிப்படையில் மொத்த உள்நாட்டு பெறுகைகள் | 39 |
| அட்டவணை 1.16 | நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் - 2021 சனவரி - ஆகஸ்ட் வரையில் | 39 |
| அட்டவணை 1.17 | வெளிநாட்டு கடன்கள் மற்றும் நன்கொடைகளின் நிதிப்பகிர்வுகள் நிதிப்பகிர்வுகள் - 2021 சனவரி – ஆகஸ்ட் வரையில் | 41 |
| அட்டவணை 1.18 | வெளிநாட்டு கடன்கள் மற்றும் நிதி உதவிகளின் நிதிப்பகிர்வுகள் - 2021 சனவரி – ஆகஸ்ட் வரையில் | 44 |
| அட்டவணை 2.1 | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2010 நிலையான விலைகள்) | 51 |
| அட்டவணை 2.2 | சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் | 55 |
| அட்டவணை 2.3 | சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை | 56 |
| அட்டவணை 2.4 | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%) | 57 |
| அட்டவணை 2.5 | முதன்மை பணவீக்கம், உள்ளார்ந்த பணவீக்கம், உணவுப்பணவீக்கம் (அடிப்படை: 2013 = 100) | 59 |
| அட்டவணை 2.6 | மூலதனச் சந்தை அசைவுகள் | 60 |
| அட்டவணை 2.7 | வெளிநாட்டு வர்த்தகம் | 61 |
| அட்டவணை 3.1 | மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி | 69 |
| அட்டவணை 3.2 | 52 அரச உடமை வியாபார தொழில் முயற்சி நிறுவனங்களின் இலாபத்தன்மை | 71 |
| அட்டவணை 3.3 | அரச உடமை தொழில் முயற்சி நிறுவனங்களின் அறவீடு/ பங்கிலாப வருமானம் | 73 |

## வரைபுகள்

பக்கம்

### பகுதி II


| | | |
|---|---|---|
| வரைபுகள் 1.1 | மொத்த வருமானத்தின் வகுதி (2021 சனவரி – ஆகஸ்ட் வரை) | 17 |
| வரைபுகள் 1.2 | வருமான மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் (2021 சனவரி - ஆகஸ்ட்) | 17 |
| வரைபுகள் 1.3 | உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2021 சனவரி - ஆகஸ்ட் வரையில்) | 18 |
| வரைபுகள் 1.4 | சாதன அடிப்படையில் மொத்த தேறிய உள்நாட்டு பெறுகைகள் (2021 சனவரி - ஆகஸ்ட் வரை) | 40 |
| வரைபுகள் 1.5 | 2021 சனவரி - ஆகஸ்ட் வரையில் துறைரீதியான பகிர்வுகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | 45 |
| வரைபுகள் 1.6 | 2021 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத மீதிகள் | 45 |
| வரைபுகள் 1.7 | 2021 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் துறை ரீதியாக பகிரப்பட்டு பயன்படுத்தப்படாத மீதி | 45 |
| வரைபுகள் 1.8 | கடன் சேவைக் கொடுப்பனவுகள் 2021 சனவரி – ஆகஸ்ட் வரை மேலும் செப்தெம்பர் - திசெம்பருக்கான எதிர்வுகூறல் | 45 |
| வரைபுகள் 2.1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி | 49 |
| வரைபுகள் 2.2 | மொத்த உள்நாட்டு உற்பத்தி வகுதி - முதல் காலாண்டு 2021 | 50 |
| வரைபுகள் 2.3 | விவசாயத்துறை வகுதி - முதல் காலாண்டு 2021 | 52 |
| வரைபுகள் 2.4 | கைத்தொழில் துறை வகுதி - முதல் காலாண்டு 2021 | 54 |
| வரைபுகள் 2.5 | தயாரிப்புத் துறை வகுதி - முதல் காலாண்டு 2021 | 54 |
| வரைபுகள் 2.6 | சேவைத் துறை வகுதி - முதல் காலாண்டு 2021 | 55 |
| வரைபுகள் 2.7 | தொழிற்படை பங்களிப்பு வீதம் மற்றும் வேலையின்மை வீதம் | 58 |
| வரைபுகள் 2.8 | நாணய சராசரி, தனியார் துறை கடன் வளர்ச்சி, விளைவு விகிதங்கள் | 59 |
| வரைபுகள் 2.9 | முதன்மை பணவீக்கம், உள்ளார்ந்த பணவீக்கம், உணவுப்பணவீக்க அசைவுகள் (அடிப்படை: 2013 = 100) | 60 |
| வரைபுகள் 2.10 | வர்த்தக மீதி, நாணயமாற்று வீத அசைவுகள் | 61 |
| வரைபுகள் 2.11 | ஏற்றுமதிகளின் வகுதி | 62 |
| வரைபுகள் 2.12 | இறக்குமதிகளின் வகுதி | 63 |


## கட்டங்கள்


| | | |
|---|---|---|
| கட்டம் 3 | பிரதான அரசிறை செயற்பாடுகள் (2021 சனவரி – செப்தெம்பர் வரை) | 24 |


## பின்னிணைப்புகள்


| | | |
|---|---|---|
| பின்னிணைப்பு I | திறைசேரியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரம் - ஆகஸ்ட் 31 2021 | 80 |
| பின்னிணைப்பு II | பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகள் | 82 |
| பின்னிணைப்பு III | வருமான மதிப்பீடுகளுக்கான ஊகங்கள் - 2022 | 90 |

முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | **2020** | **2021** |
| மெய்த் துறை | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் காலாண்டு | % | -9.1 | 8.0 |
| விவசாயம் | முதல் காலாண்டு | % | -7.3 | 7.1 |
| கைத்தொழில் | முதல் காலாண்டு | % | -14.6 | 12.1 |
| சேவைகள் | முதல் காலாண்டு | % | -5.2 | 5.1 |
| பணவீக்கம்(புள்ளிக்குப் புள்ளி) – CCPI | செப் இறுதி | % | 4.0 | 5.7 |
| பணவீக்கம் (சராசரி) – CCPI | செப் இறுதி | % | 4.7 | 4.5 |
| வேலையின்மை வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 5.4 | 5.1 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 50.2 | 49.8 |
| அரசிறைத் துறை | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | -975 | -1,119 |
| மொத்த வருமானம் | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | 906 | 942 |
| வரி வருமானம் | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | 801 | 853 |
| வரியல்லாத வருமானம் | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | 105 | 89 |
| மொத்த செலவினம் | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | 1,884 | 2,062 |
| மீண்டெழும் செலவினம் | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | 1,670 | 1,802 |
| அரசாங்க முதலீடு | சன. - ஆகஸ்ட் | ரூபா. பில். | 228 | 270 |
| அரசாங்க படுகடன் | யூலை இறுதி | ரூபா. பில். | 14,261 | 16,752 |
| வெளிநாட்டுத் துறை | | | | |
| ஏற்றுமதிகள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 6,445 | 7,903 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 1,516 | 1,766 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 4,905 | 6,093 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 2,853 | 3,435 |
| ஏனையவை | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 2,052 | 2,658 |
| இறக்குமதிகள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 10,257 | 13,412 |
| நுகர்வுப் பொருட்கள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 2,300 | 2,579 |
| இடைநிலைப் பொருட்கள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 5,692 | 7,942 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 1,691 | 2,396 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | 2,253 | 2,882 |
| வர்த்தக மீதி | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | -3812 | -5509 |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன. - செப். | எண்ணிக்கை | 507,311 | 37,924 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன. - செப். | ஐ.அ. டொ. மில் | 681.9 | 51.0 |
| தொழிலாளர்களின் பண அனுப்புகை | சன. - செப். | ஐ.அ. டொ. மில் | 5,048.8 | 4,577.5 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | -172.6 | -181.3 |
| மொத்த சென்மதி நிலுவை | சன. - ஆகஸ்ட் | ஐ.அ. டொ. மில் | -722.2 | -2423.3 |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் | ஆகஸ். இறுதி | ஐ.அ. டொ. மில் | 7,430 | 3,544 |
| நாணய மாற்று விகிதம் (இறுதி மாதம்) | செப் இறுதி | டொலர் / ரூபா | 185.52 | 199.98 |
| நாணய மாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன. - செப். | டொலர் / ரூபா | 185.03 | 201.98 |
| நாணயத்துறை | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | செப். இறுதி | % | 4.50 | 5.00 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | செப். இறுதி | % | 5.50 | 6.00 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | செப். இறுதி | % | 2.00 | 4.00 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWPR) | செப். இறுதி | % | 6.19 | 6.42 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகதம் (91 நாட்கள்) | செப். இறுதி | % | 4.51 | 6.70 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகதம் (364 நாட்கள்) | செப். இறுதி | % | 4.89 | 7.01 |
| நாணய வழங்கல் வளர்ச்சி (M2b) | ஆகஸ். 2020/ஆகஸ். 2021 | % | 17.5 | 21.0 |
| தனியார் துறை கடன் வளர்ச்சி | ஆகஸ். 2020/ஆகஸ். 2021 | % | 5.2 | 15.1 |

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| பிரிவு | தேவைப்பாடு | உள்ளடக்கங்கள் | இணக்கப்பாடுகள் |
|---|---|---|---|
| பிரிவு 4, 5 மற்றும் 6 | அரசிறை உபாயக் கூற்று சமர்ப்பிப்பு* | அரசின் அரசிறைக் கொள்கைகளின் பால் மக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கு அரசிறை உபாயக் கூற்று மற்றும் அரசாங்கத்தின் அரசிறை உபாய மதிப்பீட்டுச் செயற்பாட்டு நியமங்களின் ஸ்தாபிப்பு. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 7, 8 மற்றும் 9 | அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கான அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளியல் மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 10, 11 மற்றும் 12 | நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறைவேற்றுகையின் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அல்லது யூன் மாதம் இறுதித் தினம் வருடாந்தம் வெளியடப்பட வேண்டியுள்ளதுடன் இத்திகதிகளில் எத்திகதி பிந்தியதாக இருந்தபோதும் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 13, 14 மற்றும் 15 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) | நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டு அவ் வெளியீட்டிலிருந்து இரு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.. |
| பிரிவு 16,17,18 மற்றும் 19 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு ** | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய தகவல்களைத் தருகின்றது | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதாக அறிவித்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது. |

* நிதி அமைச்சரினால்
** நிதி அமைச்சின் செயலாளரினால்

| இணக்கப்பாடுகள் - 2021 |
|---|
| ▪ இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை – நிதி அமைச்சின் ஆண்டறிக்கை -2020<br><br>இவ்வறிக்கையானது 2020 ஆம் ஆண்டின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையினைக் குறிப்பிடுவதுடன், 2021 மே மாத இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டு 2021 யூன் 22 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| ▪ அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை - 2021<br><br>2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான பொருளாதார நிலைமை பற்றிய இவ் அறிக்கை 2021 ஆம் ஆண்டு யூன் மாதத்தின் இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டு. 2021, யூலை 19 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| 2022 - அரசிறை முகாமைத்துவ அறிக்கையில் அடங்கியுள்ளவை:<br><br>▪ அரசிறை உபாயக்கூற்று - 2022<br><br>முழுமையான அரசிறைக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு முக்கியமாகக் கருதப்படும் பிரதான அரசிறை அளவீடுகள் மற்றும் பரந்த உபாய முன்னுரிமைகள் குறிப்பிடப்பட்டு அரசாங்கத்தின் அரசிறை உபாயம் வெளிப்படுத்தப்பட்டுள்ள அரசிறை உபாயக் கூற்றானது, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| ▪ வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2022<br><br>அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் அரச படுகடன்கள் முதலியவற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகளுடன் அரசிறை உபாயத்திற்கேற்ப அரசாங்க அரசிறை செயலாற்றுகைகளை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையானது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

# பகுதி I

# இறைவரி மூலோபாய கூற்று – 2022

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டது

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் அரசிறை உபாய அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் நிதி அமைச்சர் வேண்டப்பட்டதற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது, வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொள்ளப்பட்டதும் அரசாங்கம் உபாயமாக கடைபிடிக்க வேண்டிய முக்கிய விடயங்களையும், செயற்படுத்த வேண்டியுள்ள முழு மொத்த அரசிறை கொள்கையினையும் கவனத்திற் கொண்டும் குறிப்பீடு செய்யப்பட்ட பிரதான அரசிறை நடவடிக்கைகள் தொடர்பில் விரிந்த உபாய முன்னுரிமைகளையும் தெளிவுபடுத்துகின்றது.

# நடுத்தர காலத்துக்குரிய அரசிறை மூலோபாயம்

# 01

## 1.1 கண்ணோட்டம்

தீவிரமான தடுப்பு மருந்தேற்றலுடனும், ஆளுக்காள் இடைவெளி பேணல் போன்ற மருந்துகள் சம்பந்தப்படாத மற்றைய நடவடிக்கைகளுடனும், இலங்கை பெருந்தொற்றைச் சமாளிப்பதில் வெற்றியடைந்துள்ளது. இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது, 16 வயதுக்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த சனத்தொகையினரில் 83 சதவீதத்தினர் முழுமையாகத் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன்,3 ஆவது மருந்தேற்றலுக்குரிய ஆயத்தங்களும் நடந்து வருவதுடன்,இந்நிலைமை முன்னேறிய பொருளாதாரங்களுடன் ஒப்பிடத்தக்கதாயுள்ளது. இந்த எதிர்பார்க்காத வெற்றியும் அர்ப்பணிப்பும் பொருளாதாரத்தை 2021 இல் ஒரு 'புதிய வழமை நிலவரத்துக்கு' இட்டுச் சென்றுள்ளது. 'V-வடிவ' மீட்பைக் கருதும்போது, 2021 இன் இரண்டாவது அரையாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 2020 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 9.1 சதவீத சுருக்கத்தைத் தொடர்ந்து, 8 சதவீதத்தால் எழுச்சி பெற்றுள்ளது. ஏற்றுமதியிலிருந்தான சம்பாத்தியங்கள் ஆகஸ்ட் 2021 இல் மூன்றாவது வெற்றிகரமான மாதமாக பெருந்தொற்றுக்கு முந்திய நிலையை ஒத்த நிலையை அடைந்து, 1 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக முன்னேறியதுடன், ஒக்தோபர் 2021 இல் 1,156 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற, கடந்த 10 வருடத்தினுள் அடைந்திராத சாதனை ஏற்றுமதியை அடைந்துள்ளது. வேலைவாய்ப்பின்மை வீதமானது 2021 இன் முதலாவது காலாண்டுக்குரிய 5.7 சதவீதத்திலிருந்து, 2021 இரண்டாவது காலாண்டில் 5.1 சதவீத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஒப்பீட்டளவில் பலமானதொரு பொருளாதார வளர்ச்சி, 2021 இன் முதல் எட்டு மாதங்களில் அரசாங்க வருமானத்தில் கிட்டத்தட்ட 6.5 சதவீதத்திற்கு அதிகரிப்புக்கு உதவியது. நிதி ரீதியான மற்றும் அரசிறை ரீதியான ஊக்குவிப்புப் பொதிகளுடன் சேர்ந்த பெருந்தொற்றின் பின்விளைவுகள் 2021 இன் அரசிறைப் பற்றாக்குறையின் விரிவாக்கத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11 சதவீதத்திற்கு விரிவுபடுத்தியது. ஆயினும்,பெருந்தொற்று தொடர்பான செலவுகளைத் தவிர்க்கும்போது,அரசிறைப் பற்றாக்குறை 2021 இல் 9.8 சதவீதமாக இருந்திருக்கும். அரசிறைப் பற்றாக்குறையின் விரிவாக்கத்துடன்,எதிர்பார்த்தது போல ரூபாவிலான கடன் தொகை அதிகரித்துள்ளதுடன் 2019 இன் முடிவில் 50 சதவீதமாக இருந்த மொத்த வெளிநாட்டு நாணயக் கடன் கிட்டத்தட்ட 40 சதவீதமாகக் குறைவடைந்து, கடனின் இயங்கு நிலை சீரடைந்துள்ளது.அதேவேளை, எதிர்பார்த்தவாறு, பெருந்தொற்றின் இயங்கு நிலையும் பொருளாதாரத்திலும், அரசிறையிலும் பாதகமான நிலையை ஏற்படுத்தி, பொருளாதாரத்தைச் சுருக்கி, 2020/2021 காலகட்டத்தில் கிட்டத்தட்ட ரூ 1,500 - 2,000 பில்லியன்கள் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறான இழப்பு மத்திய காலகட்டத்திற்கும் கடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தடுப்பு மருந்தேற்றலையடுத்து உலகப் பொருளாதார மீட்சி, குறிப்பாக வளர்ந்த பொருளாதாரங்களில் தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. எவ்வாறாயினும், மீட்சியானது, எல்லைகளைக் கடந்த அதிக தொற்றுந்தன்மை கொண்ட டெல்டா மற்றும் ஏனைய மாறுபாடுகளினால் முடக்கப்படுகிறது. அதனால், சர்வதேச நாணய நிதியம் ஒக்தோபர் 2021 இற்கான தனதுஉலகப் பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்ட அறிக்கையில் தனது கணிப்பை 2021 இற்கு 5.9 சதவீதமாகவும், 2022 இற்கு 4.9 சதவீதமாகவும் குறைத்துள்ளது. ஆயினும், நாடுகளிடையே சமமற்ற வளர்ச்சி வாய்ப்புகள்,அவற்றின் நிதி நிலைமைகளுடனும் திறன் அளவுகளுடனும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. கேள்வி மற்றும் நிரம்பல் ஆகியவற்றுக்குக் காணப்படும் பக்க விளைவுகளும் கூட,வளர்ச்சி வாய்ப்புகள் தளம்பல் நிலையில் காணப்படுவதற்கான காரணங்களாக உள்ளன. கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ள கேள்விகளின் பொருளாதார மீட்சியுடன் கூடிய எழுச்சியும், பெறுமதிச் சங்கிலியில் ஏற்படும் தடங்கல்களும் நாடுகளிடையே பணவீக்க அதிகரிப்புக்கு இட்டுச் செல்வதுடன்,எரிவாயு, எரிபொருட்கள், உணவுப்பொருட்கள் ஆகிய சர்வதேச நுகர்பொருட்களில் ஏற்படும் எதிர்பாரா விலையதிகரிப்பிலிருந்தும் போக்குவரத்துச் செலவில் ஏற்படும் அதிகரிப்பிலிருந்தும் இது உருவாகும். பெருந்தொற்றானது,வளர்ந்துவரும் நாடுகளில் சமீபத்திய பணவீக்கத்துடன் சேர்ந்து,எளிதில் பாதிக்கப்படத்தக்க பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகப் போக்கு இலங்கையிலும் பிரதிபலித்ததுடன்,இலங்கையின் பணவீக்கம், உணவுப் பொருட்களினதும் உணவற்ற மற்றைய பொருட்களினதும் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்து உருவானகேள்வி மற்றும் நிரம்பல் ஆகியவற்றுக்குக் காணப்படும் பக்க விளைவுகள் காரணமாக, சமீப மாதங்களில் கூடிய அளவுக்கு அதிகரித்து, மத்திய வங்கியின் இலக்குகளிலிருந்து விலகலைக் காண்பித்துள்ளது. ஆயினும், சமீப மாதங்களில் காணப்பட்ட பணவீக்க அதிகரிப்பு தற்காலிகமானதாகக் காணப்படுவதுடன், 2022 இல் நடுத்தர ஒற்றை இலக்கத்திற்கு வந்து நிலைமையை இலகுவாக்கக்கூடும்.

4 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் சம்பாதித்த உல்லாசப் பிரயாணத்துறை,பெருந்தொற்று காரணமாகநடமாட்டங்கள் தடுக்கப்பட்டதால் மோசமான பாதிப்பை எதிர்நோக்கியது. உல்லாசப் பிரயாணத்துறையின் சம்பாத்தியங்கள்,2020 இல் ஏறக்குறைய பூச்சியத்திலிருந்து,2021 இன் முதல் ஒன்பது மாதங்களில், 51 மில்லியன் அமெரிக்க டொலர்களைஅடைந்தன. ஆயினும் கட்டுப்பாடுகளில் ஏற்பட்ட தளர்வுகளினாலும் உல்லாசப் பிரயாணிகள் வர ஆரம்பித்து,2021 ஒக்தோபரில் 22,771 என்ற எண்ணிக்கைக்கு ஓர் உயர்வு ஏற்பட்டதுடன்,2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் உள்ளூர் ஹோட்டல்களில் தொடர்ந்து அதிகரித்த பதிவுகள் மற்றும் விசாரணைகள் போன்ற குறிகாட்டிகளாகின்றன.

இலங்கையின் நாணயக்கொள்கையானது,கொள்கை ரீதியான வட்டி வீதங்களின் அதிகரிப்பைத் தொடர்ந்து,உள்ளூர் நாணயச் சந்தையைப் பலப்படுத்துவதற்காக,ஆகஸ்ட் 2021 இல் இடமளிக்கும் கொள்கையிலிருந்து கட்டுப்படுத்தும் நிலைப்பாட்டிற்கு மாற்றப்பட்டது.நிலைத்த வைப்பு வசதி வீதமும் (SDFR), நிலைத்த கடன் வசதி வீதமும் (SLFR), மார்ச் 2020 இலிருந்து அவற்றின் அடிப்படைப் புள்ளிகள் ஒவ்வொன்றும் 200 ஆல் குறைவடைந்ததுடன்,2021 ஆகஸ்ட்டில் முறையே 5.00 சதவீதத்திற்கும், 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. இது பெருந்தொற்றின் தாக்கத்தைச் சமாளிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. இதற்கு

மேலதிகமாக,அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் (LCBs) ரூபாவிலான எல்லா வைப்புகளின் கடப்பாடுகள் மீதான சட்டரீதியான ஒதுக்க விகிதம்(SRR) 2.00 சதவிதத்திலிருந்து 4.00 சதவீதமாக 2021 செப்தெம்பரிலிருந்து அதிகரிக்கப்பட்டது.

நடுத்தரக் காலப்பகுதிக்கான பேரண்ட அரசிறைக் கட்டமைப்பு 2022-2025,உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சமீபத்தில் ஏற்பட்ட மாற்றங்களுடனும்,முக்கியமாகப் பெருந்தொற்றுத் தாக்கத்தின் அளவாலும் திருத்தியமைக்கப்பட்டது. 2022 இன் அரசிறைப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2021 இல் மதிப்பிடப்பட்ட 11.1 சதவீதத்திலிருந்து2022 இல் 8.8 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தின் கொள்கையானது, பொது முதலீடுகளுக்கு, 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பேணுவதன் மூலம்,5.0 சதவீதமாக பொது முதலீடுகளுக்குபோதுமான அளவில் அரசிறையை வழங்குவதாகும்.மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் பொது முதலீடுகளுக்குமான விகிதாசாரம், நடுத்தரக் காலப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக,5-7 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வருமான அதிகரிப்பினதும் செலவுகளை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளினதும் இணைப்பினூடான அரசிறைக் கட்டமைப்பு,2025 இல் 4.8 சதவீத பற்றாக்குறையைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கட்டமைப்பு முயற்சிகளுடன், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் பொது முதலீடுகளுக்குமான விகிதாசாரம்,2025 இல் 89.2 சதவீதத்திற்குக் குறைவடையலாம்.

“நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” என்ற ஆவணத்தில் கூறப்பட்டுள்ள அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பு, நடுத்தர காலகட்டத்தில் வருடமொன்றுக்கான 5 – 7 சதவீதமாகத் தூண்டப்பட்ட வளர்ச்சி பொருளாதாரத்தில் நிலைத்த தன்மையையும், எல்லோருக்கும் பொதுவான உயர்ந்த தன்மையையும் கொண்டிருக்குமெனக் கருதுகிறது.

### 1.2 நடுத்தரக் காலகட்டத்திற்கான அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறைக் கொள்கைக் கட்டமைப்பானது,நடுத்தரக் காலகட்டத்திற்கான நுண் அரசிறைக் கட்டமைப்பு (MTMFF)எனக் கூறப்படுவதுடன்,2003 இன் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்தில் தரப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்காக அதைக் கருத்திற் கொண்டுள்ளது.

**அட்டவணை 1.1 : நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டகம் - 2021 இலிருந்து 2025 வரை**

மொ.உ.உ. சதவீதத்தில்

| குறிகாட்டி | தற்காலிக | திருத்தப்பட்ட மதிப்பீடு | மதிப்பீடு | எதிர்வு கூறல்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| **மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்** | **9.2** | **9.1** | **12.4** | **13.6** | **14.4** | **15.5** |
| **மொத்த வருமானம்** | **9.1** | **9.1** | **12.3** | **13.5** | **14.4** | **15.5** |
| **வரி வருமானம்** | **8.1** | **8.0** | **11.2** | **12.2** | **13.0** | **13.9** |
| வருமான வரிகள் | 1.8 | 1.8 | 2.9 | 2.7 | 2.9 | 3.3 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 3.9 | 3.9 | 5.7 | 6.2 | 6.6 | 7.1 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 2.4 | 2.3 | 2.6 | 3.3 | 3.5 | 3.6 |
| **வரியல்லா வருமானம்** | **1.0** | **1.0** | **1.1** | **1.3** | **1.4** | **1.6** |
| **மானியங்கள்** | **0.04** | **0.03** | **0.05** | **0.05** | **0.04** | **0.04** |
| **மொத்த செலவினம்** | **20.3** | **20.2** | **21.2** | **20.9** | **20.5** | **20.4** |
| **மீண்டெழும் செலவினம்** | **17.0** | **16.7** | **16.2** | **15.4** | **14.5** | **13.7** |
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 5.3 | 5.1 | 5.3 | 5.1 | 4.8 | 4.5 |
| பொருட்கள் சேவைகள் | 1.2 | 1.1 | 1.0 | 1.0 | 0.9 | 0.8 |
| வட்டி | 6.5 | 6.4 | 6.1 | 6.1 | 5.8 | 5.5 |
| உதவு தொகைகள் மற்றும் மாற்றல்கள் | 4.8 | 4.1 | 3.7 | 3.3 | 3.0 | 2.8 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள்** | **3.3** | **3.5** | **5.0** | **5.6** | **6.0** | **6.7** |
| பொது முதலீடுகள் | 5.4 | 3.5 | 5.1 | 5.6 | 6.1 | 6.7 |
| **நடைமுறைகணக்கு மீதி** | **-7.9** | **-7.7** | **-3.9** | **-1.8** | **-0.1** | **1.8** |
| **ஆரம்ப மீதி** | **-4.6** | **-4.7** | **-2.7** | **-1.3** | **-0.3** | **0.7** |
| **வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை** | **-11.1** | **-11.1** | **-8.8** | **-7.3** | **-6.1** | **-4.8** |
| **பற்றாக்குறை நிதியளிப்பு** | **-11.1** | **-11.1** | **-8.8** | **-7.3** | **-6.1** | **-4.8** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | -0.6 | -0.3 | -1.0 | 0.4 | 0.0 | -0.3 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 11.7 | 11.4 | 9.8 | 6.9 | 6.1 | 5.2 |
| **மத்திய அரசாங்கத்தின் படுகடன் (மொ.உ.உ %)** | **101.0** | **102.8** | **101.6** | **98.7** | **94.4** | **89.2** |

*மூலம் : அரசிறை கொள்கைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம்*

** 2021 செப்தெம்பர் இறுதியில் காணப்படுகின்ற தகவல்களை அடிப்படையாக கொண்ட கணிப்பீடுகள்*

அதனால், அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயம்,2003 இன் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்திலுள்ள இலக்குகளை அடைவதில் தூண்டப்படும் வளர்ச்சிக்கிடையிலானதாக உள்ளது. அது மேலும்,குறைந்த விகிதங்களிலும், எளிமையாகவும், நிலையாகவும் பொருந்தியுள்ள வரிக் கொள்கையுடன் சேர்ந்துள்ள வலுவான பொது முதலீட்டு மூலோபாயத்தினூடாக தனியார் துறைசார் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்காகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலவரத்தில் அரசாங்க வரிக் கொள்கையானது, 2019 டிசெம்பரில் அறிவிக்கப்பட்டவாறு,நிலைத்த தன்மையைப் பேணுவதற்கான அதன் தீர்மானத்துடன், வர்த்தகங்களுக்கு நிலையான சூழலை வழங்கி, குறிப்பாக பெருந்தொற்றால் உருவான நிச்சயமற்ற நிலைமையுடனான காலகட்டத்தில்,பரந்ததொரு பரமானத்திற்குள்ளேயே இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. எவ்வாறாயினும், செயற்கை நுண்ணறிவு (AI), பாரிய அளவிலான தரவு வகைப்படுத்தல் உள்ளிட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும், வரிசெலுத்துபவர்களுக்கு மிகவும் எளிதாக இருக்கும் வகையிலும் வரி நிர்வாகத்தை மேலும் மேம்படுத்துவதிலும் கவனஞ் செலுத்தப்படுகிறது. வரி செலுத்துதலிலிருந்து தப்புவதை ஆகக்குறைந்த அளவில் வைத்திருப்பதற்கான முறைமைகளும் உருவாக்கப்படுவதுடன், இலத்திரனியல் கையொப்ப முறை மற்றும் நிகழ்நிலைக் கொடுப்பனவு முறை ஆகியவற்றினூடாக வரிக் கட்டமைப்பை அகலப்படுத்துவதிலும் கவனஞ் செலுத்தப்படுகிறது.

அனுமதிப் பத்திரங்களை ஏலத்தினூடாக வழங்குதல், பங்குலாபங்களையும் கட்டணங்களையும் அதிகரித்தல் ஆகியவற்றுடன் அரசுடைமையான தொழில்முயற்சி நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துவதுடன் சேர்த்து வரியற்ற வருமானங்களை உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

செலவை மேற்கொள்ளும் ஒவ்வொரு நிறுவனமும் இறுக்கமான செயன்முறையைப் பின்பற்றி, முன்னுரிமை அடிப்படையில் தமது செலவுகளை, குறிப்பாக மீண்டுவரும் செலவுகளைச் செய்ய வேண்டும் என்பதுடன் அதிலிருந்து பெறப்படும் விளைவுகள் தரமாகவும் வினைத்திறனுடனும் இருக்க வேண்டும் என்ற வகையிலும், செலவு முகாமைத்துவமும் பலமாக முன்வைக்கப்படுகிறது. பலமானதொரு சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினூடாக, சமூகத்திலுள்ள எளிதாகப் பாதிக்கப்படுவோர் பாதுகாக்கப்படும் அதேவேளை,அரசாங்கம் இலக்குவைக்கப்பட்ட மானியங்களை வழங்குவதிலும் கவனஞ் செலுத்துகிறது.

உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியளிக்கப்படும் நீர், நீர்ப்பாசனம், வீதிகள், கல்வியும் சுகாதாரமும், கிராமிய அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பு, வீடமைப்பு, விவசாய மற்றும் கைத்தொழில் துறைகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உற்பத்தி ஊக்குவிப்பு வலயங்கள், பசுமைப் பொருளாதாரம், புதுப்பிக்கத்தக்க சக்திவளம், தகவல் தொடர்பும் எண்ணிமமயப்படுத்தப்பட்ட அரசாங்கமும் போன்ற முன்னுரிமையளிக்கப்பட்ட விடயங்களில் பொது முதலீடுகள் கவனஞ் செலுத்தும். நகர வீடமைப்பு, வீதிகள், சக்திவளம் ஆகியவற்றில் தனியார்துறையின் பங்களிப்புடன், அரச மற்றும் தனியார் கூட்டில் செயற்பாடுகளையும் தொழில்நுட்ப மாற்றங்களையும் மேற்கொள்ள இடமளிக்கப்படும்.

இலத்திரனியல் கொள்முதல்,இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை, மேலும் அரசதுறையில் சேவை களை திறம்பட வழங்குவதற்கு தடையாகவுள்ள வற்றை விவேகமாக கட்டுப்படுத்தல் என்பவை மூலம் இறைவரி மூலோபாயங்கள் வலுப்படுத்தப்படுகின்றது.

**நடுத்தர காலகட்டத்திற்கான பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு:**

- 2022 இல் 5.0 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைதல். அதற்குப் பின்னர் 6.0 – 7.0 சதவீதம் வரை அடைதல்.
- வேலைவாய்ப்பின்மையை 5.0 சதவீதத் திற்கும் கீழே பேணுதல்.
- பணவீக்க வீதத்தை 4 – 6 சதவீத மட்டங்களில் வைத்திருத்தலும், ஒற்றை இலக்க வட்டி வீதத்தை உறுதிப்படுத்துதலும்.
- ரூபாவின் நாணய மாற்றுப் பெறுமதியை நிலையாகப் பேணுதல்.

திறனின்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியன காரணமாக, அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் ஓரளவு உகந்த செயற்றிறன் கவனத்திற்குரியதாக இருக்கின்றது. அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் நிதி ரீதியாக மேலும் ஒப்பேற்றக்கூடியனவாகவும், போட்டித்தன்மையும் புத்தாக்கமும் கொண்டவையாகவும் மாற்றப்படுவதற்கு, கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. அரசாங்கச் செலவுகளுக்குக் கடனற்ற வகையில் உதவுதல், வரியற்ற வருமானத்தை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்குப் பங்களிக்கும் அதே வேளை, செலவுகளைக் குறைத்து நிதிக் கட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதற்காக செயற் றிறன் மேம்பாடு, மூலோபாயமற்ற வர்த்தகத் தொழில் முயற்சிகளின் பரந்த அடித்தளம் ஆகியன இந்த நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

வர்த்தகத்திற்கு வசதியளித்தலில் முன்னேற்றம், ஏற்றுமதியாளர்களால் தரப்படும் தரப்படுத்தல் முறை ஆகியன சுங்கத்தின் விரைவான செயற்பாட்டுக்கு வழிவகுக்கும். பகுதியளவிலான சுங்க வரிகள் நீக்கப்படுவது தொடரும் என்பதுடன், முக்கிய உள்நாட்டுக் கைத்தொழில்கள், குறிப்பாக விவசாயத்துறை பாதிப்புறா வண்ணம், தடையற்ற வர்த்தகக் கொள்கையுடனான நியாயப்படுத்தலும் தொடரும். பல்வேறு முகவர் நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெறப்படுதலை நீக்குவதன் மூலம், இறக்குமதிக்கான அனுமதித் தேவைகள் நெறிப்படுத்தப்படும்.

அரசிறைப் பற்றாக்குறையின் உயர்ச்சி காரணமாக கடன் தொகையும் உயர்ந்ததுடன்,அறிவிக்கப்பட்டுள்ள 2020-2025 வெளிநாட்டு மூலவள திரட்டுகை காரணமாக, வெளிநாட்டுக் கடன்களை நியாயப்படுத் துதலாலும், வெளிநாட்டுக் கடன்களின் 2019 இல் காணப்பட்ட 50 சதவீத அதிகரிப்பிலிருந்து 40 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதாலும் இதன் இயங்குநிலையில் ஒரு மாற்றம் காணப்பட்டது.

தேவைப்படும் நிதியானது இருதரப்பு மற்றும் பல்தரப்பு முகவர்களிடமிருந்து சலுகை அடிப்படையில் பெறப்படும் அதேவேளை,மேற்குறிப்பிட்ட வழிமுறை தொடர்ந்தும் பேணப்படும். அதே நேரத்தில்,பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக முக்கியமாக உள்நாட்டு நிதி மூலங்கள் அணுகப்படும். இதில் விசேடமாக, வீதிக் கட்டுமானம், குளங்களைத் திருத்தியமைத்தல் போன்ற ஆகக்குறைந்த இறக்குமதிகளைக் கொண்டுள்ள செயற்றிட்டங்கள் உள்ளடக்கப்படும். பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரத்தக்க வீதிக் கட்டுமானம், வீடமைப்பு போன்றவை தனியார்துறையால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், நிதியை மீள உபயோகிக்கும் முறையானது சாத்தியப்படத்தக்க நெருக்கடிகளைக் குறைப்பதில் உதவும்.

நிலையான பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமானதென அடையாளங் காணப்பட்டுள்ள விவசாய மற்றும் சக்திவளத் துறைகள், சேதன விவசாய முறையை நோக்கியும், புதுப்பிக்கத்தக்க சக்திவள மூலங்களை நோக்கியும் நகர்கின்றன. அவற்றுக்குரிய பங்குதாரர்களிடமிருந்து ஒரு வகையான தடைகள் காணப்படும் அதேவேளை, பாதீட்டினூடாகவும், நிதித் துறையூடாகவும் அவற்றுக்கான மூலவளங்களை ஒதுக்குவதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு உள்ளது. எதிர்பார்க்கத் தக்க பசுமை மற்றும் நிலையான நிதி வழங்கல்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பொருளாதாரத்தின் மீதான கொவிட்-19 இன் நீடித்த தாக்கம் ஒரு முக்கியமான சவாலாக இன்னும் உள்ளதுடன், அது உள்நாட்டு வளர்ச்சிக்கு முக்கியமானதொரு தாக்கமாக உள்ளதுடன் மாத்திரமல்லாது, உலக வளர்ச்சியிலும், நுகர்வு முறைகளிலும் குறிப்பாக வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளிலும் செயற்பாடுகளின் முக்கிய பிரிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச சந்தைகளில் பண்டங்களின் குறிப்பாக எண்ணெய், நிலக்கரி மற்றும் எரிவாயு ஆகியவற்றிலான விலையுயர்வு சக்திவளத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தி, பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காலநிலையில் அதிகரித்து வரும் நிலையற்ற தன்மைகளும் இயற்கையான மற்றும் உருவாக்கப்படும் சொத்துக்களிலும். உணவுச் சங்கிலியிலும், வாழ்வாதாரங்களிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

# பாகம் II

# வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2022

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டது

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் வெளியிடப்பட்டது. இது அரசிறை உபாய கூற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன், பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சமர்ப்பிக்கப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், கொடுப்பனவு மீதி, வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளுக்கான அடிப்படை ஊகங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இதற்கமைவாக, இவ்வறிக்கையானது அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் 2021 இன் முதல் எட்டு (8) மாதங்களில் பெறுகைகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கியுள்ளதுடன், இக்காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை தொழிற்பாடுகளுக்குள் முழு மொத்த பொருளாதார நிலைமையினை விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பிரதான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை வழங்குகிறது. மேலும் இவ்வறிக்கை பொருளாதாரம் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிற ஊகங்கள் பற்றிய அடிப்படை தகவல்களை வழங்குவதுடன், இந்த ஊகங்களுடன் தொடர்பான பின்னோக்கிய இடர்வுகளும் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்களவு தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடிய பிற தகவல்களையும் கொண்டுள்ளது.

# 01

# அரசிறை அபிவிருத்திகள், திறைசேரிச் செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு

## 1.1 மேன்நோக்கு

தொற்றுநோய்க்கு முன் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட அரசிறை இடைவெளி, சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியான பலவீனமான பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து தொற்றுநோயின் பரவல் விளைவு காரணமாக 2021 இன் முதல் எட்டு மாதங்களில் மேலும் இறுக்கமடைந்துள்ளது. தொற்றுநோய்க்கு முன்பே அரசிறைத்துறை பல பலவீனங்களின் அறிகுறிகளைக் காட்டியது: 2019 ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதாசாரத்திற்கான வரி 11.6 சதவீதமாகக் குறைவாக இருந்தது; மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசிறைப் பற்றாக்குறை 9.6 சதவீதமாக விரிவடைந்தது; மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதாசாரத்தில் படுகடன்86.8 சதவீதம்; மற்றும் 18 ஆண்டுகளில் குறைந்த பொருளாதார வளர்ச்சி 2.3 சதவீதத்தினைப் பதிவு செய்தது.2020 ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி 8.1 சதவீதமாகக் குறைந்து, அரசிறைப் பற்றாக்குறை 11.1 சதவீதமாக மேலும் விரிவடைந்தது மட்டுமன்றி, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கடன் 101 சதவீதமாக உயர்வடைந்தது. அதேசமயம், பொருளாதாரத்தைப் புத்துயிர் பெறச் செய்வதற்காக 2019 ஆம் ஆண்டு நவம்பரில் அரசாங்கம் எளிமையான, வெளிப்படையான மற்றும் திறமையான வரி முறையை மிகவும் நம்பிக்கையுடன அறிமுகப்படுத்தியிருந்தது. இருப்பினும், தொற்றுநோய் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் தாமதமாகின. மாறாக, தடுப்பூசிகள் உட்பட தொற்றுநோய் தொடர்பான செலவுகள் அதிகரிக்கப்பட்டன. பணப் பரிமாற்றங்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான வரிச் சலுகைகள் (SMEs), கடன் தடைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான அதிகபட்ச சில்லறை விலைகள் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகள் புத்துயிர் பெற அரசிறை மற்றும் பண ஊக்கங்கள் செயற்படுத்தப்பட்டன. இறக்குமதிகளின் கட்டுப்பாட்டின் ஊடேகொள்கை வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டுவெளித் துறை நிலுவைகள் நிருவகிக்கப்பட்டன.கொந்தளிப்பான உலகளாவிய பொருளாதாரச் சூழ்நிலையில் தொற்றுநோயின் நீடித்த விளைவு, அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைகளில் மேலதிக அழுத்தத்தைச் செலுத்தியுள்ளது.

இத்தகைய கடினமான உள்நாட்டு மற்றும் வெளிச் சூழலுக்கு மத்தியில், 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கத்தின் வருவாய் திரட்டும் முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசின் வருவாய் 2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூ.908.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இருந்து 3.8 சதவீதம் அதிகரித்து ரூ.943.6 பில்லியனாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரி வருமானம், 2020 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூ.801.3 பில்லியனில் இருந்து 6.5 சதவீதம் அதிகரித்து ரூ.853.1 பில்லியனினைக் கொண்டிருந்தமை வருமான வரிகள், பெறுமதி சேர் வரி (VAT), துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL), வியாபாரப் பண்ட ஏற்றுமதி மானியத் திட்டம் (CESS), மற்றும் உற்பத்தித் தீர்வை ஆகியவற்றிலிருந்து அதிகரித்த வருமானத் திரட்டலைப் பிரதிபலிக்கிறது.இருப்பினும், 2021 முதல் எட்டு மாதங்களில் வரி அல்லாத வருமானம் ரூ.89.4 பில்லியனாகவும் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இவ் வருமானம் ரூ.105.0 பில்லியனாகவும் இருந்தது. இத்தகைய 14.8 சதவீத குறைவுக்கு கட்டணங்களும் அறவீடுகளும் மற்றும் வாடகையும் வட்டி வருமானமும் மற்றும் மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்கள் ஆகியவற்றின் வருவாய் வீழ்ச்சி வழிவகுத்துள்ளது. எவ்வாறாயினும்,2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நிதி மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் இருந்து இலாபங்கள் மற்றும் பங்கிலாப பரிமாற்றங்களின் அதிகரிப்பின் பயனால் அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் (SOEs) இலாபம் மற்றும் பங்கிலாபம் 81.6 சதவீதம் அதிகரித்து ரூ.14.2 பில்லியனினைப் பதிவுசெய்தது.

வருமான வரி வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.175.2 பில்லியனினைப் பதிவு செய்த அதேவேளை, இது 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.167.4 பில்லியனினை விட 4.6 சதவீத அதிகரிப்பாகும். பொருளாதார நடவடிக்கைகளின் பலமான மீட்சியைப் பிரதிபலிக்கும் வகையில் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரிகளின் வருமானம் 16.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 158.3 பில்லியனினையும் மூலதன ஈட்டுகைகளின் வரி வருமானம் 66.6 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து 2021 முதல் எட்டு மாதங்களில் ரூ.239 மில்லியனினையும் கொண்டிருந்தது.

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி வருமானம் 20.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.268.7 பில்லியனாகக் காணப்பட்டது. இதே காலப்பகுதியில் உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானம் 37.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.119.4 பில்லியனாகவும், மதுபானம், சிகரெட் மற்றும் இனிப்பு பானங்கள் போன்ற உள்நாட்டு நடவடிக்கைகளுக்கான உற்பத்தித் தீர்வை வருமானம் 11.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.149.1 பில்லியனினையும் கொண்டிருந்தன.

இறக்குமதியின் மீதான பெறுமதிசேர் வரி (VAT), சுங்க இறக்குமதித் தீர்வை (CID), செஸ் (CESS) மற்றும் துறைமுக மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL) போன்ற இறக்குமதி அடிப்படையிலான வரிகளின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் 2.4 சதவீதம் அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.371.3 பில்லியனினைப் பதிவுசெய்தது. இருப்பினும், உள்நாட்டு விலைகளின் ஸ்திரதன்மைக்கு உதவும் பொருட்டு விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு(SCL) விகிதங்களைக் குறைத்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து (SCL) சேகரிக்கப்பட்ட வருவாய் ரூ.37.8 பில்லியன் வரை 31.4 சதவீதத்தினால் குறைவடைந்தது. மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இறக்குமதிகள் தொடர்பான உற்பத்தித் தீர்வை வருமானம் 39.0 சதவீதத்தினால்வீழ்ச்சியுற்று ரூ.49.1 பில்லியனினை அடையப் பெற்றது.

வரைபு **1.1 : அரசிறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | சன - ஆகஸ் | |
|---|---|---|
| | **2020** | **2021(அ)** |
| **வருமானமும் கொடைகளும்** | **908,876** | **943,558** |
| **வருமானம்** | **906,359** | **942,491** |
| வரி | 801,340 | 853,063 |
| வரி அல்லாத | 105,020 | 89,428 |
| மானியம் | 2,516 | 1,067 |
| **செலவினம்** | **1,883,706** | **2,062,400** |
| **நடைமுறை** | **1,670,356** | **1,801,521** |
| சம்பளங்கள் | 516,354 | 564,151 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 653,498 | 700,538 |
| பிற | 500,504 | 536,833 |
| அரசாங்க முதவீடுகள் | 227,939 | 270,283 |
| பிற | -14,590 | -9,405 |
| **வருமான பற்றாக்குறை(-)/மிகை (+)** | **-763,997** | **-859,030** |
| **மொத்த வரவுசெலவுதிட்ட பற்றாக்குறை (-)/ மிகை (+)** | **-974,831** | **-1,118,842** |
| **நிதியளிப்பு** | **974,831** | **1,118,842** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | -92,289 | -183,115 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 1,067,119 | 1,301,957 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

2021 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு வரி ஏய்ப்புக்களைத் தணிக்கும் அதே வேளையில் வரி இணக்கத்தை அதிகரிக்கும் பொருட்டு வரி நிருவாகத்தை வலுப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான நிருவாக முகாமை தகவல் முறைமை (RAMIS) மற்றும் இலங்கை சுங்கத்தில் சுங்கத் தரவுகளுக்கான தானியங்கு முறைமை (ASYCUDA) மற்றும் பிரேரிக்கப்பட்டுள்ள சுங்கத் திணைக்களத்தின் ஒற்றைச் சாளரம் முறைமை போன்ற வருமான நிருவாகத் தளங்கள் விரைவான டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறைக்காக நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன. மதுவரி திணைக்களம் டிஜிட்டல் அடிப்படையிலான வருமான முகாமை முறைமையை அறிமுகப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான நிருவாகமானது, கண்காணிப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக பெரிய வரி செலுத்துவோர் பிரிவு (LTU), மேல்நிலை நிறுவனப் பிரிவு (UCU), நடுத்தர நிறுவனப் பிரிவு (MCU), மற்றும் பிராந்திய நிறுவனப் பிரிவு (RCU) ஆகியவற்றை நிறுவுவதன் மூலம் எளிதாக்கப்படுகிறது. அத்துடன், 2021 ஏப்ரல் 1, முதல் அனைத்து வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்களுக்கும் மின்-அறிக்கையிடல் (e-filing) கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு வரி தொடர்பான அனைத்து ஆதார ஆவணங்களிலும் வரி அடையாள எண்ணைப் (TIN) பயன்படுத்துவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மொத்த செலவினம் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியரூ.1,883.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில்,முக்கியமாக சம்பள சட்டமூலம் மற்றும் வட்டி கொடுப்பனவுகளுக்கான மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில்,9.5 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.2,062.4 பில்லியனினைக் கொண்டிருந்தது.2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மீண்டெழும் செலவினமானது,தடுப்பூசிகள் உட்பட தூண்டப்பட்ட கொவிட்-19 தொடர்பான சுகாதாரச் செலவினங்களுடன் இணைந்து வட்டி கொடுப்பனவுகள், சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய தொகையாகியரூ.1,670.4 பில்லியனிலிருந்து 7.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.1,801.5 பில்லியனினைக் கொண்டிருந்தது. வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டி செலுத்துதல் குறைக்கப்பட்ட போதிலும் வட்டிக்கொடுப்பனவுகள் மீதான செலவினம் ரூ.700.5 பில்லியன் வரை

7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சம்பளங்களும் ஊதியங்களும் 9.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.564.2 பில்லியனினையும், ஓய்வூதிய கொடுப்பனவுகள் 10.0 சதவீதம் அதிகரித்து ரூ.176.1 பில்லியனினையும் பதிவுசெய்தது. மேலும்,இக் காலப் பகுதியில் மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன் ரூ.260.9 பில்லியனாக 22.3 சதவீதத்தினால் உயர்ந்துள்ளது.

அட்டவணை **1.2 :மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2021**

ரூபா.பில்லியன்

| விடயம் | வருடாந்த மதிப்பி. | சன - ஆகஸ் மதிப்பிட. | சன - ஆகஸ் உண்மையான[அ] | விலகல் |
|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | **1,951.0** | **1,232.7** | **942.491** | **-290.2** |
| வரி வருமானம் | **1,724.0** | **1,117.0** | **853.1** | **-264.0** |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | | | |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 371.0 | 233.5 | 175.1 | -58.3 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய) | 200.0 | 119.9 | 119.4 | -0.6 |
| ஏனைய | 4.5 | 2.6 | 22.7 | 20.1 |
| உப மொத்தம் | **575.5** | **356.0** | **317.2** | **-38.8** |
| சுங்கத் திணைக்களம் | | | | |
| இறக்குமதி தீர்வை | 180.0 | 117.5 | 60.9 | -56.6 |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய) | 110.0 | 71.5 | 80.2 | 8.7 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 170.0 | 112.9 | 92.0 | -20.8 |
| செஸ் அறவீடு | 70.0 | 46.1 | 51.2 | 5.1 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் பிற | 110.0 | 73.1 | 37.8 | -35.3 |
| உற்பத்தி விசேட ஏற்பாடுகள் | 315.0 | 211.5 | 108.8 | -102.8 |
| சிகரெட்டுகள் | 130.0 | 87.7 | 55.2 | -32.5 |
| பெற்றோலியம் | 85.0 | 56.3 | 37.5 | -18.8 |
| மோட்டார் வாகனங்கள் | 90.0 | 60.9 | 11.6 | -49.3 |
| ஏனைய | 10.0 | 6.6 | 4.5 | -2.1 |
| ஏனைய | 2.0 | 1.3 | 0.1 | -1.2 |
| உப மொத்தம் | **957.0** | **633.9** | **431.1** | **-202.8** |
| மதுவரி திணைக்களம் | | | | |
| மதுபானம்/புகையிலை | 160.0 | 106.2 | 89.4 | -16.8 |
| உப மொத்தம் | **160.0** | **106.2** | **89.4** | **-16.8** |
| ஏனைய | | | | |
| தொலைதொடர்பு அறவீடு | 20.0 | 13.3 | 9.5 | -3.8 |
| உரிமப் பத்திர வரி மற்றும் பிற | 11.5 | 7.7 | 5.9 | -1.8 |
| உப மொத்தம் | **31.5** | **21.0** | **15.4** | **-5.6** |
| வரி அல்லாத வருமானம் | **227.0** | **115.6** | **89.4** | **-26.2** |
| மொத்த செலவினம் | **3,526.0** | **2,350.7** | **2,062.4** | **-288.3** |
| நடைமுறை செலவினம் | **2,466.0** | **1,644.0** | **1,801.5** | **157.5** |
| சம்பளங்களும் படிகளும் | 853.0 | 568.7 | 564.2 | **-4.5** |
| வட்டி கொடுப்பனவுகள் | 860.0 | 573.3 | 700.5 | **127.2** |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 250.0 | 166.7 | 176.1 | **9.5** |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 94.0 | 62.7 | 66.5 | **3.8** |
| ஏனைய | 409.0 | 272.7 | 294.2 | **21.5** |
| மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | **1,060.0** | **706.7** | **260.9** | **-445.8** |

மூலங்கள் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

## 1.2 அரசாங்க வருமானம்

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தை நோக்கின்,2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியின் ரூ.906.4 பில்லியனுடன் ஒப்பிடும் போதுரூ.942.5 பில்லியனாக 4.0 சதவீத மிதமான அதிகரிப்பினைப் பெற்றுள்ளது.மேலும் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரி வருமானம் ரூ.51.7 பில்லியன் வரை 6.5 சதவீதம் உயர்வதற்கு பின்வருவனவற்றின் அதிகரிப்பு குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கியது:

i. நிறுவனமற்றும்நிறுவனமல்லாதவருமான வரி ரூ.158.3 பில்லியன் வரை 16.1 சதவீதத்தினால்;

ii. பெறுமதிசேர் வரிரூ.199.6 பில்லியன் வரை 44.8சதவீதத்தினால்;

iii. துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடுரூ.92.0 பில்லியன் வரை 28.2 சதவீதத்தினால்;

iv. செஸ் அறவீடு ரூ.51.2 பில்லியன் வரை 63.8 சதவீதத்தினால்; மற்றும்

v. மதுபானங்கள் மீதான உற்பத்தித் தீர்வை ரூ.89.3 பில்லியன் வரை 23.2 சதவீதத்தினால்.

2021ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் தேறல், 2021 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானமாகிய ரூ.1,951 பில்லியனில் 48.3 சதவீதமாகும்.

இருப்பினும், வரி அல்லாத வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.89.4 பில்லியன் வரை14.8 சதவீதத்தினால் சரிவடைந்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வாடகை வருமானம் 69.6 சதவீதம் குறைந்து ரூ.3.0 பில்லியனாகவும் அபராதம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் 53.7 சதவீதம் குறைவடைந்துரூ.15.9 பில்லியனாகவும்,காணப்பட்டது மட்டுமன்றி மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்கள் 37.5 சதவீதத்தினால் ரூ.15.0 பில்லியனுக்கும் வட்டி வருமானம் 19.0 சதவீதத்தினால் ரூ.3.8 பில்லியன் வரையிலும்வீழ்ச்சியுற்றமை இச்சரிவுக்கு காரணமாகியுள்ளன. இருந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசுடைமைத்தொழில்முயற்சிகளின் இலாபம் மற்றும் பங்கிலாபங்களின் வருமானம் 81.6 சதவீதம் அதிகரித்து ரூ.14.2 பில்லியனாகவும், சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகளின் வருமானம் 8.9 சதவீதம் அதிகரித்து ரூ.22.6 பில்லியன் ஆகவும் காணப்பட்டது. 2021ஆம் ஆண்டின்முதல் எட்டு மாதங்களில் வரி அல்லாத வருமானத்தின் தேறல் 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடாகிய ரூ.227.0 பில்லியனில் 39.4 சதவீதமாக இருந்தது.

அட்டவணை **1.3 :அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | சன - ஆகஸ் 2020 | சன - ஆகஸ் 2021(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| வரி வருமானம் | **801,340** | **853,063** | **6.5** |
| வருமான வரி | **167,440** | **175,157** | **4.6** |
| உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி | **223,200** | **268,698** | **20.4** |
| பெறுமதிசேர் வரி | 87,148 | 119,374 | 37.0 |
| உற்பத்தி வரி | 134,297 | 149,056 | 11.0 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | **362,610** | **371,259** | **2.4** |
| சுங்கத் தீர்வை | 73,171 | 60,892 | -16.8 |
| பெறுமதிசேர் வரி | 50,644 | 80,179 | 58.3 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 71,769 | 92,033 | 28.2 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 55,141 | 37,835 | -31.4 |
| மதுவரி | 80,486 | 49,071 | -39.0 |
| செஸ் | 31,286 | 51,234 | 63.8 |
| உரிமப் பத்திர வரிகள் மற்றும் பிற | **48,090** | **37,949** | **-21.1** |
| வரி அல்லாத வருமானம் | **105,020** | **89,428** | **-14.8** |
| மொத்த வருமானம் | **906,359** | **942,491** | **4.0** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

**வரைபு 1.1 : மொத்த வருமானத்தின் வகுதிகள் (ஜனவரி - ஆகஸ்ட் 2021)**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**வரைபு 1.2 : வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (ஜனவரி - ஆகஸ்ட் 2021)**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### வருமான வரி

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி மற்றும் வட்டி வரி உட்பட வருமான வரியின் மொத்த வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.167.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதம் சற்று அதிகரித்து ரூ,175.2 பில்லியனாகவும் பொருளாதார நடவடிக்கைகளில் கூர்மையான மீட்சியின் காரணமாக 2021 முதல் எட்டு மாதங்களில் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமான வரிகளின் வருவாய் 16.1 சதவீதம் அதிகரித்து ரூ.158.3 பில்லியனாகவும் காணப்பட்டன. அதே போல்,2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மூலதன ஈட்டுகைகளின் வரி வருமானம்2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூ.144 மில்லியனிலிருந்து 66.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.239 மில்லியனினைப் பதிவுசெய்தது.

எவ்வாறாயினும், முற்பண தனியாள் வருமான வரி (APIT) வருவாய் 5.0 சதவீதம் சரிந்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.9.4 பில்லியனாக இருந்த அதே சமயம், வட்டி மீதான வரி வருமானம் 8.0 சதவீதத்தினால் குறைவடைந்து ரூ.6.8 பில்லியனினையும் கொண்டிருந்தது.முற்பண தனியாள் வருமான வரி மற்றும் வட்டி மீதான வரி ஆகிய இரண்டும் 2020,ஜனவரி 1 முதல், வதிவோருக்கு விருப்பத் தெரிவானதாக மாற்றப்பட்டுள்ளது.

### பெறுமதிசேர் வரி

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பெறுமதிசேர் வரி வருமானம்2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.137.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 44.8 சதவீதம் அதிகரித்தமைதொற்றுநோய் நன்கு நிருவகிக்கப்பட்டதன் விளைவாக இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகள் இரண்டிலும் விரைவான மீட்சியைப் பிரதிபலிப்பதாக உள்ளது. எனவே, 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளில் 64.4 சதவீத்தினை அடைந்து இந்த காலகட்டத்தில் பெறுமதிசேர் வரி வருமானம்

**அட்டவணை 1.4 :பெறுமதி சேர் வரியின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | சன - ஆகஸ் 2020 | சன - ஆகஸ் 2021(அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| உள்நாட்டு | 87,394 | 119,379 | 36.6 |
| இறக்கமதிகள் | 51,626 | 80,199 | 55.3 |
| மொத்த வருமானம் | **139,019** | **199,577** | **43.6** |
| மீளளிப்புக்கள் | 1,226 | 24 | - |
| தேறிய வருமானம் | **137,793** | **199,553** | **44.8** |
| மொத்த வருமானத்தில் மீளளிப்பு % | 0.88 | 0.01 | |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அரசாங்கத்தின் வரி வருவாயில் மிகப்பெரிய பங்களிப்பினை வழங்கியது.பெறுமதிசேர் வரி வருமான சேகரிப்பானதுவருடாந்த மதிப்பீடாகியரூ.310 பில்லியனில் 64.4 சதவீதமாகும். இதற்குக்காரணமாக, முக்கியமாக இறக்குமதிகளிலிருந்தான பெறுமதிசேர் வரி வருமானமானது2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.50.6 பில்லியனாக இருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.80.2 பில்லியனாக 58.3 சதவீதத்தினால் அதிகரித்தமையைக்குறிப்பிடலாம். 2021ஆம் ஆண்டின்முதல் எட்டு மாதங்களில் உள்நாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்படும் பெறுமதிசேர் வரி வருமானம் 37.0 சதவீதம் அதிகரித்து ரூ.119.4 பில்லியனாகவும் 2020 ஆம் ஆண்டின் இதே காலத்தில் ரூ.87.1 பில்லியனாகவும் காணப்பட்டது.

### உற்பத்தித் தீர்வை

மோட்டார் வாகனங்கள், சிகரெட்டுகள் மற்றும் பெற்றோலியப் பொருட்களில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட குறைவான வருமானம் காரணமாக. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் உற்பத்தித் தீர்வை வருமானம்2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூ.214.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதம் குறைந்து ரூ.198.1 பில்லியனினைக் கொண்டிருந்தது.உற்பத்தித் தீர்வை வருவாய் மீளாய்வுக் காலத்தில் மொத்த வரி வருமானத்தில் 23.2 சதவீதத்தினைப்பதிவுசெய்து 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 41.7 சதவீதத்தினை எட்டியது.

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மதுபானங்கள் மீதான மதுவரி மூலம் திரட்டப்பட்ட வருவாய் 2020 ஆம் ஆண்டின் அதே காலக்கட்டத்தில் ரூ.72.5 பில்லியனினை விட 23.2 சதவீதம் அதிகரித்து ரூ.89.3 பில்லியனினை அடையப்பெற்றது. பண்டிகைக் காலத்தில் தளர்த்தப்பட்ட நடமாடல் கட்டுப்பாடுகள் மற்றும் அதிகரித்த தேவை ஆகியவை இந்த எழுச்சிக்கான முக்கிய காரணங்களாகும். அதன்படி, கடின மதுபானத்தின் மீதான மதுவரி வருமானம் 20.6

வரைபு **1.3 :** உற்பத்தி வரியின் செயலாற்றுகை (ஜனவரி - ஆகஸ்ட் 2021)




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

சதவீதம் அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.62.2 பில்லியனாகவும்,2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.51.6 பில்லியனாகவும் காணப்பட்டது. அதே வகையில்,2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மாவூறல் (மோல்ட்) மதுபானத்தின் மதுவரி வருவாய் 2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூ.20.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 27.4 சதவீதம் அதிகரித்து ரூ.25.9 பில்லியனினைப் பதிவுசெய்தது.

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில்மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித்தீர்வை வருமானம் 73.2 சதவீதத்தினால்கணிசமாகக் குறைவடைந்து ரூ.11.6 பில்லியனினைக் கொண்டிருந்த அதே சமயம், இவ் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.43.2 பில்லியனினைப் பதிவுசெய்தது. முக்கியமாக வாகன இறக்குமதியில் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டுடன் மோட்டார் வாகன இறக்குமதியில் ஏற்பட்ட 72.1 சதவிகித சரிவு இதற்கு வழிவகுத்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சிகரெட் மீதான உற்பத்தி வரி வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் ரூ.58.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில்6.4 சதவீதம் சரிந்து

அட்டவணை **1.5 :**உற்பத்தி வரியின் செயலாற்றுகை

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | சன - ஆகஸ் | | |
|---|---|---|---|
| | **2020** | **2021(அ)** | **வளர்ச்சி (% )** |
| மதுபானம் | 72,503 | 89,342 | 23.2 |
| சிகரெட்டு மற்றும் புகையிலை | 58,949 | 55,196 | -6.4 |
| மோட்டார் வாகனங்கள் | 43,151 | 11,585 | -73.2 |
| பெற்றோலியம் | 37,335 | 37,486 | 0.4 |
| ஏனைய | 2,846 | 4,517 | 58.7 |
| மொத்தம் | **214,783** | **198,126** | **-7.8** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அட்டவணை **1.6 : மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு**

அலகு : எண்

| விடயம் | இறக்குமதிகள் சன - ஆகஸ் 2020 | 2021 | மாற்றம் | % | புதிய பதிவுகள் சன - ஆகஸ் 2020 | 2021 | மாற்றம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மோட்டார் கார்கள் | 9,684 | 72 | -9,612 | -99 | 19,007 | 2,626 | -16,381 | -86 |
| சிற்றூர்தி பேருந்துகள் | 215 | 4 | -211 | -98 | 743 | 246 | -497 | -67 |
| முச்சக்கர வண்டிகள் | 4,774 | 2,002 | -2,772 | -58 | 6,610 | 2,062 | -4,548 | -69 |
| மோட்டார் சைக்கிள்கள் | 70,181 | 1,110 | -69,071 | -98 | 135,270 | 5,662 | -129,608 | -96 |
| பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள்[அ] | 5,827 | 1,744 | -4,083 | -70 | 2,650 | 2,737 | 87 | 3 |
| நில வாகனங்கள் | 1,268 | 12,877 | 11,609 | 916 | 4,595 | 8,846 | 4,251 | 93 |
| ஏனைய[ஆ] | 7,088 | 9,144 | 2056 | 29 | 9,054 | 600 | -8,454 | -93 |
| மொத்தம் | **99,037** | **26,953** | **-72,084** | **-73** | **177,929** | **22,779** | **-155,150** | **-87** |

மூலங்கள் : இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) லொறிகள், ஏனைய பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்க வாகனங்கள்
(ஆ) இருநோக்க வாகனங்கள் உள்ளடங்கலாக

ரூ.55.2 பில்லியனினை அடையப்பெற்றது. மறுபுறம் சிகரெட் விற்பனையைப் பொறுத்தளவில்,குறைந்த விலைகளின் வகைகளுக்கு புகை பிடிப்பாளர்களின் தெரிவு மாறியமையால், 2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 1,469 மில்லியன் கூறுகளில் இருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 3.5 சதவிகிதம் அதிகரித்து, 1,521 மில்லியன் கூறுகளாக உயர்ந்துள்ளது.

அதேசமயம், 2021 ஆம் ஆண்டின்முதல் எட்டு மாதங்களில் பெற்றோலியப் பொருட்களின் வருமானமானது2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில்,ரூ.37.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது 0.4 சதவீதத்தினால் சற்றுக் குறைவடைந்து ரூ.37.3 பில்லியனாகக் காணப்பட்டது.இருப்பினும், இனிப்புப் பானங்கள், பாம் எண்ணெய் கொழுப்பமிலம் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளிட்ட பிற பொருட்களின் மீதான உற்பத்தி வரி வருமானம் 2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவாகிய ரூ.2.8 பில்லியனினை விடவும் 58.7 சதவீதத்தினால்கணிசமாக அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.4.5 பில்லியனினைக் கொண்டிருந்தது.

### சுங்க இறக்குமதித் தீர்வை

2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் தொகையாகிய ரூ.73.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்தான வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 16.8 சதவீதம் குறைவடைந்து ரூ.60.9 பில்லியனினைக் கொண்டிருந்தது.இந்தச் சரிவுக்கு முக்கியமாக 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்ப வரி கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்பிற்கான திருத்தம், பெற்றோல்,டீசல், கோதுமை தானியம் மற்றும் பால்மா ஆகியவற்றின் இறக்குமதிக்கு வழங்கப்பட்ட பொதுவானதீர்வைத் தளர்வுகள், கருத்திட்டம் தொடர்பான பொருட்களுக்கு வழங்கப்பட்ட வரி விலக்குகள் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செயல்படுத்தல் போன்றவை காரணமாக அமைந்துள்ளன.

அட்டவணை **1.7 :சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி.'. இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சன - செப் 2021: தீர்வை சலுகை வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை | இறக்குமதி பெறுமதி (CIF /ரூபா.மில்லியன்) | ஏற்றுமதி பெறுமதி (FOB/ரூ. மில்லியன்) |
|---|---|---|---|
| இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 5,145 | 31,257 | 76,417 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 5,987 | 1,995 | 10,900 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) | 6,027 | 1,341 | 14,124 |
| ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 781 | 4,592 | 39,350 |
| மொத்தம் | **17,940** | **39,185** | **140,791** |

மூலம் : வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

**விசேட வியாபாரப் பண்ட அறவீடு**

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் வருமான சேகரிப்பு 31.4 சதவீதத்தினால் கணிசமான வீழ்ச்சியைப் பெற்று 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.37.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. முக்கியமாக சீனி, தகரத்திலடைக்கப்பட்ட மீன்,மற்றும் தேங்காய் போன்ற பொருட்களின் மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதத்தினைக் குறைத்தமை மற்றும் பருப்பு,மக்கரல் மீன், கருவாடு, மாசிக்கருவாடு, பட்டாணி, கொண்டைக்கடலை மற்றும் குரக்கன் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட தீர்வை நீடிப்பின் விளைவாக இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**ஏனைய வரிகள்**

துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு **:** 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியரூ.71.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 28.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.92.0 பில்லியனினைப் பதிவுசெய்தது. பெற்றோலியப் பொருட்கள்,சீமெந்துக் கிளிங்கர், உருக்கு, மூலப்பொருட்கள் மற்றும் பிற நுகர்பொருட்களின் சர்வதேச விலைகளின் அதிகரிப்புடன், அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டினதும்அதிகரிப்பின் தாக்கம் இதற்கு முக்கியமாக வழிவகுத்துள்ளன.

அட்டவணை **1.8 : சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | சன - ஆகஸ்ட் 2020 | சன - ஆகஸ்ட் 2021 |
|---|---|---|
| ஏற்றுமதிகள் மீதான செஸ் | **1,224** | **1,757** |
| தேயிலை - தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் | 272 | 340 |
| இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ் | 4 | 6 |
| தேங்காய் - தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 129 | 122 |
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம் | 819 | 1,289 |
| இறக்குமதிகள் மீதான செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | **30,062** | **49,477** |
| மொத்தம் | **31,286** | **51,234** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

அட்டவணை **1.9 :தேச கட்டுமான வரி, முத்திரை வரி மற்றும் மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் செயலாற்றுகை**

ரூபா. மில்லியன்

| விடயம் | 2020 சன - ஆகஸ் | | | 2021 சன - ஆகஸ் | | | % மாற்றம் 2020/2021 சன - ஆகஸ் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ம.அ. | மா.ச. | மொத்தம் | ம.அ. | மா.ச. | மொத்தம் | ம.அ. | மா.ச. | மொத்தம் |
| முத்திரை வரி* | – | 4,374 | **4,374** | – | 3,145 | **3,145** | – | (28.1) | -28.1 |
| மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள்** | 372 | 869 | **1,241** | 168 | 392 | **224** | (54.9) | (54.9) | -82.0 |
| மொத்தம் | **372** | **5,243** | **5,615** | **168** | **3,537** | **3,369** | (54.9) | (32.5) | -40.0 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

*2011 ஆம் ஆண்டில் இருந்து மத்திய அரசாங்கத்தினால் முத்திரை வரியில் இருந்து திரட்டப்பட்ட வருமானத்தில் 100 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

** மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் மூலம் மத்திய அரசாங்கத்தினால் திரட்டப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

குறிப்பு : ம.அ = மத்திய அரசாங்கம், மா.ச = மாகாண சபைகள்

**தொலைதொடர்பு அறவீடு:** உள்ளூர் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அழைப்புக்கள் ஆகிய இரண்டினதும் கால அளவு அதிகரித்ததன் விளைவாக 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த தொலைதொடர்பு அறவீட்டு வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் அடையப்பெற்ற வருமானமாகியரூ.8.8 பில்லியனினை விடவும் 8.8 சதவீதத்தினால் அதிகரித்துரூ.9.5 பில்லியனினைப் பதிவுசெய்தது.

**செஸ் அறவீடு:** 2021 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் செஸ் அறவீட்டு விகித திருத்தங்களின் பயனால் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் செஸ் அறவீட்டு வருமானமானது, 2020 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூ.31.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 64.6 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இறக்குமதி மீதான செஸ் வருமானமானது,2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் தொகையாகியரூ.30.1 பில்லியனினை விடவும்64.6 சதவீதம் அதிகரித்து ரூ.49.5 பில்லியனினைக் கொண்டிருந்தது. ஏற்றுமதிகள் மீதான செஸ் வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.1.8 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை, இது 2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூ.1.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது 43.6 சதவீத அதிகரிப்பாகும்.

### வரி அல்லாத வருமானம்

மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்கள், விற்பனைகள் மற்றும் கட்டணங்கள், வட்டி வருமானம் மற்றும் வாடகை வருமானம் ஆகியவற்றின் வருமான வீழ்ச்சியின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரி அல்லாத வருமானம் ரூ.89.4 பில்லியன் வரை 14.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் இவ் வருமானம்,2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.105.0 பில்லியனினைப் பதிவுசெய்தது.2020 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின்ரூ.9.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் வாடகை வருமானம் 69.6 சதவீதத்தினால் குறைவடைந்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.3.0 பில்லியனினைக் கொண்டிருந்தது.மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்கள் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.24.0 பில்லியனுடன் ஒப்பிடும்போது37.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ.15.0 பில்லியனினைக் கொண்டிருந்தஅதேசமயம், அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மற்றும் வட்டி வருமானம் ஆகியவை முறையே 53.7 சதவீதம் குறைவடைந்து ரூ.15.9 பில்லியனினையும் 19.0 சதவீதத்தால் குறைந்து ரூ.3.8 பில்லியனினையும் பதிவுசெய்தது.

எவ்வாறாயினும்,2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது முக்கியமாக, நிதித்துறையின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக 2020 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூ.7.8 பில்லியனினை விட 81.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.14.2 பில்லியனினைக் கொண்டிருந்தது.மேலும், சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகளிலிருந்தான வருமானம் 8.9 சதவீதம் அதிகரித்து 2021 முதல் எட்டு மாதங்களில் ரூ.22.6 பில்லியனாக இருந்தது.

அட்டவணை 1.10**: அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு(2021 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை)**

| விடயம் | ரூபா. பில்லியன் 2020 (ஜனவரி-ஆகஸ்ட்) | 2021 வருடாந்த மதிப்பீடு | 2021(ஜனவரி-ஆகஸ்ட்) (தற்காலிக) | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | 167.4 | 371.0 | 175.2 | வருமான வரி வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.175.2 பில்லியனாகவும் 2021 இன் வருடாந்த மதிப்பீட்டில் இத் தொகை 47.2 சதவீத தேறலாகவும் காணப்பட்டது. சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்ட தொற்றுநோயுடன் பொருளாதார நடவடிக்கைகள் வேகமாக மீட்சி பெற்றதே இதற்கு முக்கிய காரணமாகும்.நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி வருவாய் ரூ.158.3 பில்லியனாக அதிகரித்துள்ளது. மூலதன ஈட்டுகை வரியின் வருமானமும் ரூ.239 மில்லியன் வரை அதிகரித்தது. இருப்பினும், வேலைவாய்ப்பு வருமானம் மற்றும் வட்டி மீதான வரி வருவாய் முறையே ரூ.9.4 பில்லியனாகவும் ரூ.6.8 பில்லியனாகவும் காணப்பட்டது. |

| விடயம் | ரூபா. பில்லியன்<br>2020 (ஜனவரி-ஆகஸ்ட்) | 2021 வருடாந்த மதிப்பீடு | 2021(ஜனவரி-ஆகஸ்ட்) (தற்காலிக) | காரணம் |
|---|---|---|---|---|
| பெறுமதிசேர் வரி | 137.8 | 310.0 | 199.6 | 2021 இன் முதல் எட்டு மாதங்களில் பெறுமதிசேர் வரி வருமானம் ரூ.199.6 பில்லியன் வரை கணிசமாக அதிகரித்து 2021 ஆண்டு மதிப்பீட்டில் 64.4 சதவிகிதத்தினைத் தேறியுள்ளது.முக்கியமாக இறக்குமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளின் அதிகரிப்பு இதற்குக் காரணமாகும். உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானம் முறையே 37.0 சதவீதம் அதிகரித்து ரூ.119.4 பில்லியனாகவும், 58.3 சதவீதம் அதிகரித்து ரூ.80.2 பில்லியனாகவும் காணப்பட்டது. |
| உற்பத்தித் தீர்வை | 214.8 | 475.0 | 198.1 | 2020, மார்ச் முதல் மோட்டார் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காரணமாக உற்பத்தித் தீர்வையிலிருந்தான வருமான திரட்டல் 2021 இன் முதல் எட்டு மாதங்களில் 7.8 சதவீதம் குறைவடைந்து ரூ.198.1 பில்லியனினைக் கொண்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 41.7 சதவிகிதத்தினைத் தேறியுள்ளது.சிகரெட் மீதான உற்பத்திவரி வருவாய் 6.4 சதவீதம் அதிகரித்து ரூ.55.2 பில்லியனினைப் பதிவு செய்தது. மீளாய்வுக்குரிய காலத்தில் மொத்த கூறுகள் விற்பனை 3.5 சதவிகிதம் அதிகரித்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட கூறு விற்பனையை உயர்தர வகைகளில் இருந்து குறைந்த விலை வகைக்கு மாற்றியமை சிகரெட் வருமானத்தை எதிர்மறையாக பாதித்தது.மேலும், மேம்படுத்தப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதியால் பெற்றோலியப் பொருட்களின் மீதான உற்பத்தி வரி வருவாய் 0.4 சதவீதம் அதிகரித்து ரூ.37.5 பில்லியனினைக் கொண்டிருந்தது. இருப்பினும், மதுபானங்களின் வருவாய் 23.2 சதவீதம் அதிகரித்து ரூ.89.3 பில்லியனினையும், பிற உற்பத்திகளின் வருவாய் திரட்டலானது உற்பத்தி வரி வருவாய் 58.7 சதவீதம் அதிகரித்து ரூ.4.5 பில்லியனினை அடையவும் பங்களிப்பு வழங்கியுள்ளது. |
| சுங்க இறக்குமதித் தீர்வை | 73.2 | 180.0 | 60.9 | இறக்குமதித் தீர்வை வருமானம் சேகரிப்பு குறிப்பிடத்தக்க வகையில் சரிந்து 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.60.9 பில்லியன்களைக் கொண்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் இது 33.8 சதவிகிதமாகும். உள்ளூர் சந்தையில் நுகர்வோர் மீதான சுமையை குறைக்கும் வகையில், பெற்றோல், டீசல் மற்றும் பால் மா போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் விலை மாற்றங்கள் இந்த மந்தமான செயல்திறனுக்கு முக்கியமாக காரணமாகின. |
| துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 71.8 | 170.0 | 92.0 | துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்தானவருமான சேகரிப்பு 28.2 சதவீதத்தினால்ரூ.92.0 பில்லியன் வரை அதிகரித்து,ஆண்டு மதிப்பீட்டில் 54.1 சதவீதத்தைத் தேறியுள்ளது.இறக்குமதியில் 30.7 சதவீத அதிகரிப்பு மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதித் தேய்வு ஆகியவை இதற்கு முக்கிய காரணமாகும். |

| | ரூபா. பில்லியன் | | | |
|---|---|---|---|---|
| விடயம் | 2020 (ஜனவரி-ஆகஸ்ட்) | 2021 வருடாந்த மதிப்பீடு | 2021(ஜனவரி-ஆகஸ்ட்) (தற்காலிக) | காரணம் |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 55.1 | 110.0 | 37.8 | 2021 இன் முதல் எட்டு மாதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் 31.4 சதவீதம் குறைவடைந்து ரூ.37.8 பில்லியனாக இருந்ததுடன் அதன் வருடாந்த மதிப்பீட்டில் 34.4 சதவீதத்தை எட்டியுள்ளது.முக்கியமாக சீனி, பெரிய வெங்காயம்,தேங்காய் எண்ணெய் மற்றும் பருப்பு போன்ற பொருட்களின் சில்லறை விலை உயர்வைத் தடுக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் விலைக் குறைப்பு இதற்கு வழிவகுத்துள்ளது. |
| ஏனைய வரிகள் | 81.2 | 108.0 | 89.5 | 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஏனைய வரிகள் மூலமான வருமான சேகரிப்பு 10.1 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூ.89.5 பில்லியனினைக் கொண்டிருந்தது. இது 2021 ஆண்டு மதிப்பீட்டில் 82.8 சதவிகித தேறலாகும்.2021 வரவுசெலவு திட்டத்திற்கு ஏற்ப செஸ் விகிதங்கள் அதிகரிக்கப்பட்டதன் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் செஸ் அறவீட்டிலிருந்தான வருமானம் 63.8 சதவீதம் அதிகரித்து ரூ.51.2 பில்லியனினை அடையப்பெற்றது.உள்வருகை மற்றும் வெளிச் செல்லல் அழைப்புக்களின் கால அளவு அதிகரிப்பு காரணமாக தொலைத்தொடர்பு அறவீடு ரூ.9.5 பில்லியன் வரை 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. |
| வரி அல்லாத வருமானம் | 105.0 | 227.0 | 89.4 | 2021 இன் முதல் எட்டு மாதங்களில் வரி அல்லாத வருமானம் 14.8 சதவீதத்தினால் கணிசமாகக் குறைந்து ரூ.89.4 பில்லியனினையும் 2021 ஆண்டு மதிப்பீட்டில் 39.4 சதவிகித தேறலையும் அடைந்திருந்தது. வாடகை மற்றும் வட்டி வருமானம், மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்கள் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தினால் ஏற்பட்ட கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் சரிவு இதற்குக் காரணமாகும்.எவ்வாறாயினும், அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களிலிருந்து அதிகரித்த வருமான வரவுகள் ரூ.14.2 பில்லியன், சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் ரூ.22.6 பில்லியன், மற்றும் பிற வரி அல்லாத வருமானம் ரூ.15.0 பில்லியன் ஆகியவை வரி அல்லாத வருவாயில் சாதகமான பங்களிப்பை வழங்கியது. |
| மொத்தம் | **906.4** | **1,951.0** | **942.5** | |

தொகுப்பு: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்** | |
| **2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்** | |
| **வருமான வரி விலக்களிப்புக்கள்** | |
| 01.04.2021 | – கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட இலங்கை ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியத்திற்கு (SLREIT) விற்கப்பட்ட, பரிமாற்றம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட காணிகள் அல்லது கட்டடங்கள் தேறல் மூலம் நபரொருவரினால் பெறப்பட்ட ஈட்டுகைகள்.<br><br>– இலங்கை ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியத்தின் ஏதேனுமொரு அலகு உரிமையாளரினால் முதலீடு அல்லது வியாபாரமொன்றின் மூலதனச் சொத்தொன்றின் தேறல் மூலம் ஈட்டப்பட்ட தொகைகள் அல்லது அலகுகளின் தேறல் முலமான பங்கிலாபங்கள். மற்றும் ஈட்டுகைகள்.<br><br>– ஏதேனுமொரு நலன்புரி அமைப்பினால் பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி (அங்கத்தவர்களின் சேமிப்பினை ஊக்குவிக்கின்ற நல நிதியம் உள்ளடங்கலாக).<br><br>– பல்தேசிய கம்பனியொன்றினால் ஏதேனும் உள்நாட்டு வங்கியொன்றில் மதிப்பீட்டாண்டிற்காக, அதன் இறக்குமதிச் செலவினத்தினை மேற்கொள்ளும் வகையில் வெளிநாட்டு நாணயத்தில் வைப்புச்செய்யப்பட்டு திறக்கப்பட்டு, பேணப்படுகையில், அத்தகைய வைப்பு மூலமாக பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி.<br><br>– இலங்கை அரசாங்க திறைசேரி உத்தரவாதங்களை அடிப்படையாகக் கொண்டு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் சமுர்த்தி சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளினால் ஈட்டப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி அல்லது தள்ளுபடிகள்.<br><br>– 2021, ஏப்ரல் 01ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஐ.அ.டொ.100 மில்லியனினை விஞ்சாத திரட்டிய முதலீடு ஒன்றினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை சர்வதேச அரசிறையாண்மை முறிகள் மீது மேற்கொண்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் ஈட்டப்பட்ட அல்லது உழைக்கப்பட்ட மற்றும் தேறல் மூலம் கிடைக்கப்பெறுகின்ற ஈட்டுகைகள்.<br><br>– தங்கம், இரத்தினக் கற்கள்அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதியிலிருந்து அல்லது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு பட்டைத்தீட்டி மெருகூட்டி அவற்றினை ஏற்றுமதிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ள வியாபாரமொன்று, அவ்வாறு, தங்கம், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களை பட்டை தீட்டி, மெருகூட்டி மீள ஏற்றுமதிசெய்வதன் மூலம் ஈட்டிய அல்லது உழைத்த இலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள், வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்டு, அவை உள்நாட்டு வங்கிக் கணக்கொன்றுக்கு அனுப்பப்படுகையில்.<br><br>– தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கருத்தாக்கத்தின் கீழ் தரப்படுத்தப்பட்ட மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனுமொரு தொழிற்கல்வித் திட்டத்திலிருந்து ஏதேனுமொரு தொழிற்கல்வி நிறுவனத்தினால் குறித்த அத்தகைய பெறப்பட்ட அல்லது ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள் பெறுமெனில், அத்தகைய நிறுவனம் தமது மாணவர் ஆட்சேர்ப்பினை முந்தைய ஆண்டின் மாணவர் ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் ஒப்பிடும்போது குறித்த மதிப்பீட்டு ஆண்டிற்காக இரட்டிப்பாக்கி, பேணுமெனில். மேற்குறித்த நோக்கத்திற்காக ஐந்து வருட கால விலக்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.<br><br>– இலங்கையில் வணிகத்தை மேற்கொள்ளும் வதியாதோர் கம்பனியொன்று இலங்கை நிரந்தர ஸ்தாபனத்தின் மூலம் இலாபங்களையும் வருமானத்தையும் ஈட்டி, அத்தகைய மொத்த இலாபத்தை தக்க வைத்து, இலங்கையில் அதன் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக குறைந்தபட்சம் மூன்று ஆண்டு காலம் முதலீடு செய்யுமெனில் அல்லது கொழும்பு பங்குச் சந்தையில் இருந்து ஏதேனும் பங்குகளை அல்லது ஏதேனும் திறைசேரி உண்டியல்களை பெறுவதற்காக அல்லது ஏதேனும் திறைசேரி முறிகளை, அல்லது இலங்கை சர்வதேச இறையாண்மை முறிகளைப் பெறுவதற்காக பயன்படுத்துமெனில், அத்தகைய வதிவல்லாக் கம்பனிக்கு பணவனுப்பல் வரி (பணவனுப்பல் இலாபத்தின் பேரில்14 சதவிகிதத்தில்) செலுத்த வேண்டியது அவசியமில்லை. அத்தகைய விலக்களிப்பானது மூன்று ஆண்டுகளுக்கு ஏற்புடையதாகும். |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் | |
|---|---|---|
| **வரி விடுமுறைகள்** | | |
| 01.04.2021 | பின்வரும் புதிய வியாபாரங்கள் மூலம் பெறப்படுகின்ற அல்லது ஈட்டப்படுகின்ற ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களுக்காக (மூலதன ஈட்டுகைகள் நீங்கலாக) வரி விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக இந்த வியாபாரம் இரண்டு வருட காலத்திற்கு முன்னெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>– கட்டுமானத் துறையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக இலங்கையில் நிறுவப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தனித் தளத்தில் மீள்சுழற்சிசெய்யப்பட்ட கட்டுமானப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பத்து ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>– மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குறுத்தப்பட்டு, தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சிக் கருத்தாக்கத்தின் கீழ் நியமமான ஏதேனும் நிறுவனமொன்றிலிருந்து தொழிற்கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் தனிநபர் ஒருவரினால் 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் வணிகமொன்றிற்காக ஐந்து ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>– இலங்கையில் வதிவோர் ஒருவரினால் படகுகள் அல்லது கப்பல்களைக் கட்டும் பணியினை ஆரம்பித்து அதன் மூலம் ஏதேனும் ஆதாயங்கள் அல்லது இலாபங்கள் பெறப்படுகையில் அல்லது ஈட்டப்படுகையில் அத்தகைய பணியினைப் பொறுப்பேற்கையில் ஏழு ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>– நூற்றுக்கும் குறையாத மெகா வோட் சூரிய அல்லது காற்றலை மின் சக்தியினை உற்பத்திசெய்யும் ஆற்றல் கொண்ட ஏதேனுமொரு "புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருத்திட்டம்" தாபிக்கப்பட்டு, அத்தகைய சக்தி மூலம் தேசிய வலைப்பின்னலுக்கு மின்சக்தி வழங்கப்படுகையில் ஏழு ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>– உள்நாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, வதிவோரொருவர் தகவல்தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணித்து அதனோடு தொடர்புபற்ற உபகரணங்களை நிறுவி அல்லது அத்தகைய கட்டுமானத்திற்கு தேவையான தொழில்நுட்ப சேவைகளை இலங்கையில் வழங்குவது தொடர்பில், 2021 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அத்தகைய நிருமாணம் அல்லது பொருத்துகைக்காக ஐந்தாண்டுகள் வரி விலக்களிக்கப்படும். | |
| **சலுகை ரீதியான வரி விகிதங்கள்** | | |
| 01.04.2021 | – இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண விற்பனையின் போது தனிநபர்கள் மீது அதிகபட்சம் விகிதமாக 14சதவீதத்திலும் கம்பனிகளுக்கு தள விகிதமாக 14 சதவீதத்திலும் வரி விதித்தல்.<br>– புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட எரிசக்தியினை தேசிய வலைப்பின்னலுக்கு வழங்குதன் பேரில் பெற்றுக் கொள்ளும் தொகைகக்கு தனிநபர்களுக்காக அதிகபட்சம் 14 சதவீதத்திலும் கம்பனிகளுக்கு தள விகிதமாக 14 சதவீதத்திலும் வரியினை ஏற்புடையதாக்கல்.<br>– 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் மூன்று மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக (2022/2023 முதல் 2024/2025வரை) 2021 சனவரி 01 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியின் போது கொழும்புப் பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் அதன் பங்குகளை பட்டியற்படுத்துகின்ற ஏதேனுமொரு கம்பனி மீது 14 சதவீத வரி விகிதம் ஏற்புடமையாக்கப்படுகிறது. | |
| **வரிப் பொறுப்புடமையினைக் குறைத்தல்** | | |
| | **வருமானம்** | **வரி குறைப்பு** |
| 01.04.2021 | 2021/2022 மதிப்பீட்டு ஆண்டிற்கான இலங்கை பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் உரிமம் வழங்கப்பட்டு கொழும்புப் பங்குச் சந்தையில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னரும் ஆனால் 2021 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் அதன் பங்குகளைப் பட்டியற்படுத்துகின்ற ஏதேனும் கம்பனியொன்றினால் (முதலீட்டுச் சபைக் கம்பனிகள் உள்ளடங்கலாக ஆனால் முதலீட்டுச் சொத்துக்களின் தேறலில் இருந்தான ஈட்டுகைகள் நீங்கலாக) செலுத்தத்தக்க திரட்டிய வருமான வரி மீது. | 50% |
| | பன்னாட்டுக்கம்பனியொன்றினால் பெறப்பட்ட பங்கிலாப வருமானத்துடன் தொடர்புடைய வரிப் பொறுப்புடைமை மீது. | |
| | (i) 2020/2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021/2022 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதிகள் குறைந்தபட்சம் 30 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில், | 25% |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் | |
|---|---|---|
| 01.04.2021 | (ii) 2021/2022 ஆம் ஆண்டுடன் உடன் ஒப்பிடுகையில் 2022/2023நிதியாண்டில் ஏற்றுமதிகள் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில். | 50% |
| | (iii) 2020/2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றமதிகள் 2023/2024 ஆம் ஆண்டில் மேலே(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அல்லது 2023/2024 ஆம் ஆண்டுக்காக அதே அளவில் பேணப்படுகையில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில். | 50% |
| | பண்ணைச் செயற்பாடொன்றின் மூலம் உற்பத்திசெய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் அதே உற்பத்தியாளரினால் தயாரிப்பு அல்லது பதப்படுத்தல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப் படுமாயின், அவற்றுடன் தொடர்புபற்ற வரிப் பொறுப்பின் மீது. | 25% |
| **மதிப்பிடத்தக்க வருமானத்தினைக் கணிப்பீடு செய்கையில் கழிப்பனவுகள்** | | |
| 01.04.2021 | – சந்தை ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் அல்லது விளம்பரப் பிரச்சாரங்களின் தயாரிப்பு, பிரதான ஊடகங்களில் அல்லது சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தல், உற்பத்தியினை அறிமுகப்படுத்தல் அல்லது பிரச்சாரம் மற்றும் செயலாக்கம், விற்பனைப் புள்ளியில் பொருட்களின் மேம்பாடு அல்லது அச்சிடல் ஆகியவை மூலதன அல்லது வருவாய் இயல்பினைக் கொண்டிருந்தாலும் வியாபாரத்திலிருந்தான வருமானத்தினைக் கணிக்கும் போது கழிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறது.<br>– தொழிற்பயிற்சிப் பாடநெறியொன்றினைப் பூர்த்திசெய்ததன் பின்னர் இளைஞர் மற்றும் யுவதிகளினால் ஆரம்பிக்கப்படுகின்ற வியாபார நடவடிக்கையொன்றுக்காக ஆரம்ப கட்ட மூலதனமாக வழங்கப்பட்ட ஏதேனும் கடன்கள், அத்தகைய நிதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நிதிச் செலவுகள், அத்தகைய நிதி நிறுவனங்களுக்கான விலக்களிப்புச் செலவாக கருதப்படும்(இது 5 வருட வரி விடுமுறைக்காக தகுதிபெறுகின்றது). | |
| **புதிய தகைமைக் கொடுப்பனவுகள்** | | |
| 01.04.2021 | – சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் உறுதிசெய்யப்பட்டு அறிவுறுத்தல்களுக்கு அமைய சமுர்த்திப் பயனாளிக் குடும்பமொன்றினைச் சேரந்த பெண் தனி நபரொருவருக்கு கடையொன்றினைத் தாபிப்பதற்காக வதிவோர் ஆளொருவரினால் பணம் மூலம் அல்லது வேறுவிதமாக மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு.<br>– நிதி நிறுவனமொன்றினால் வேறேதும் நிதி நிறுவனமொன்றினைப் பற்றுகையில் அல்லது கூட்டிணைக்கையில்,எல்லா விடயங்களும் ஒவ்வொன்றாக விடயத்திற்கு விடய அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கண்டறியப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பற்றுகை அல்லது கூட்டிணைப்பில் ஏற்பட்ட செலவினம். மொத்தமாக கழிக்கப்படக் கூடிய செலவினமானது, மூன்று வருட காலப்பகுதிக்காக சமதொகைகளாகப் பிரிக்கப்பட்டு, மதிப்பிடத்தக்க வருமானத்திலிருந்து மொத்தத் தகைமைக் கட்டணம் வரையில் கழிக்கப்படுதல் வேண்டும்.<br>– ஏதேனும் திரைப்படமொன்றின் உற்பத்திச் செலவினம் ரூபா ஐந்து மில்லியனை விஞ்சாதிருப்பின் (அத்தகைய திரைப்படத்தின் விளம்பரச் செலவு உள்ளடங்கலாக) தயாரிக்கப்படுமெனில் அல்லது சினிமாக் கொட்டகையொன்றினை புதிதாக நிருமாணிததல், அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கல் என்பன ரூபா இருபத்து ஐந்து மில்லியனினை விஞ்சாதிருப்பின் அல்லது சினிமாக் கொட்டகையென்றின் புனரமைப்புச் செலவினம் ரூபா பத்து மில்லியனுக்கு மேற்படாதிருப்பின். கழிப்பனவானது ஆண்டின் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டு அடுத்து வரும் ஆண்டுக்காக முன்கொண்டு செல்லப்படமுடியும். | |
| **"குறிப்பீடுசெய்யப்பட்ட பொறுப்பேற்புக்கள்" எனக் கருதுதல்** | | |
| 01.04.2021 | பின்வரும் வியாபாரங்கள் 14சதவிகிதத்திற்கு ஏற்புடடையதான குறிப்பீடுசெய்யப்பட்ட பொறுப்பேற்புக்கள் என கருதப்படுகின்றன:<br>– குறிப்பீடுசெய்யப்பட்ட துறைமுக வளாகமொன்றினுள் உள்நாட்டு பங்கர் வழங்குநர்களுக்கு கப்பல் எரிபொருள் வழங்குவது உட்பட கப்பல் எரிபொருள் வழங்குவதற்காக வழங்கப்பட்ட பங்கரின் சேவைகள்<br>– 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ள, ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டுள்ள கம்பனியொன்றினால் இலங்கையில தயாரிக்கப்பட்ட பொருட்களை பின்வருவனவற்றிற்கு விற்பனை செய்கையில், | |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.04.2021 | (அ) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க. மூலோபாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரி விடுமுறையினை பெற்றுள்ள ஏதேனும் கம்பனியொன்று உட்பட,1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ், இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளதும்மற்றும் அதன் கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் அத்தகைய ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரித் தீர்வையற்ற முறையில் மூலப் பொருட்களை அல்லது கருத்திட்டம் சார்ந்த பொருட்களை இறக்குமதிசெய்ய கருத்திட்ட அமுலாக்கல் காலத்தில் அனுமதி பெற்றுள்ள ஏதேனுமொரு கம்பனி; அல்லது<br>(ஆ) ஏதேனும் அரசாங்க அதிகாரத்தின் கீழ் குறிப்பிட்ட சில பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு தகுதிபெறுகின்ற, எனினும் 2021 ஏப்ரல் 1 இல் தொடங்கி 3 ஆண்டுகளுக்குள் இறக்குமதி மாற்றீடாக முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அளவு வரை, எவரேனும் ஆளொருவருக்கு. |
| **வரி ஊக்குவிப்புக்கள் மற்றும் தற்காலிக சலுகைகளிலான மாற்றங்கள்** | |
| 01.04.2021 | – 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கின்ற மூன்றாண்டு காலப்பகுதிக்காக ரூபா 500 மில்லியன் வரையறையொன்றுடன் செலவினத்தின் 100சதவீத மேலதிக கழிப்பனவு வழங்கப்படும். ஆயினும், குறித்த செலவினமானது 2021/2022 முதல் 2023/2024 வரையிலான மூன்று வருடங்களின் போது ஆகக் குறைந்தது 65சதவீத உள்நாட்டுப் பெறுமதிச் சேர்க்கையுடன் பொருள் அல்லது சேவைக்குக் காரணமாக அமைதல் வேண்டும்.<br>– குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் கட்டிடம் கட்டுவது அல்லது சிறிய வேலை செய்வதுமேம்படுத்தப்பட்ட மூலதன கொடுப்பனவு நோக்கத்திற்காகபரிசீலிக்கப்படும்.<br>– உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஆறாவது அட்டவணையின் கீழ் ஐ.அ.டொ.3 மில்லியன் வரையிலான புதிய முதலீடுகள் தொடர்பில் அதிகரித்த மூலதன கொடுப்பனவுகளை கோருவதற்கான செல்லுபடியான காலம் அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளமை.<br>– 2021/2022 முதல் 2022/2023 வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினத்தின் மீது மேலதிக 100 சதவீத கழிப்பனவு வழங்கப்படுகிறது. |
| **வதிவோர் தனிநபர்களுக்குரான வரி நிவாரணங்கள்** | |
| 01.04.2021 | – சூரிய கலத்தில் முதலீடு செய்யும் தனிநபர்களுக்கு அதிகபட்ச குறைப்பாக ஆண்டொன்றுக்கு ரூபா 600,00 நிவாரணம் வழங்கப்படும். முதலீடானது வங்கிக் கடன் மூலம் நிதியளிப்புச் செய்யப்படமுடியும் என்பதோடு, இது போன்ற சந்தர்ப்பங்களில் நிவாரண நோக்கங்களுக்காக கடன் மீள்கொடுப்பனவு பரிசீலிக்கப்படும். |
| **வரி நிருவாக ஏற்பாடுகளுக்கான மாற்றங்கள்** | |
| 01.04.2021 | – ஒற்றை மூலதன ஈட்டு வரி வருமானத்தினை தாக்கல் செய்ய அனுமதித்தல் (மாதத்தின் அனைத்து மூலதன ஈட்டுகை கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியது) தேறல் நிகழ்ந்த இயைபான பஞ்சாங்க மாதத்தின் முடிவின் பின்னர் முப்பது நாட்களுள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.<br>– எவரேனும் ஆளொருவர் வருமானத்திலிருந்தான வருவாயைப் பெற்றுக்கொள்வதற்கு தாக்கல் செய்வாராயின், அது இயைபான மதிப்பீட்டாண்டிற்கான அவரது சுய மதிப்பீடாக கருதப்படுவதோடு, அதே நபர் அதே ஆண்டில் தாக்கல் செய்த மூலதன ஈட்டு வரி வருமானம் சுய மதிப்பீடுகளுக்கு வழிவகுத்தலாகாது.<br>– வரி தொடர்பான அனைத்து மூல ஆவணங்களிலும் அல்லது வரி செலுத்துவோரின் அடிப்படை ஆவணங்களிலும் வரி அடையாள எண்ணை (TIN) பயன்படுத்துவது கட்டாயமானதாக்கல்.<br>– அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட வதிவுள்ள அல்லது வதியாத அனைத்து வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளும் தமது வரிகளை (வருடாந்தக் கூற்றுக்கள் உட்பட) இலத்திரனியல் கோவை முறையில் (e-filing) கணனி முறைமையில் அல்லது செல்லிட கருவிகளைப் பயன்படுத்தி சமர்ப்பிப்பதனை கட்டாயமனதாக்கல். |
| 04.01.2020 | 2021.03.02 ஆந் திகதிய 2217/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– பரிமாற்று விலையிடல் தொடர்பான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்காக |
| 04.01.2020 | 2021.06.29 ஆந் திகதிய 2234/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– வருமான வரி விலக்கப்பட்டதகவல் தொழில்நுட்பவியல் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளை விதித்துரைப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **பெறுமதி சேர் வரி –2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் மீதான திருத்தங்கள்** | |
| 2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம் | |
| 01.01.2021 | – முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் தைக்கப்பட்ட ஒரு சில ஆடைகளை உள்நாட்டில் விற்பனை செய்வதன் பேரில் துண்டு அடிப்படையிலான பெறமதிசேர் வரி விகித்தினை ரூபா 100 இலிருந்து ரூபா 25 இற்குக் குறைப்பதற்காக. |
| 01.04.2021 | 2021.05.20 ஆந் திகதிய 2228/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– ஏற்றுமதிக்கான பதிவேடு வைத்திருக்கவேண்டியதை உள்ளடக்குவதற்காகபெறுமதிசேர் வரி பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கான பதிவேடு பராமரிப்பு வழிகாட்டுதல்களில் திருத்தம் செய்வதற்கு. |
| 01.04.2021 | 2021.06.29 ஆந் திகதிய 2234/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– பெறுமதிசேர் வரி விலக்களிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளைக் குறைத்துரைப்பதற்கு. |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 05.04.2021 | 2021.04.05 ஆம் திகதிய 2222/2ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– இலங்கை பொலீசுக்கு 2.000 முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்தலுக்கு ஏற்புடையதான தீர்வையினை விலக்களிப்பதற்காக. |
| 06.04.2021 | 2021.04.05 ஆம் திகதிய 2222/3ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– மோட்டார் வாகன (ஒட்டோ மொபைல்) உற்பத்தி/பொருத்துதல் கைத்தொழில் மற்றும் மோட்டார் வாகனக் கூறு உற்பத்தித் தொழிலுக்கான நியமமான இயக்க நடைமுறைகளை செயற்படுத்துவதனோடு இணைந்த வகையில் உள்நாட்டில் பொருத்தப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது புதிய தீர்வைக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக. |
| 23.04.2021 | 2021.04.22 ஆம் திகதிய 2224/24ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– நடமாடும் பட்டறை வாகனங்கள் மீதான தீர்வை விகிதங்களைத் திருத்துவதற்காக. |
| 03.08.2021 | 2021.08.03 ஆம் திகதிய 2239/16ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– அத்தியாவசிய கள நடவடிக்கைகளின் பயன்பாட்டிற்காக 52 நீர் பவுசர்களையும் 62 இரட்டைகப் வண்டிகளையும் இறக்குமதி செய்தல் மீதான உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவிற்கு விலக்களிப்பதற்கு. |
| **மது வரி (கட்டளைச் சட்ட) தீர்வை – மதுவரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 01.01.2021 | 01/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/34ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>– உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு பூல்புறாப் ஒட்டுத் துண்டு மற்றும் ஒட்டுத் துண்டு முகாமை முறைமையைச் செயற்படுத்துவதற்கான திகதியை 30 ஜுன் 2021 வரை நீடிப்பதற்காக. |
| 01.01.2021 | 02/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/35ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>– FL/7, FL/8, FL/11, FL/12 FL/22ஆஎன்பனவற்றின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உரிமக் கட்டணத்திற்கு விலக்களிப்பதற்காக. |
| 08.01.2021 | 03/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2020. 01.07 ஆம் திகதிய 2209/42ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>– இலங்கையில் நிறுவப்பட்ட உரிமம்பெற்ற எந்தவொரு தொழிற்சாலையிலிருந்தும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.50 இலிருந்து ரூ.25 இற்கு தீர்வையினைக் குறைப்பதற்காக. .<br>(மதுவரி அறிவித்தல் இல. 993, (2016.12.20 ஆம் திகதிய 1998/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) இரத்துச்செய்யப்பட்டது). |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 07.01.2021 | 04/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 01.07 ஆம் திகதிய 2209/44ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– கள்ளுத் தவறணைகள் திறக்கப்பட்டு மூடப்படும் நேரத்தினை நீடிப்பதற்கு 03/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலினைத் திருத்துவதற்காக (மதுவரி அறிவித்தல் இல. 11/2018 (2020.06.13 ஆந் திகதிய 2075/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) இரத்துசெய்யப்பட்டது). |
| 07.01.2021 | 05/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 01.07 ஆம் திகதிய 2209/43ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– கள்ளு சில்லறை விற்பனை மற்றும் கொண்டுசெல்லப்படும் அளவினை 1.5 லீற்றரிலிருந்து 3 லீற்றர்களுக்கு அதிகரிப்பதற்காக.<br>(1985.08.14 ஆந் திகதிய 745 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இரத்துசெய்யப்பட்டது) |
| 11.01.2021 | 06/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 01.11 ஆம் திகதிய 2210/2ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்).<br><br>– 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் அங்கீகாரக் கட்டணத்தை (i) 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகை ஹோட்டல்கள் மற்றும் (ii) 5 நட்சத்திர ஹோட்டல் மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர/பல்பொருள் ஹோட்டல்கள்: பல்பொருள் வில்லாக்கள்/பாரம்பரிய ஹோட்டல்களுக்கு விலக்களிப்பதற்காக. |
| 25.02.2021 | 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.02.25 ஆம் திகதிய 2216/16ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– பாதுகாப்புப் பண்புக் கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக் கூறுகள் முகாமைத்துவம் தொடர்பான ஒழுங்குவிதிகளைக் குறித்துரைப்பதற்காக. |
| 30.06.2021 | 08/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.06.30 ஆம் திகதிய 2234/23ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– உரிமம்பெற்ற உற்பத்தியாளர்களுக்காகபாதுகாப்புப் பண்புக் கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக் கூறுகள் முகாமைத்துவ முறைமையின் நடைமுறைத் திகதியை 2021, ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை நீடிக்கும்பொருட்டு 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |
| 29.07.2021 | 2021.07.29 ஆந் திகதிய 2238/28 ஆம் இலக்க மற்றும் 2021.07.29 ஆந் திகதிய 2238/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள்<br><br>– மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின்பிரகாரம் சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக 01/2021மற்றும்02/2021ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் ஏப்பிரல் 20 ஆந் திகதி அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனை அறிவிப்பதற்கு. |
| 29.07.2021 | 2021.07.29 ஆந் திகதிய2238/30ஆம் இலக்க மற்றும் 2021.07.29 ஆந் திகதிய 2238/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள்<br><br>– மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக 04/2021 மற்றும்06/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் 2021, மே 04 ஆந் திகதி அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனை அறிவிப்பதற்கு. |
| 16.08.2021 | 09/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்(2021.08.16 ஆந் திகதிய 2241/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>– உரிமம்பெற்ற உற்பத்தியாளர்களுக்காகபாதுகாப்புப் பண்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமையின் நடைமுறைத் திகதியை 2021, ஒற்றோபர் 15 ஆந் திகதி வரை நீடிக்கும் பொருட்டு 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 16.10.2021 | 10/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.10.16 ஆந் திகதிய 2249/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>– உரிமம்பெற்ற உற்பத்தியாளர்களுக்காகபாதுகாப்புப் பண்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமையின் நடைமுறைத் திகதியை 2021, ஜனவரி 03 ஆந் திகதி வரை நீடிக்கும் பொருட்டு 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலைத் திருத்துவதற்காக. |
| **துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு □2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 05.01.2021 | 05.01.2021 ஆம் திகதிய 2209/17ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– மருந்தாக்கல் உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள் மற்றும் முகக் கவச உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள் என்பனவற்றிற்கான துறைமுக, விமான நிலைய விலக்களிப்பினை வழங்குவதற்கான விதப்புரை வழங்கும் அதிகாரத்தினை சுகாதார அமைச்சின் செயலாளரிடமிருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் மருந்தாக்கல் ஒழுங்குவிதிக்கான இராஜாங்க அமைச்சுக்கு மாற்றுவதற்காக. |
| 23.02.2021 | 2021.02.22 ஆம் திகதிய2216/3ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>-பால் மா இறக்குமதியின் பேரில் 2.5 சதவீத சலுகை விகிதமொன்றினை வழங்குவதற்காக. |
| 09.03.2021 | 2021.03.09 ஆம் திகதிய2218/51ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– கருத்திட்ட அமுலாக்கலின் போது அல்லது கட்டுமானப் பணி காலத்தின் போதும் மற்றும் வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பிக்க முன்பும் ஐ.அ.டொ.50 மில்லியனுக்கு குறையாத மூலதனத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் தொழில்முயற்சியொன்றுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வையினை விலக்களிப்பதற்காக. |
| 20.03.2021 | 2021.03.19 ஆம் திகதிய2219/68ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கருங்காரை உற்பத்திக்காக எரிபொருள் எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பில் துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டுக்கு விலக்களிப்பு ஏற்பாடு ஒன்றினை ஏற்படுத்துவதற்காக. |
| 20.04.2021 | 2021.04.19 ஆம் திகதிய2224/08ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– திரவ பெற்றோலிய எரி வாயு இறக்குமதியின் பேரில் சர்வதேச ரீதியாக திரவ வாயுவின் விலைகள் மெ.தொ ஒன்றிற்கு ஐ.அ.டொ.325 இனை அடையும் வரையில் மெ.தொ ஒன்றுக்கு 7.5 சதவீதம் அல்லது மெ.தொ.ஒன்றுக்கு ரூபா 2,000 என்பதில் எது குறைவாக இருக்கிறதோ அதற்கு சலுகை வீதமொன்றினை வழங்குவதற்காக. |
| 12.06.2021 | 2021.06.11 ஆம் திகதிய2231/19ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– முழுமையானஅல்லது உடைக்கப்பட்ட,பச்சையான கொக்கோ விதைகள்இறக்குமதி மீது 5.0 சதவீத வரிச் சலுகை விகிதத்தினை வழங்குவதற்காக. |
| 12.08.2021 | 2021.08.11 ஆம் திகதிய2240/21ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>இறக்குமதிசெய்யப்படும் பால் மா விற்காகதுறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டினை விலக்களிப்பதற்கு |
| **செஸ் அறவீடு –1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்** | |
| 13.01.2021 | 2021.01.12 ஆம் திகதிய 2210/09ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>– சுங்க உற்பத்தி இன் பொண்ட் திட்டத்தின் கீழ் அல்லது ஏற்றுமதி பதனிடல் திட்டத்திற்காக தற்காலிக இறக்குமதித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்து, இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்துகொண்டுள்ள ஏதேனுமொரு தொழில்முயற்சியொன்றினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் அல்லது பராமரிப்புச் செயற்பாட்டின் உருவாக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களை பயன்படுத்தி, ஏற்றுமதி நோக்கத்திற்காக பொருட்களின் உற்பத்திச் செயற்பாட்டின் மூலமாக உருவாக்கப்பட்ட துகள்கள்/கழிவுகளை ஏதேனும் தொழில்முயற்சியொன்றினால் ஏற்றுமதி செய்கையில் அதன் மீதான செஸ் வரியினை விலக்களிப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 18.03.2021 | 2021.03.17 ஆம் திகதிய 2219/36 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– கருத்திட்ட செயற்படுத்தல் காலத்தில் அல்லது அந்த கருத்திட்டத்தின் கட்டுமான காலத்தில் ஆனால் வர்த்தக தொழிற்பாடுகளை தொடங்குவதற்கு முன்னர் 2019 மாச்சு 06 அன்று அல்லது அதற்குப்பிறகுள்ள ஒவ்வொரு நிலையிலும் 50 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேல் முதலீட்டுடன் எந்தவொரு நிறுவனத்தாலும் மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டத்தினாலும் இறக்குமதி செய்யப்படும் எந்தவொரு பொருட்களுக்கும் செஸ் அறவீட்டினை விலக்களிக்களிப்பதற்காக. |
| 16.03.2021 | 2021.03.15 ஆம் திகதிய 2219/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– ஓடுகள் மற்றும் சுகாதாரப் பாத்திரங்கள் இறக்குமதி மீதான செஸ் அறவீட்டினைத் திருத்துவதற்காக. |
| **சுங்க இறக்குமதித் தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 23.04.2021 | 01/2021 ஆம் இலக்க,அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2021.04.22 ஆம் திகதிய 2224/25 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>– அரச கணக்குகள் குழுவின் வழிகாட்டுதலுக்கு அமைய நடமாடும் பட்டறையாக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கான தேசிய இ.மு.துணைப் பிரிவுகளை உருவாக்கல். |
| 18.05.2021 | 02/2021 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2021.05.17 ஆம் திகதிய 2228/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>– பெயரளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிப்பதற்காகவும் வருமானக் கசிவினை பாதுகாப்பதற்காகவும் முகக் கவசத்திற்கு தேசிய இ.மு.துணைப் பிரிவுகளை உருவாக்கல். |
| **சுங்கத் தீர்வை மீதான மேலதிக அறவீடு – சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** | |
| 02.02.2021 | 2021.02.01 ஆம் திகதிய 2213/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– ஒக்ரேன் 95 மற்றும் ஏனைய பெற்றோல் லீற்றர் ஒன்றுக்குரூ.20, சுப்பர் டீசல்/ஏனைய டீசல்லீற்றர் ஒன்றுக்கு ரூ.30மற்றும் ஒற்றோ டீசல் லீற்றர் ஒன்றுக்கு ரூ.12 மேலதிக அறவீட்டினை நீக்குவதற்காக. |
| **சுங்க இறக்குமதித் தீர்வை தளர்த்தீடு –சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** | |
| 01.01.2021 | – பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 7 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 18 வரையும் மற்றும் பெற்றோல் (ஒக்ரேன் 95) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 6 இலிருந்து ரூபா 16 வரையில் சுங்கத் தீர்வை தளர்வினை அதிகரிப்பதற்காகவும்.<br>– சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 சுங்கத் தீர்வையினைத் தளர்த்துவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்கத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 இற்கு அதிகரிப்பதற்கும். |
| 02.02.2021 | – பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 18 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 29 வரை அதிகரிப்பதற்கும் பெற்றோல் (ஒக்ரேன் 95) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 16 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 8 வரையில் சுங்கத் தீர்வை தளர்வினை குறைப்பதற்காகவும்<br>– சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 என்ற சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை நீக்குவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 14 இற்கு குறைப்பதற்காகவும். |
| 25.03.2021 | – பெற்றோல் (ஒக்ரேன் 92) லீற்றர் ஒன்றுக்கு ரூபா 29 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 45 வரையும், பெற்றோல் (ஒக்ரேன் 95) லீற்றர் ஒன்றுக்கு ரூபா 8 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 24 வரையிலும்சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை அதிகரிப்பதற்காகவும்.<br>– சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10, சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை வழங்குவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 14 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 25 இற்கு அதிகரிப்பதற்காகவும். |
| 12.08.2021 | – பால் மா இறக்குதி மீதானசுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 210 இலிருந்து ரூபா 225 இற்கு அல்லது 20 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு –2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 14.01.2021 | 2021.01.13ஆம் திகதிய 2210/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>– சீனி, பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 19.01.2021 | 2021.01.18ஆம் திகதிய 2211/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– பாலாடைக்கட்டி, கொத்தமல்லி, மஞ்சல் மற்றும் உழுந்து மா இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 12.02.2021 | 2021.02.11 ஆம் திகதிய 2214/58ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– அனைத்து வகைக் கருவாடுகளுக்கும் ஒரே தீர்வை விகிதத்தைப் பேணுவதற்கும் சந்தையில் காய்கறிகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக உருளைக் கிழங்குக்கான தீர்வையினை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 15 இற்கு ஆறு மாத காலத்திற்காகக் குறைப்பதற்கும். |
| 04.03.2021 | 2021.03.03ஆம் திகதிய 2217/23 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– மக்கரல் மீன், உழுந்து, கௌபி, குரக்கன் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 14.04.2021 | 2021.04.13ஆம் திகதிய 2223/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– சீனி, பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 27.04.2021 | 2021.04.26 ஆம் திகதிய 2225/1 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>– மீன், மாசிக் கருவாடு, பாசிப் பயறு, மங்குஸ்தான், கிவிப் பழம் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 28.04.2021 | 2021.04.27ஆம் திகதிய 2225/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– தேங்காய் துருவல் (ஏனையவை) மீதான விசேட வியாபார பண்ட அறவீடாக கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 300 இனை மூன்று மாதங்களுக்கு விதிப்பதற்காகவும் பி.பி.சி லங்கா லிமிடெட்டுக்கு தீர்வைத் தளர்வினை வழங்குவதற்காகவும். |
| 27.04.2021 | 2021.04.27ஆம் திகதிய 2225/13 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோ கிறாம் ஒன்றிற்குரூபா 50 இனால் அதிகரிப்பதற்காக. |
| 18.05.2021 | 2021.05.17ஆம் திகதிய 2228/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>– 22 பண்டங்களின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 15.06.2021 | 2021.06.14 ஆந் திகதிய 2232/03ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– கிளமன்ரைன் பிரெஷ்மற்றும் எனையவை உள்ளடங்கலாக 17 பொருட்களின் இறக்கமதி மீதானவிசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 19.07.2021 | 2021.07.18 ஆந் திகதிய 2236/66ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– பாலாடைக்கட்டி, கொத்தமல்லி, மஞ்சல் மற்றும் உழுந்து மா இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 12.08.2021 | 2021.08.11 ஆந் திகதிய 2240/20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– நெத்தலி, கருவாடு, வெண்ணெய், மாதே விதை, குரக்கன் மா, கடுகு விதை மற்றும் உப்பு ஆகியவற்றின் மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 08.09.2021 | 2021.09.07 ஆந் திகதிய 2244/8ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீது கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 40 வரைவிசேட வியாபார பண்ட அறவீட்டினைஅதிகரித்தல். |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்** | |
| 05.01. 2021 | 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.01.05 ஆந் திகதிய 2209/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் இறக்குமதி டயர்களோடு சம்பந்தப்பட்ட பொருட் பட்டியலினைத் திருத்துவதற்காக. |
| 11 .02.2021 | 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.02.11 ஆந் திகதிய 2214/56ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் இறக்குமதித் மட்பாண்டப் பொருட்கள் மற்றும் சாரிப் புடவைகள் சம்பந்தப்பட்ட பொருட் பட்டியலினைத் திருத்துவதற்காக. |
| 07.04.2021 | 2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.06 ஆம் திகதிய 2222/31ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br><br>– பாம் எண்ணெய் இறக்குமதியினை ஒழுங்குறுத்துவதற்காக. |
| 23.04.2021 | 2021 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.23 ஆம் திகதிய 2224/43ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– நடமாடும் பட்டறைகளுக்காக இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதிப்பதற்காக. |
| 23.04.2021 | 2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.23ஆம் திகதிய 2224/44ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– புதிய நடமாடும் பட்டறைகளை இறக்குமதிசெய்வதனை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு. |
| 06.05.2021 | 2021 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.05.06 ஆந் திகதிய 2226/48ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்காக. |
| 11.06.2021 | 2021 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.06.11 ஆந் திகதிய 2231/16ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– முகக் கவசங்கள், தங்கம் மற்றும் உலோக இறக்குமதிக்கு,இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதிப்பதற்காக. |
| 11.06.2021 | 2021 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் 2021(2021.06.11 ஆந் திகதிய 2231/17ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– ஓட்சிசன் உட்பட அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏற்றுமதி செய்ய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பரிந்துரைக்கும் அதிகாரத்தை வழங்குதல்.. |
| 11.06.2021 | 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள்(2021.06.11 ஆந் திகதிய 2231/18ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– 2020 ஆம் ஆண்டின்04 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இறக்குமதி கட்டுப்பாடுகளின் கீழ் உள்ள அட்டவணை 1 இல் உள்ள பொருட்களின் பட்டியல்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு. |
| 31.07.2021 | 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க,இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள்(2021.07.31 ஆந் திகதிய 2238/45ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>– கனிம அல்லது இரசாயன உரங்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதிப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி** | |
| 05.01.2021 | 2021.01.05 ஆந் திகதிய 2209/23ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>– 8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றம் என்ற விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தின் கீழ் சொகுசு வரியினைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல். |
| **2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் அறவீடு** | |
| 09.02.2021 | 2021.02.09 ஆந் திகதிய 2214/25ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>– வெளிநாட்டு நாடகங்கள் மற்றும் திரைப்படங்களின் ஒளிபரப்பு மீது தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் அறவீட்டினை மீண்டும் விதிப்பதற்கு. |
| 11.05.2021 | 2021.05.10 ஆந் திகதிய 2227/2ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>– ஒரு மாதத்திற்கு வெளிநாட்டு வர்த்தக விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்வதற்காக அனுமதிச் சான்றிதழினை பெறுவதற்கான ஏற்பாடொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு. |
| **2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்** | |
| **சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு** | |
| 01.01.2021 | 2021.01.01 ஆந் திகதிய 2208/59 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>– 2021.01.01 ஆந் திகதி முதல்பயன்வலுப்பெறும் வகையில் சர்வதேச தொலைத் தொடர்ப் இயக்குநர்கள் அறவீட்டினை அதே விகிதங்களில் தொடருவதற்காக. |
| **2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்** | |
| 15.09.2021 | – வரி விதிக்கக்கூடிய வழங்கல், வருமானம் அல்லது சொத்தை வெளிப்படுத்தத் தேவைப்படுத்தப்பட்டு 2020, மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முன் குறிப்பிட்ட வருவாய்ச் சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் அவற்றினை வெளியிடத் தவறிய, தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, அத்தகைய வரி விதிக்கக்கூடிய வழங்கல், வருமானம் அல்லது சொத்தை குறித்துரைக்கப்பட்ட விதத்தில் முதலீடு/வைப்புச் செய்த பிறகு அத்தகைய முதலீடு/வைப்புத் தொகையில் 1 சதவீதத்தில் தன்னார்வ வெளிப்படுத்துகை மீதான வரியை செலுத்தும் பட்சத்தில் வரி மன்னிப்பு ஒன்றினை வழங்குவதற்கு.<br><br>– குறிப்பிட் சட்டங்களின் கீழ் வரி நிலுவைகளைப் பதிவழிப்பதற்கு ஏற்பாட்டினை வழங்குதல்.. |
| **2008 ஆம் அண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டம்** | |
| 05.01.2021 | 2021.01.05 ஆந் திகதிய 2209/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>– அம்பாந்தோட்டை, ஆரபொக்க பகுதியில் தனிப்பயனுடைய மருந்தாக்கல் உற்பத்தி வலயம் ஒன்றினைத் தாபிப்பதற்காக. |
| 05.03.2021 | 2021.03.05 ஆந் திகதிய 2217/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>– செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டமாகிய “சிலோன் ரயர் மனுபெக்சரிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட்”இன் விலக்களிப்புக்கள் மற்றும் கடைப்பிடிக்கவேண்டிய நிபந்தனைகள் உட்பட கருத்திட்டம் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்காக. |
| 23.03.2021 | 2021.03.23 ஆந் திகதிய 2220/30ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>– “கொழும்பு சர்வதேச நிதி மைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்” தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட 3(4) வர்த்தமானி அறிவித்தலின் திருத்தம் செய்யப்பட்ட காப்புவாசகம் ஒன்றினை வெளியிடுவதற்காக. |
| 19.04.2021 | 2021.04.19 ஆந் திகதிய 2224/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>– தனிப்பயனுடைய மருந்தாக்கல் உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைப்பாட்டினை வெளிப்படுத்தற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 20.04.2021 | 2021.04.20 ஆந் திகதிய 2224/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– தனிப்பயனுடைய புடவை உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைப்பாட்டினை வெளிப்படுத்தற்காக. |
| 24.05.2021 | 2021.05.24 ஆந் திகதிய 2229/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– "வெல்கம் ஹொட்டெல்ஸ் லங்கா (பிரைவெட்) லிமிட்டட்" இன்கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை 2022.01.01 முதல் பதினெட்டு (18) மாதங்களுக்கு மேலும் நீடிப்பதற்காக. |
| 24.05.2021 | 2021.05.24 ஆம் திகதிய 2229/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>– "எவிக் இன்ரனஷனல் ஹொட்டெல்ஸ் லங்கா லிமிட்டட்"இன் கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை 2020.03.25 முதல் மேலும் பத்தொன்பது (19) மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 30.07.2021 | 2021.07.30 ஆந் திகதிய 2238/39ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– கொழும்பு துறைமுக விரிவாக்கல் கருத்திட்டத்தின் கீழான மேற்குக் கொள்கலன் முனையம் - 1 (WCT-1) இன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்கான செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பில்விலக்களிப்புக்கள் மற்றும் கடைப்பிடிக்கவேண்டிய நிபந்தனைகள் உட்பட தகவல்களை வெளியிடுவதற்காக. |
| 30.07.2021 | 2021.07.30 ஆந் திகதிய 2238/40ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>– தனிப்பயனுடைய புடவை உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற வரி விலக்குகள் / சலுகைகளை வெளிப்படுத்தற்காக. |
| **அரசிறை விதிகளுக்கான திருத்தங்கள்** | |
| **2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்** | |
| | – 2020 ஆம் ஆண்டிலிருந்து 2030 ஆம் ஆண்டிற்கு அரசாங்கத்தின் மொத்தப் படுகடன் இலக்கினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதத்திற்கு விரிவுபடுத்தல்; மற்றும்<br>– உத்தரவாத எல்லையை 10 சதவீத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரித்தல் |

1.3 **அரசாங்க செலவினம்**

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கத்தின் செலவினம் ரூபா2,062.4பில்லியனாகக் காணப்பட்டது. அதில் ரூபா 1,801.5 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 260.9 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது.

அட்டவணை **1.11** :**அரசாங்க செலவின செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| விடயம் | சன -ஆகஸ் 2020 | 2021(அ) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | **1,670,356** | **1,801,521** |
| சம்பளங்கள் | 516,354 | 564,151 |
| ஓய்வூதியம் | 160,058 | 176,131 |
| வட்டி | 653,498 | 700,538 |
| ஏனைய | 340,446 | 360,701 |
| மூலதனம் மற்றும் தேறிய கடன் | **213,350** | **260,879** |
| மொத்த செலவினம் | **1,883,706** | **2,062,400** |

மூலம் : தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

### ஆள்சார் வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியங்கள்

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மாகாண சபை ஊழியர்கள் உட்பட அரசாங்க ஊழியர்களுக்கான ஆள்சார் வேதனாதிகள் மீதான மொத்தச் செலவினம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 516.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 564.2 பில்லியன் வரை 9.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் 53,000 பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தமை, 2019 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 14,500 பட்டதாரி பயிலுநர்களின் நிரந்தர பதவிகள் வழங்கியமை, மற்றும் 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் 100,000 தொழில்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்நோக்கு பணிப் படைக்காக சேர்க்கப்பட்ட 30,000 புதிய ஆட்சேர்ப்புகள் என்பன பிரதான காரணமாக அமைந்தது. மாகாண சபையின் சம்பளங்களுக்கான மத்திய அரசாங்கத்தின் பங்களிப்பானது, 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 153.8 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின்முதல் எட்டு மாத காலப்பகுதியில்ரூபா 172.6 பில்லியனாக அதிகரித்தது. இந்த அதிகரிப்புக்கு 2020 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்புகளுடன் இணைந்த சுகாதார துறை ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொவிட் 19 தொடர்பான கொடுப்பனவுகள் காரணமாக அமைந்தன.

2021 ஆம் ஆண்டடின் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 160.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத முதலீட்டு மாத காலப்பகுதியல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூபா 176.1 பில்லியன் வரை 10.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை இல 03/2016 இன் மூலம் மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பின் விளைவாக உயர்வான அடிப்படைச் சம்பளத்தைக் கொண்டுள்ள புதிய ஓய்வுபெறுவோர் என்பன இதற்குக் காரணமாகும்.

### வட்டிக் கொடுப்பனவுகள்

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலத்தினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 653,5 பில்லியனிலிருந்து ரூபா 700,5 பில்லியன் வரை 7.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது பிரதானமாக உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவில 12.4 சதவீதம் அதிகரிப்பைப் பிரதிபலித்தது. எனினும், 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 7.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்தது. ரூபா 700.5 பில்லியன் கொண்ட மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் பில்லியன் தொகையில் உள்நாட்டுக் படுகடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவு ரூபா 541.5 பில்லியனுக்கு வகைகூறிய அதேவேளையில் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 159.0 பில்லியனுக்கு வகைகூறியது.

அட்டவணை **1.12 : அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2020 - 2021**

| காலப்பகுதி | | திறைசேரி உண்டியல்கள் (%) 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | திறைசேரி முறிகள் (%) 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | சராசரி நாணய மாற்று வீதங்கள் ரூபா/ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020 | சனவரி | 7.51 | 8.15 | 8.59 | – | 9.39 | – | 9.27 | 181.4 |
| | பெப்ரவரி | 7.42 | 8.06 | 8.58 | – | – | – | – | 181.6 |
| | மார்ச் | 7.00 | 7.25 | 7.50 | – | 9.33 | 9.81 | – | 185.1 |
| | ஏப்ரல் | 6.75 | 6.80 | 7.00 | – | 8.14 | 8.70 | 8.75 | 193.1 |
| | மே | 6.69 | 6.82 | 6.93 | – | 8.05 | – | – | 187.9 |
| | ஜூன் | 5.50 | 5.53 | 5.66 | 5.86 | – | – | 8.59 | 186.0 |
| | ஜூலை | 4.59 | 4.68 | 4.86 | 5.73 | – | – | 6.50 | 185.8 |
| | ஆகஸ்ட் | 4.56 | 4.68 | 4.89 | – | – | – | – | 184.9 |
| | செப்தெம்பர் | 4.51 | 4.64 | 4.89 | 5.65 | 5.72 | – | 6.59 | 185.0 |
| | ஒக்தோபர் | 4.57 | 4.69 | 4.96 | – | – | – | – | 184.4 |
| | நவம்பர் | 4.64 | 4.76 | 5.00 | – | – | 6.32 | – | 184.8 |
| | டிசெம்பர் | 4.69 | 4.80 | 5.05 | – | 5.99 | – | 6.79 | 187.2 |
| 2021 | சனவரி | 4.69 | 4.75 | 4.98 | – | – | 6.34 | 6.72 | 190.5 |
| | பெப்ரவரி | 4.90 | 4.99 | 5.09 | – | 6.70 | – | 7.07 | 194.1 |
| | மார்ச் | 5.05 | 5.10 | 5.11 | 6.19 | 6.30 | – | 7.05 | 197.0 |
| | ஏப்ரல் | 5.11 | 5.14 | 5.18 | 6.50 | – | – | 7.25 | 197.4 |
| | மே | 5.13 | 5.14 | 5.18 | – | – | 7.04 | – | 199.6 |
| | ஜூன் | 5.18 | 5.19 | 5.23 | 6.35 | – | 7.30 | 7.31 | 199.8 |
| | ஜூலை | 5.22 | 5.23 | 5.25 | 6.36 | 6.87 | 7.47 | – | 200.0 |
| | ஆகஸ்ட் | 5.87 | 5.90 | 5.93 | 6.75 | – | 8.55 | – | 200.5 |
| | செப்தெம்பர் | 6.70 | 6.99 | 7.01 | 8.12 | 8.10 | – | – | 202.0 |

மூலங்கள் : திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

**நலன்புரிச் செலவினம்**

நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அரசாங்கத்தின் செலவினம், சுகாதாரக் கவனிப்பு மற்றும் போசாக்கு, கல்வி, வாழ்வாதார உதவிகள், சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் மீதான செலவினத்தை உள்ளடக்குகின்றது. நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2021 ஆம் ஆண்டின் முதல் 8 மாத காலப்பகுதியில் ரூபா 161 பில்லியன் தொகையுடையதாகவிருந்தது. நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அரசாங்கத்தின் முதலீடானது, பொருளாதார வலுவற்ற விசேடமாக தொற்றுநோய் காரணமாக வாழ்வாதாரம் இழக்கப்பட்டு உதவியளிப்பதற்காக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை **1.13** :**நலனோம்பல் செலவினம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | சன - ஆகஸ் 2020 | சன - ஆகஸ் 2021(அ) |
|---|---|---|
| சுகாதார நலன் மற்றும் போசாக்கு | **44,089** | **71,617** |
| அனைவருக்கும் இலவச மருந்து | 40,133 | 67,732 |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 728 | 411 |
| பாடசாலை சிறார்களுக்கான காலை உணவு | 65 | 66 |
| போசன மல்ல | 3,163 | 3,408 |
| கல்வி | **10,523** | **11,848** |
| இலவச பாடப் புத்தகங்கள் | 1,958 | 816 |
| இலவச பாடசாலை சீருடைகள் | 2,080 | 1,665 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 2,900 | 5,300 |
| பாடசாலை போசணை உணவுத் திட்டம் | 1,541 | 1,237 |
| கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் | 491 | 898 |
| தரம் ஐந்து புலமைப் பரிசில்கள் | 321 | 299 |
| மகாபொல புலமைப் பரிசில்கள் | 698 | 700 |
| உதவுதொகைகள் | 427 | 500 |
| அறநெறி பாடசாலை பாடப் புத்தகங்கள் | 30 | 2 |
| ஆசிரியர்களுக்கான அறநெறி பாடசாலை சீருடைகள் | 3 | 2 |
| அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான உதவி | 74 | 429 |
| வாழ்வாதார உதவி | **105,157** | **61,476** |
| உர மானியம் | 21,349 | 9,482 |
| சமூர்த்தி நிவாரணம் | 35,087 | 38,844 |
| மீள்நடுகைக்கான (தேயிலை/இரப்பர்) மானியங்கள் | 740 | 619 |
| ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு உதவுதல் | 281 | 134 |
| கொவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள்/ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி | 57,457 | 49,079 |
| சமூகநலன் மற்றும் பாதுகாப்பு வலை | **14,258** | **15,613** |
| மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி | 1,460 | 4,411 |
| முதியோர்களுக்கான உதவி | 6,575 | 6,589 |
| ரணவிரு பெற்றோர்களுக்கான சமூக நலன் | 1,571 | 1,519 |
| உணவு உதவி, வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 52 | 194 |
| சிக்கனமற்ற வீதிகளுக்கான பேருந்து சேவை | 4,600 | 2,900 |
| மொத்தம் | **129,327** | **148,157** |

மூலம் : தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அட்டவணை **1.14 :கொவிட் - 19 தொற்றுநோயை கட்டுப்படுத்துவதற்கான அரசாங்க செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - ஆகஸ் | |
|---|---|---|
| | **2020** | **2021** |
| கொவிட் தொற்றுநோய்க் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபா 5000/- நிதியுதவி வழங்குதல் | 50,020 | 18,590 |
| தனிமைப்படுத்தல், சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவப் பொருட்கள் சேவைகள் | 28,663 | 111,768 |
| கொவிட் தொற்றுநோய்க் காலத்தில் பாதிக்கபட்ட மக்களுக்கு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் வசதிகள் | 307 | 12,397 |
| மொத்தம் | **78,990** | **142,755** |

மூலம் : தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களம்

**அரச முதலீடுகள்**

நெடுஞ்சாலைகள், நீர்வழங்கல், நீர்ப்பாசனம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் கல்வி ஆகிய துறைகள் உட்கட்டமைப்பு மீதான செலவினம் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அண்ணளவாக ரூபா 154 பில்லியனாகக் காணப்பட்டது. அவற்றுள் பின்வரும் முக்கியமான பகுதிகள் உள்ளடங்கியுள்ளன.

- மாற்றுவீதிகள், பிரதான வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் 100,000 கி.மீ அபிவிருத்திக்காக ரூபா 82,970 மில்லியன்.
- அனைவருக்கும் போதுமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை உறுதிப்படுத்துவதற்காக ரூபா 10,552 மில்லியன்.
- போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறன் கொள்ளளவு மற்றும் இணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ரூபா 9,204 மில்லியன்.
- நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய மதிப்புத்தொடரின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ரூபா 13,282 மில்லியன்.
- பல்நோக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதன் மூலம் விவசாயத்திற்கான நீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக ரூபா 20,413 மில்லியன்.
- கல்வி முறையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தர மேம்பாட்டுக்கான ரூபா 17,891 மில்லியன்.

### 1.4 திறைசேரிச் செயற்பாடுகள்

**பொதுத் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை**

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வருவாய் மற்றும் பிற பெறுகைகள் வாயிலாக பொதுத் திறைசேரிக்கான காசு உட்பாய்ச்சல்கள்,ரூ.1,185.9 பில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் 76.7 சதவீதத்தை அடைந்து ரூ.909.1 பில்லியனினைக் கொண்டிருந்தது.இது 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.880.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 3.2 சதவீத அதிகரிப்பாகும். அதேசமயம், மீண்டெழும் மற்றும் பொது முதலீட்டுக்கான காசுப் பாய்ச்சல் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ.2,095.8 பில்லியன் ஆகும். இது 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.1,941.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத அதிகரிப்பாகும்.

2021, ஆகஸ்ட் 31 ஆந் திகதி அன்று தேறிய பணப் பற்றாக்குறை ரூ.1,186.7 பில்லியன் ஆகும். இது 2020 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூ.1,060.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.9 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டமைக்கு தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் பொது முதலீடு முறையே 7.8 சதவீதம் மற்றும் 8.9 சதவீதம் அதிகரித்தமை காரணமாகும். இதன் விளைவாக இறுதி எதிர்மறை காசு நிலுவை 2020 ஆகஸ்ட் 31 இல் பதிவாகிய ரூ.541.5 பில்லியனில் இருந்து 2021, ஆகஸ்ட் 31 இல் ரூ.895.1 பில்லியன் வரைஅதிகரித்தது.

## அரசாங்கத்தின் படுகடன் முகாமைத்துவம்

2021 ஆம் ஆண்டிற்காகப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தக் கடன் எல்லை ரூ.2,997 பில்லியனாக உள்ளதுடன், இதில் 2021 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலக்கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட அரசாங்கக் கடன்கள் (புத்தகப் பெறுமதி) ரூ.1,754.1 பில்லியனினைப் பதிவு செய்தது.இக் காலப்பகுதியில்காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காகஉள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை உள்ளடக்கிய மொத்தக் கடன் பயன்பாடு 2021 ஆகஸ்ட் 31 இல் முறையே ரூ.1,471.8 பில்லியன் மற்றும் ரூ.282.3 பில்லியனாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்தக் கடன்களில் இருந்து உள்நாட்டில் கடன் வாங்கும் பதிவுகள்

**அட்டவணை 1.15 :அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று**

ரூபா.பில்லியன்

| விடயம் | சனவாரி - ஆகஸ்ட் | | |
|---|---|---|---|
| | 2020 | 2021 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி வருட/மாத | -274.3 | -488.2 | -488.2 |
| வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 880.9 | 1,185.9 | 909.1 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -1,626.7 | -1,723.8 | -1753.6 |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல்* | -314.3 | -546.6 | -342.2 |
| தேறிய காசு மிகை/(பற்றாக்குறை) | -1,060.1 | -1,084.5 | -1186.7 |
| மொத்த பெறுகை* | 1,406.2 | 2,013.5 | 1754.1 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | -673.8 | -1,001.2 | -992.5 |
| தேறிய பெறுகை | 732.4 | 1,012.3 | 761.6 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச பிணை முறிகளில் இருந்தான வருமான மீதி | 51.4 | 0.0 | 0.0 |
| சரிபடுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புகள் போன்றன) | 9.1 | 0.0 | 18.2 |
| இறுதி காசு மீதி வருட / மாத | **-541.5** | **-560.4** | **-895.1** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

* 2021 ஆகஸ்ட் 31 வரைக்குமான கருத்திட்ட, நிகழ்ச்சித்திட்ட கடன் பகிர்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

83.9 சதவிகிதமாக இருந்தது. திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் தற்காலிக முற்பணம் ஆகியவை அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்களுக்கான பிரதான மூலங்களாகக் காணப்பட்டன. அதன்படி, 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த உள்நாட்டுக் கடன்களில் 55 சதவீதம் திறைசேரி முறிகள் மூலமாகவும் 29 சதவீதம் திறைசேரி உண்டியல்கள் மூலமாகவும் மேலும் 16 சதவீதம் இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தற்காலிக முற்பணம் மூலமாகவும் திரட்டப்பட்டது. மேலும், 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வழங்கப்பட்ட சிண்டிகேட் கடனிலிருந்து பெறப்பட்ட வருமானம் வெளிநாட்டு நாணய படுகடன் சேவைக் கொடுப்பனவிற்குப் பயன்படுத்தப்பட்டது. 2021 ஆகஸ்ட் இறுதியில் தேறிய கடன் ரூ.761.6 பில்லியனினைக் கொண்டிருந்தது.

2021 சனவரி – ஆகஸ்ட் வரை அரசாங்கத்தின் மொத்த உள்நாட்டுக் கடன், இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.16 : சாதன ரீதியான மொத்த உள்நாட்டு பெறுகைகள்**

ரூபா.பில்லியன்

| மூலங்கள் | சன - ஆகஸ் 2021 |
|---|---|
| திறைசேரி முறிகள் | 831.2 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 444.5 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 197.4 |
| இலங்கை மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 45.1 |
| மொத்தம் | 1,518.2 |
| வெளிநாட்டு நாணய வங்கி அலகின் திருப்பிச் செலுத்துகை | **-46.4** |
| உள்நாட்டுக் கடன் பயன்பாடு | **1,471.8** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

வரைபு **1.4 : சாதன அடிப்படையில் மொத்த உள்நாட்டுப் பெறுகைகள் (ஜனவரி - ஆகஸ்ட் 2021)**




மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

### திறைசேரி உத்தரவாதங்கள் மீதான எதிர்பாராப் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல்

2021, ஆகஸ்ட் 31 இல் வெளியிடப்பட்டதும் செல்லுபடியானதுமாகக் காணப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பெறுமதி ரூ.1,484.1 பில்லியன் ஆகும். அது 2016 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 2 இன் படி பொருந்தக்கூடிய வரம்பெல்லைக்குள் இருந்தது. 2021 ஆகஸ்ட் 31 அன்று பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பட்டியல் பின்னிணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ளது.

## 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு

### வெளிநாட்டு நிதி உறுதியளிப்புக்கள்

கடன் அல்லாத நிதியுதவிக் கருத்திட்டங்களை உருவாக்கும் அதேவேளையில் வெளிநாட்டுப் படுகடன் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தும் வகையில், 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அதிக முன்னுரிமை கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்குத் தேவையான நிதியுதவியைச் சீரமைக்க அரசாங்கம் உறுதியளித்துள்ளது. அந்த வகையில், அரசாங்கம் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஐ.அ.டொ.1,710 மில்லியனினை வெளிநாட்டுக் கடனாகப் பெற்றுள்ளது. மேலும் சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஐ.அ.டொ.500 மில்லியன் மற்றும் ஆர்.எம்.பீ 2,000 மில்லியன் வெளிநாட்டு நாணய கால நிதியளிப்பு வசதியாக பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இது சந்தை விகிதங்களுடன் ஒப்பிடும்போது மிகப் போட்டியான நியதிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இதில் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியாக (PD) ஐ.அ.டொலர் 901.9 மில்லியனும், ஐ.அ.டொலர் 28.6 மில்லியன் நன் கொடையாகவும் மிகுதி ஐ.அ.டொலர் 873.3 மில்லியன் கடனாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அட்டவணை **1.17 : நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் - 2021 ஜனவரி 01 - ஆகஸ்ட் 31 வரையில்**

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ. | நியதிகள் வகை | வட்டி வருடாந்த வீதம் (%) | அண்ணளவாக (100) அடிப்படை | ஏனைய கட்டணங்கள் | ஏனைய நியதிகள் சலுகைக் காலம் (ஆண்டுகள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான காலம் 9வருடம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இருதரப்பு | | | | | | | | | | | | | |
| ஹங்கேரி | கடன் | 04/01/2021 | கொகுவல மற்றும் கெட்டம்பே மேம்பால நிர்மாணம் | யூரோ | 52.0 | 12,143.6 | 60.9 | வட்டியில்லாக் கடன் | ஏற்புடையதாகாது | ஏற்புடையதாகாது | - | 9 | 27 |
| இந்தியா | கடன் | 16/06/2021 | சூரியவலு கருத்திட்டத்திற்கான டொலர் கிரடிட் லைன் உடன்படிக்கை | ஐ.அ.டொ. | 100.0 | 19,972.4 | 100.0 | நிலையான | 1.75 | ஏற்புடையதாகாது | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5%, மேலாண்மைக் கட்டணம் 0.5% | 5 | 20 |
| பல்தரப்பு | | | | | | | | | | | | | |
| புனரமைப்பு மற்றும் அபிவிருத்திற்கான சர்வதேச வங்கி | கடன் | 13/05/2021 | கொவிட் 19 அவசரத்தேவை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை கருத்திட்டத்திற்கான இரண்டாம் மேலதிக நிதியளிப்பு | ஐ.அ.டொ. | 54.0 | 10,773.0 | 54.0 | மாறக்கூடிய | ஐ.அ.டொலருக்கான லிபோர் | மாறக்கூடிய ** | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25%, முன்னோக்கிய கட்டணம் 0.25% | 5 | 18 |
| | கடன் | 01/01/2021 | காலநிலைக்கேற்ப பல்கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை | ஐ.அ.டொ. | 92.0 | 17,055.9 | 92.0 | மாறக்கூடிய | ஐ.அ.டொலருக்கான லிபோர் | மாறக்கூடிய ** | முன்னோக்கிய கட்டணம் 0.25%, அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25% | 6 | 30 |
| சர்வதேச மேம்பாட்டுச் சங்கம் | கடன் | 22/04/2021 | இலங்கை ஒருங்கிணைக்கப்பட்ட நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டம் - சலுகைக் கடன் | SDR | 31.4 | 8,851.6 | 46.1 | நிலையான | 1.25 | ஏற்புடையதாகாது | சேவைக் கட்டணம் 0.75%,அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25% | 5 | 29 |
| | கடன் | 22/04/2021 | இலங்கை ஒருங்கிணைக்கப்பட்ட நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டம் - சலுகைக் கடனற்ற | ஐ.அ.டொ. | 26.7 | 5,126.4 | 26.7 | மாறக்கூடிய | ஐ.அ.டொலருக்கான லிபோர் | மாறக்கூடிய ** | முன்னோக்கிய கட்டணம் 0.25%, அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25% | 5 | 29 |

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்): நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ. | நியதிகள்: வட்டி: வகை | வருடாந்த வி-கிதம் **(%)** | அண்ணள வாக (100) அடிப்படை | ஏணைய கட்டணங்கள் | ஏனைய நியதிகள்: சலுகைக் காலம் (ஆண்டுகள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந் தான காலம் 9வருடம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் | 13/05/2021 | கொவிட் 19 அவசரத்தேவை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை கருத்திட்டத்திற்கான இரண்டாம் மேலதிக நிதியளிப்பு | SDR | 18.7 | 5,361.8 | 26.9 | நிலையான | 1.25 | ஏற்புடையதாகாது | சேவைக் கட்டணம் 0.75% அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5% | 5 | 30 |
| | கடன் | 22/04/2021 | கண்டி பல்மாதிரி போக்குவரத்து முனைய அபிவிருத்தி கருத்திட்டம் - சலுகை ரீதியான | SDR | 47.1 | 13,286.4 | 69.3 | நிலையான | 1.25 | ஏற்புடையதாகாது | சேவைக் கட்டணம் 0.75% | 4 | 29 |
| | கடன் | 22/04/2021 | கண்டி பல்மாதிரி போக்குவரத்து முனைய அபிவிருத்தி கருத்திட்டம் - சலுகை ரீதியற்ற | ஐ.அ.டொ. | 5.0 | 960.0 | 5.0 | மாறக்கூடிய | ஐ.அ.டொலருக்கான லிபோர் | – | முன்னோக்கிய கட்டணம் 0.25% | 4 | 9 |
| | மாற்றும்* | 28/01/2021 | உள்நாட்டு உதவி அபிவிருத்தி திட்டம் தொடர்பான நன்கொடைகள் | யூரோ | 20.0 | 4,762.2 | 24.3 | | | ஏற்புடையதாகாது | | | 1 |
| | மாற்றும்* | 17/05/2021 | விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கான கூடுதல் நிதியுதவி | யூரோ | 2.7 | 653.4 | 3.3 | | | ஏற்புடையதாகாது | | | 1 |
| விவசாய அபிவிருத்திற்கான சர்வதேச நிதியம் | கடன் | 10/06/2021 | சிறிய விவசாயதத்தொழில்கள் மற்றும் மீள்தன்மை கருத்திட்டம் (SARP) | ஐ.அ.டொ. | 41.7 | 8,326.5 | 41.7 | நிலையான | 1.75 | ஏற்புடையதாகாது | 0 | 11 | 27 |
| | மாற்றம் | 10/06/2021 | சிறிய விவசாயதத்தொழில்கள் மற்றும் மீள்தன்மை கருத்திட்டம் (SARP) | ஐ.அ.டொ. | 1.0 | 199.6 | 1.0 | | | ஏற்புடையதாகாது | | | 1 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 28/05/2021 | இரண்டாவது ஒருங்கிணைந்த பாதை முதலீட்டுத் திட்டம் | ஐ.அ.டொ. | 200.0 | 39,912.6 | 200.0 | மாறக்கூடிய | ஐ.அ.டொலருக்கான லிபோர் | 0.7 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 9 | 29 |

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ. | வட்டி: வகை | வருடாந்த வி-கிதம் (%) | அண்ணள வாக (100) அடிப்படை | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டுகள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந் தான காலம் 9வருடம்) |
| | கடன் | 07/09/2021 | கொவிட் 19 தடுப்பூசிகள் மீட்புத்திட்டம் | ஐ.அ.டொ. | 84 | 16,791.60 | 84 | மாறக்கூடிய | ஐ.அ.டெ-ாலருக்கான லிபோர் | 0.7 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 9 | 29 |
| | கடன் | 07/09/2021 | கொவிட் 19 தடுப்பூசிகள் மீட்புத்திட்டம் -திட்ட முதலீட்டுக் கூறுகள் | ஐ.அ.டொ. | 66 | 13,193.40 | 66 | மாறக்கூடிய | ஐ.அ.டெ-ாலருக்கான லிபோர் | 0.7 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 3 | 10 |
| சந்தைக் கடன்கள் | | | | | | | | | | | | | |
| சீன அபிவிரு-த்தி வங்கி | கடன் | 12/04/2021 | வெளிநாட்டு நாணய நிதி வசதி | ஐ.அ.டொ. | 500.0 | 99,955.0 | 500.0 | மாறக்கூடிய | ஐ.அ.டெ-ாலருக்கான லிபோர் | 2.51 | முன்னோக்கிய கட்டணம் 1.25% | 3 | 10 |
| | கடன் | 17/08/2021 | வெளிநாட்டு நாணய நிதி வசதி | RMB | 2,000.0 | 61,723.1 | 308.7 | மாறக்கூடிய | LPR 5Y | 0.20% | முன்னோக்கிய கட்டணம் 1.25% | 3 | 10 |
| மொத்தம் | | | | | | **339,048.5** | **1,709.9** | | | | | | |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு :

*LIBOR* = லண்டயன் வங்கியிடை வழங்கு வீதம்,

*LPR 5Y* = சீனாவின் மக்கள் வங்கியின் அங்கீகாரத்தின் கீழ் தேசிய வங்கிகளுக்கிடையிலான நிதி மையத்தால் முறையே வழங்கப்பட்ட ஐந்தாண்டு கடன்களுக்கான சந்தை மேற்கோள் வட்டி விகிதம்

*SDR* = சிறப்பு வரைபு உரிமைகள்

* ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்ட இந்த இரண்டு மானியங்களும் உலக வங்கியால் நிர்வகிக்கப்படுகின்றது.

** மாறி பரவல் பயன்படுத்தப்படுகிறது. கையொப்பமிடப்பட்ட திகதியில் இது 0.72% இருந்தது. மேலும் இந்த வரம்பு ஒவ்வொரு கட்டளைக் காலத்திலும் திருத்தப்படும்.

ஒவ்வொரு ஒப்பந்த திகதிக்கும் நிலவும் மாற்று விகிதங்களின் பிரகாரம் வெவ்வேறு நாணயங்களில் உள்ள நிதி மதிப்புகள் *USD* மற்றும் *LKR* ஆக மாற்றப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு நிதிப் பகிர்வுகளும் பயன்பாடும்

வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்களைச் செயல்படுத்துவதனை பாதித்தமுடக்குதல்கள் உட்பட பல்வேறு இடையூறுகளுக்க மத்தியில் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டு நிதியை அரசாங்கம் வினைத்திறனான முறையில் வெற்றிகரமாகப் பயன்படுத்தியது.2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதிப் பகிர்ந்தளிப்புக்கள் 16 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ.1,601.7 மில்லியனினைக் கொண்டிருந்தது. இதில் ஐ.அ.டொ.1,592.3 மில்லியன் கடனாக வழங்கப்பட்ட அதே நேரத்தில் ஐ.அ.டொ.9.4 மில்லியன்,மானியங்கள் வடிவில் வழங்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட பெரும்பாலான பகிர்ந்தளிப்புக்கள் பல்தரப்பு முகவர் நிறுவனங்களுடன் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டவையாகும். இதில் உலக வங்கி 56 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கி 40 சதவீதம் வழங்கியிருந்ததுடன் பல்தரப்பு உத்தியோகபூர்வஅபிவிருத்தி உதவி நிதியளிப்பு 16 சதவீதமாகக் காணப்பட்டதுடன்மொத்த பல்தரப்பு பகிர்வுகளில் ஜப்பான் 30 சதவிதமும் அதையடுத்து சீனா 25 சதவீதமும் வழங்கியிருந்தன.

வரவுசெலவு திட்ட செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு நாணய கால நிதியளிப்பு வசதியாக ஐ.அ.டொ.500 மில்லியனும்ஆர்.எம்.பீ 2,000 மில்லியனும் பெறப்பட்டது.பெரும்பாலான

அட்டவணை **1.18 :வெளிநாட்டு கடன்கள் மற்றும் நிதி உதவிகளின் நிதிப்பகிர்வுகள் - 2021 சனவாரி - ஆகஸ்ட் வரையில்**

| | பகிரப்பட்ட தொகை* (ஐ.அ.டொ.மில்) | | |
|---|---|---|---|
| | **கடன்** | **மானியம்** | **மொத்தம்** |
| இருதரப்பு | **1,056.3** | **0.04** | **1,056.3** |
| சீனா** | 869.7 | - | 869.7 |
| யப்பான் | 74.9 | - | 74.9 |
| நெதர்லாந்து | 23.1 | - | 23.1 |
| பிரான்ஸ் | 19.2 | 0.04 | 19.2 |
| இந்தியா | 15.1 | - | 15.1 |
| ஹங்கேரி | 11.8 | - | 11.8 |
| ஆஸ்திரியா | 11.2 | - | 11.2 |
| குவைட் | 9.7 | - | 9.7 |
| சவுதி அரேபியா | 7 | - | 7 |
| கொரியா | 7.6 | - | 7.6 |
| ஐக்கிய இராச்சியம் | 4 | - | 4 |
| ஸ்பெயின் | 2.8 | - | 2.8 |
| டென்மார்க் | 0.2 | - | 0.2 |
| பலதரப்பு | **536.0** | **9.4** | **545.4** |
| உலக வங்கி | 301.8 | 0.6 | 302.4 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 212.1 | 4.6 | 216.7 |
| ஓபெக் நிதியம் | 10.9 | - | 10.9 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 9 | - | 9 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 2.2 | - | 2.2 |
| ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியம் | - | 3.0 | 3.0 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | - | 1.2 | 1.2 |
| மொத்தம் | **1,592.3** | **9.4** | **1,601.7** |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு : பல்வேறுபட்ட நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதியளிப்புக்கள் ஐ.அ.டொ. மற்றும் ரூபா என்பனவற்றிற்கு மாற்றுவதற்காக 2021 யூலை மாதம் 31 ஆந் திகதி நிலவிய நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்பட்டன.

* தற்காலிகமானது.

** சீனா அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ. 800 மில்லியன் வெளிநாட்டு நாணய நியதியிலான நிதியளிப்பு உள்ளடங்கலாக.

பகிர்வுகள், வீதிகள் மற்றும் பாலங்கள் விடயத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் சார்பில் மொத்த பகிர்வுகளில் கிட்டத்தட்ட 14 சதவிகிதத்தினைக் கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறை 9 சதவீதம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் 7 சதவீதம், மற்றும் வீடமைப்பு மற்றும் நகர்ப்புற மேம்பாடு 3 சதவீதமாகவும் காணப்பட்டன.

**வரைபு 1.5 : 2021 சனவரி - ஆகஸ்ட் வரையில் துறைரீதியாக வழங்கப்பட்ட நிதிப் பகிர்வுகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**வரைபு 1.6 : 2021 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத மீதிகள் (ஐ.அ.டொ.மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

## உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி(CUB) *

2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில், அடுத்த 3-5 ஆண்டுகளில் பயன்படுத்தப்பட வேண்டிய ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட கடன்களிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதியளிப்பின் மொத்த பகிரப்படாத தொகை ஐ.அ.டொ.7,939 மில்லியன் ஆகும். முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடன் அரசாங்கத்துடன் ஏற்கனவே கையெழுத்திடப்பட்ட நிதி ஒப்பந்தங்களிலிருந்து சீனாவினால் பெரும்பான்மையான நிதி வழங்கப்படுகிறது.

**வரைபு 1.7 : 2021 ஆகஸ்ட் 31 அன்று உள்ளவாறு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் துறை ரீதியாக பகிரப்பட்டு பயன்படுத்தப்படாத மீதி (ஐ.அ.டொ.மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதியில் கிட்டத்தட்ட 21 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய அதேநேரம், 18 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கலிலும் 14 சதவீதம் தரை போக்குவரத்துத் துறைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

## வெளிநாட்டுப் படுகடன் இருப்பு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்

2021, ஆகஸ்ட் இறுதியில், மத்திய அரசாங்கத்தின் மொத்த நிலுவையாக உள்ள வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொ.33.9[2]பில்லியனாகக் காணப்பட்டது. 2021, ஜனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான மொத்தப் படுகடன் சேவைக்[3] கொடுப்பனவு ஐ.அ.டொ.2,767 மில்லியனாகும். அதில், ஐ.அ.டொ.1,978 மில்லியன் முதன்மை மீள்கொடுப்பனவுகள் சார்பாகவும், மீதி ஐ.அ.டொ.789 மில்லியன் வட்டி கொடுப்பனவிற்காகவும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2021 யூலையில் சர்வதேச இறையாண்மை பிணை (ISB) ஐ.அ.டொலர் 1000 மில்லியனும் உள்ளடங்கியுள்ளது.

**வரைபு 1.8 : 2021 சனவரி - ஆகஸ்ட் வரையான கடன் சேவைக் கட்டணங்கள் மற்றும் 2021 செப்தெம்பர் - திசெம்பர் வரையான எதிர்வுகூறல்**




1Non-residentialholdingsofTreasuryBills/Bondsandoutstandingdebt of State Owned Enterprises (SOEs) are not included.

2DebtService=PrincipalPayments+InterestPayments,DebtService Payment of SOEs are not included.

* Provisional

# பொருளாதாரத் தோற்றப்பாடுகள் | 02

## 2.1 கண்ணோட்டம்

இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது, உலகம் கொவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிராக இரண்டாவது வருடமாகப் போராடிக் கொண்டிருப்பதுடன், அந்த நிலைமை இலங்கையில், தடுப்பு மருந்தேற்றலுடனும், ஆளுக்காள் இடைவெளி பேணல், தொற்றுக்கு எதிராக முதல் நிலைத் தடுப்பாகக் கருதப்படும் முகக்கவசம் அணிதல் போன்ற மருந்துகள் சம்பந்தப்படாத மற்றைய தலையீடுகளுடனும்,பல முனைகளில் முயற்சிக்கப்பட்டு,தற்போது சமாளிக்கப்பட்டுள்ளது. 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களுக்கான உலக பொருளாதார வளர்ச்சியானது, அதன் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து கீழிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. IMF இன் உலக பொருளாதாரக் கண்ணோட்டத்தினால் ஏப்ரல் 2021 இல் எதிர்பார்க்கப்பட்ட உலகப் பொருளாதாரம் மீதான உயர் தாக்கம், 2021 இல் 5.9 சதவீதத்தாலும், 2022 இல் 4.9 சதவீதத்தாலும், அதன் ஒக்தோபர் மாதக் கண்ணோட்ட அறிக்கையில் குறைக்கப்பட்டுள்ளது.

அதனால், இலங்கைப் பொருளாதாரமானது, 2021 இன் முதல் அரையாண்டில் கூர்மையானதொரு “ஏ-வடிவ” மீட்பைக் காட்டியதுடன், 2020 இன் 3.6 சதவீதச் சுருக்கத்திலிருந்து 8.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2020 இன் மூன்றாம், நான்காம் காலாண்டுகள் 2021 இன் முதல் அரையாண்டினுள் மேலும் வளர்ச்சியடைந்ததுடன், 2021 முதலாம் காலாண்டில் 4.3 சதவீதமாக மேலும் பலமடைந்து, 2021 இன் இரண்டாம் காலாண்டில் அதன் அதிகூடிய வளர்ச்சியான 12.3 சதவீதத்தை எட்டிப் பிடித்தமை இதற்குச் சான்றாக அமைகின்றது.

வேலைவாய்ப்பின்மை வீதமானது 2021 முதலாம் காலாண்டிலிருந்த 5.7 சதவீதத்திலிருந்து 2021 இரண்டாம் காலாண்டில் 5.1 சதவீதத்திற்குக் குறைவடைந்துள்ளது. 2020 இல் காணப்பட்ட வேலைவாய்ப்பு இழப்புகள், 2021 இல் நடமாட்டத்திற்கான கட்டுப்பாடுகள் இலகுவாக்கப் பட்டு, நாடு தழுவிய தடுப்பு மருந்துப் பிரயோகத்துடனும் பொருளாதார நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதால் மீட்கப்பட்டன.

அதற்கிடையில், 2021 இல் பணவீக்கம் அதிகரிக்கத் தொடங்கியதுடன், இது உலகம் முழுவதிலும் பொருட்களின் விலை அதிகரிப்பினாலும், போக்கு வரத்துச் செலவு அதிகரிப்பினாலும் உருவாகியது. ஆண்டின் அடிப்படையிலான முதல்நிலைப் பணவீக்கம் செப்தெம்பர் 2021 இன் 5.7 சதவீதத்திலிருந்து ஒக்தோபர் 2021 இன் 7.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆண்டின் அடிப்படையிலான உள்ளார்ந்த பணவீக்கம் ஒக்தோபர் 2021 இல் 6.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. பணவீக்கத்திற்குச் செலுத்தப்பட்ட அழுத்தங்கள் காரணமாக, 2021 இற்கான பணவீக்கம் இலங்கை மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட 4 - 6 சதவீத பணவீக்க இலக்கிலிருந்து விலகியுள்ளது என்பதுடன், இது 2022 இல் நிலைத்த ஒன்றாக மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரைபு 2.1: மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி




மூலம் : தொகைமதிப்புமற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

2020 இலும், 2021 இலும் இலங்கை மத்திய வங்கி போன்ற உலகம் முழுவதிலுமுள்ள நாணய அதிகாரங்கள் கொள்கைரீதியான விகிதங்களையும், சட்ட ரீதியான ஒதுக்கீட்டு விகிதத்தையும் (SRR) குறைப்பதன் மூலம் ஒத்துப்போகக்கூடிய நாணயக் கொள்கையைப் பின்பற்றின. ஆயினும், பொருளாதார மீட்சிக்குரிய அடையாளங்களுடனும், அதனால் பணவீக்கத்தின் மீது ஏற்பட்ட தாக்கத்தினாலும்,இலங்கை மத்திய வங்கி ஆகஸ்ட் 2021 இலிருந்து இறுக்கமான நாணயக் கொள்கைக்கு மாறியது. 2021 இன் முதல் எட்டு மாதங்களில் தனியார் துறைக்கும் அரச துறைக்குமான கடன்கள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொருளாதார மீட்பு மேலும் சாத்தியமாகியது. அதனால், பல வடிவங்களிலுமுள்ள பணப்புழக்கம் இந்தக் காலப்பகுதிக்குள் உயர்வடைந்தது.

பங்குச் சந்தை 2021 இன் முதல் ஒன்பது மாதங்களில் ஓர் உயர்வான உந்துதலைப் பேணியதுடன்,செப்தெம்பர் 2021 இல் பாரிய சர்வதேசச் சந்தைகளில் உயர்ந்த இலாபத்தைப் பதிவுசெய்தது. சகல பங்குகளுக்குமான விலைச் சுட்டெண் (ASPI) மற்றும் 20 பாரிய கம்பனிகளுக்கான முதலீட்டுச் (S&P SL20) சுட்டெண் ஆகியன மேம்பட்டன. சந்தை முதலீடுகள் 2020 செப்தெம்பர் இறுதியில் காணப்பட்ட ரூ. 2,596 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2021 செப்தெம்பர் இறுதியில் ரூ 4,216 பில்லியன்களாக உயர்வடைந்தது. அதற்கிடையில், ஆகக்கூடிய பெறுமதி 2010 இலிருந்து, 2021 செப்தெம்பரில் ரூ. 793 பில்லியன்களாகப் பதிவானது.

முடக்கத்தின் காரணமாக, விமான நிலையங்களும் துறைமுகமும் மூடப்பட்டு, விநியோகச் சங்கிலியில் தடங்கல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகள் சவாலாகவே இருந்தன. என்றாலும், 2021 இன் முதல் எட்டு மாதங்களில் 7,903 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜூன் 2021 இலிருந்து தொடர்ச்சியான மூன்று மாதங்களுக்கு 1,000 மில்லியன் அமெரிக்க டொலர்களிலும் கூடிய பெறுமதியான ஏற்றுமதிகள் காணப்பட்டமை உற்சாகமளித்தது.

சர்வதேசப் பண்டங்களின் விலை அதிகரிப்புடன் சேர்ந்து இறக்குமதிச் செலவினங்கள் அதிகரித்ததுடன், 2020 இன் முதல் எட்டு மாத வர்த்தகப் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது 2021 இன் அதே காலப்பகுதிக்குரிய வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. இதன் மீட்சியானது, உல்லாசப் பயணத்துறையினதும் வெளிநாட்டுத் தொழிலாளர்களது பண அனுப்புகையினதும் விரிவாக்கத்தால் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2021 ஆகஸ்ட்டின் இறுதியில் அதிகாரபூர்வமான மொத்தச் சேமிப்புகள் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

## 2.2 பொருளாதார வளர்ச்சி

இலங்கைப் பொருளாதாரம் 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 9.1 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 8.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியானது அடிப்படையான விளைவுடன் சேர்த்து விவசாயத் துறையினதும், கைத்தொழிற் துறையினதும், சேவைத் துறையினதும் விரிவாக்கத்தால் ஏற்பட்டது. விவசாயத் துறையானது 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 7.3 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 7.1 சதவீதத்தால் மீண்டெழுந்தது. இதற்குக் காரணமாக தானியங்கள், இறப்பர், தேயிலை, எண்ணெய் வடிக்கத்தக்க பழங்கள், கால்நடை உற்பத்திகள் ஆகியவற்றில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் போக்கே இருந்தது. கைத்தொழிற் துறையானது 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 14.6 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 12.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கற்கரி உற்பத்தி, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கழிவு நீர், மற்றைய கழிவுகள் ஆகியவற்றை வெளியேற்றுதலும் சுத்திகரித்தலும் ஆகிய உப துறைகள் தவிர்ந்த ஏனைய உப கைத்தொழிற் துறைகளின் விரிவாக்கத்தாலேயே இவ்வளர்ச்சி ஏற்பட்டது. சேவைத் துறையானது 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 5.2 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்குக் காரணமாக அமைந்தது, தகவல் தொழில்நுட்ப மதியுரை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள், பண்டகசாலைச் சேவைகள் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றியிறக்கல்கள், பிரயாணங்கள், தொலைத்தொடர்பு, நிதி மற்றும் காப்புறுதிச் சேவைகள் ஆகியவையாகும். உற்பத்திகளுக்கான வரிகளும் மானியங்களும் 2021 இன் முதல் அரையாண்டில் பெறுமதி சேர் விடயங்களாக 22.0 சதவீதத்தால் அதிகரித்தன.

வரைபு 2.2 : மொ.உ உற்பத்தி வகுதி - 2021 இன் முதல் காலாண்டு




மூலம் : தொகைமதிப்புமற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

அட்டவணை 2.1 :மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2010 நிலையான விலைகள்)

ரூபா. மில்லியன்

| | துறை | 2018 | 2019 | 2020(ஆ) | முதல் காலாண்டு 2020(ஆ) | 2021(a) | வளர்ச்சி (%) 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **679,702** | **686,412** | **669,802** | **306,122** | **327,846** | **-7.3** | **7.1** |
| 1 | தானியங்கள் (அரிசி நீங்கலாக) | 11,829 | 10,582 | 14,957 | 6,873 | 8,316 | 22.1 | 21.0 |
| 2 | நெல் | 70,380 | 74,169 | 78,417 | 27,925 | 26,371 | 16.0 | -5.6 |
| 3 | மரக்கறிகள் | 55,230 | 53,248 | 58,606 | 28,078 | 29,248 | 8.4 | 4.2 |
| 4 | கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 1,820 | 2,000 | 2,339 | 1,224 | 1,259 | 21.1 | 2.8 |
| 5 | பழங்கள் | 55,654 | 60,399 | 64,156 | 30,274 | 32,304 | 5.6 | 6.7 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும் பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 57,577 | 67,742 | 60,804 | 29,444 | 32,461 | -14.7 | 10.2 |
| 7 | தேயிலை (பச்சை இலை) | 67,170 | 66,329 | 61,621 | 28,829 | 35,610 | -17.9 | 23.5 |
| 8 | ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,592 | 1,181 | 1,437 | 718 | 708 | 20.4 | -1.5 |
| 9 | நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 66,914 | 66,223 | 68,437 | 33,583 | 35,188 | -0.6 | 4.8 |
| 10 | இறப்பர் | 25,158 | 22,779 | 23,831 | 11,445 | 13,257 | (10.1) | 15.8 |
| 11 | ஏனைய குறுங்காலப் பயிர்கள | 16,303 | 16,380 | 16,681 | 8,139 | 8,009 | -1.0 | -1.6 |
| 12 | விலங்கு வேளாண்மை | 63,418 | 64,744 | 61,566 | 27,536 | 30,602 | -9.7 | 11.1 |
| 13 | விவசாய துறைக்கான தாவர வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புச் செயற்பாடுகள் | 9,258 | 8,404 | 8,363 | 4,123 | 4,602 | -1.4 | 11.6 |
| 14 | காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 58,920 | 58,846 | 54,066 | 22,401 | 23,489 | -20.6 | 4.9 |
| 15 | சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 102,175 | 96,589 | 75,593 | 37,937 | 37,611 | -23.4 | -0.9 |
| 16 | நன்னீர் மீன் பிடிப்பு மற்றும் நன்னீர் வாழ் உயிரின வளர்ப்பு | 16,304 | 16,797 | 18,930 | 7,590 | 8,810 | -1.7 | 16.1 |

அட்டவணை 2.1 :மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2010 நிலையான விலைகள்)

ரூபா. மில்லியன்

| | துறை | 2018 | 2019 | 2020(ஆ) | முதல் காலாண்டு 2020(ஆ) | 2021(அ) | வளர்ச்சி (%) 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **கைத்தொழில்** | **2,541,186** | **2,608,211** | **2,427,844** | **1,126,428** | **1,262,468** | **-14.6** | **12.1** |
| 17 | கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும் | 225,505 | 231,893 | 202,873 | 90,981 | 99,995 | -23.1 | 9.9 |
| 18 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 559,356 | 574,888 | 599,902 | 290,844 | 307,491 | 2.0 | 5.7 |
| 19 | பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 324,565 | 326,803 | 287,844 | 135,957 | 165,915 | -22.7 | 22.0 |
| 20 | மரம் மற்றும் தயாரிப்புக்கள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 34,233 | 31,178 | 28,725 | 12,855 | 14,820 | -6.6 | 15.3 |
| 21 | காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 32,884 | 30,803 | 30,094 | 15,369 | 17,989 | -10.1 | 17.0 |
| 22 | கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 27,312 | 33,694 | 30,026 | 15,471 | 10,988 | -21.0 | -29.0 |
| 23 | இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 97,851 | 100,511 | 101,312 | 46,317 | 53,848 | -10.5 | 16.3 |
| 24 | இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 85,933 | 83,009 | 68,334 | 24,556 | 35,424 | -33.6 | 44.3 |
| 25 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 81,764 | 85,341 | 81,844 | 36,576 | 46,312 | -14.1 | 26.6 |
| 26 | அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலோக உற்பத்தி தயாரிப்புகள் | 48,491 | 46,328 | 45,017 | 21,180 | 25,245 | -1.2 | 19.2 |
| 27 | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள் | 51,697 | 52,578 | 51,285 | 20,361 | 24,441 | -11.7 | 20.0 |
| 28 | தளபாட உற்பத்திகள் | 92,997 | 100,797 | 87,299 | 44,788 | 55,957 | -22.4 | 24.9 |
| 29 | ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள் பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 76,589 | 75,040 | 69,623 | 31,726 | 35,289 | -13.3 | 11.2 |
| 30 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 100,382 | 104,437 | 102,758 | 49,985 | 53,719 | -4.3 | 7.5 |
| 31 | நீர் சேகரிப்பு, துப்புரவாக்கல் மற்றும் விநியோகம் | 14,351 | 15,139 | 15,866 | 7,867 | 8,132 | 4.2 | 3.4 |
| 32 | கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 30,207 | 32,403 | 32,078 | 16,142 | 15,225 | -0.7 | -(5.7) |
| 33 | நிர்மாணம் | 657,070 | 683,371 | 592,963 | 265,453 | 291,677 | -22.6 | 9.9 |
| | **சேவைகள்** | **5,555,325** | **5,678,485** | **5,595,469** | **2,583,781** | **2,715,766** | **-5.2** | **5.1** |
| 34 | மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 1,040,360 | 1,071,847 | 1,086,937 | 567,332 | 580,605 | 1.2 | 2.3 |
| 35 | களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 1,034,755 | 1,048,825 | 978,455 | 367,400 | 397,172 | -17.1 | 8.1 |
| 36 | தபால் கூரியர்/ விரைவுத் தபால் செயற்பாடுகள் | 4,485 | 4,752 | 4,975 | 2,328 | 2,422 | 3.6 | 4.0 |
| 37 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 154,794 | 147,671 | 89,452 | 50,186 | 43,438 | -32.9 | -13.4 |
| 38 | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலி/ ஒளி தயாரிப்புக்கள் | 2,519 | 2,639 | 2,702 | 1,338 | 1,384 | 0.1 | 3.5 |
| 39 | தொலைத் தொடர்பு | 45,830 | 53,695 | 61,990 | 30,829 | 36,788 | 16.0 | 19.3 |
| 40 | தகவல் தொ.நு. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 15,072 | 17,044 | 18,752 | 8,892 | 10,659 | 7.0 | 19.9 |
| 41 | நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் | 687,918 | 701,891 | 778,258 | 379,021 | 431,359 | 7.8 | 13.8 |

அட்டவணை 2.1 :மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2010 நிலையான விலைகள்)

ரூபா. மில்லியன்

| | துறை | 2018 | 2019 | 2020(ஆ) | முதல் காலாண்டு | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2020(ஆ) | 2021(a) | 2020 | 2021 |
| 42 | காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 112,515 | 117,446 | 118,134 | 39,871 | 45,016 | -3.5 | 12.9 |
| 43 | வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 566,078 | 579,601 | 572,799 | 270,350 | 282,797 | -6.0 | 4.6 |
| 44 | தொழில்வாய்மை சேவைகள | 165,550 | 169,523 | 164,949 | 77,784 | 80,286 | -6.8 | 3.2 |
| 45 | பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 428,022 | 437,065 | 443,960 | 202,661 | 205,119 | 0.8 | 1.2 |
| 46 | கல்வி | 179,524 | 185,116 | 186,712 | 91,435 | 92,262 | 3.8 | 0.9 |
| 47 | மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 179,356 | 182,777 | 190,706 | 85,331 | 88,404 | 3.2 | 3.6 |
| 48 | ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 938,547 | 958,592 | 896,688 | 409,024 | 418,056 | -13.5 | 2.2 |
| | மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில் | **8,776,212** | **8,973,108** | **8,693,114** | **4,016,331** | **4,306,080** | **-8.2** | **7.2** |
| | (+) பொருட்கள் மீதான வரிகள் கழி - மானியங்கள் | **889,166** | **910,242** | **837,491** | **211,420** | **257,894** | **-23.0** | **22.0** |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில் | **9,665,379** | **9,883,350** | **9,530,606** | **4,227,751** | **4,563,974** | **-9.1** | **8.0** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) திருத்தப்பட்ட*
*(ஆ) தற்காலிகமானது*

**விவசாயம்**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 7.2 சதவீதத்தைக் கொண்டுள்ள விவசாயத்துறை, 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 7.3 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 7.1 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. இதற்குக் காரணமாக கால்நடை உற்பத்தி, பயிர்களின் இனப்பெருக்கம், தானியங்களினதும் இறப்பரினதும் எண்ணெய் வடிக்கத்தக்க பழங்களினதும் தேயிலையினதும் வளர்ச்சி ஆகியன அமைந்தன. ஆயினும் அரிசி, மற்றைய குடிபான உற்பத்திப் பயிர்கள், இலகுவில் பட்டுப்போகாத பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் கடல் மீன்பிடியும் எதிர்மறையான வளர்ச்சியினைப் பதிவு செய்திருந்தன.

வரைபு 2.3 : விவசாயத்துறை வகுதி - 2021 இன் முதல் காலாண்டு




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

## நெல்

அரிசியின் பெறுமதி சேர்ப்பு 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 16.0 சதவீதச் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 5.6 சதவீத சுருக்கத்தைக் கொண்டிருந்தது. மொத்த நெல்லுற்பத்தி 2020 இன் 5.1 மில்லியன் மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 5.2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்குஅதிகரித்தது. 2020/21 பெரும் போகத்தில் 3.1 மில்லியன் மெற்றிக் தொன்களாகவும், 2021 சிறு போகத்தில் எதிர்பார்க்கப்படும் 2.1 மில்லியன் மெற்றிக் தொன்களாகவும் இருக்கும். 2020/21 பெரும் போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு,2019/20 பெரும் போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பான 752,248 ஹெக்ரயர்களுடன் ஒப்பிடும்போது 770,240 ஹெக்ரயர்களாக உள்ளது.

## தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை

2020 இன் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும்போது, 2021 இன் முதல் அரையாண்டில் தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளினதும்,எண்ணெய் வடிக்கத்தக்க பழங்களினதும் உப துறைகள் முறையே 23.5 சதவீதத்தாலும், 15.8 சதவீதத்தாலும், 10.2 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. 2021 இன் முதல் எட்டு மாதங்களில் தேயிலை உற்பத்தி, 2020 இன் அதே காலப்பகுதியின் உற்பத்தியான 179.4 மில்லியன் கிலோ கிராம்களுடன் ஒப்பிடும்போது, 211.7 மில்லியன் கிலோ கிராம்களாக 18.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதற்கான பிரதான காரணம், முடக்கப்பட்ட காலப்பகுதிகளிலும் தொடர்ச்சியான விவசாயச் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆதரவாகும். ஆயினும், கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் தேயிலையின் மாதாந்த சராசரி விலைகள், 2021 இன் முதல் எட்டு மாதங்களில் 8.1 சதவீதத்தால் கிலோ கிராமொன்றுக்கு ரூ. 591.70 எனக் குறைவடைந்துள்ளது. அதேபோன்று, இறப்பர் உற்பத்தி முதல் ஏழு மாதங்களில், இறப்பருக்குக் கிடைத்த அதிகரித்த கேள்வி காரணமாக உருவாகிய கவர்ச்சிகரமான விலையினால், 12.1 சதவீதத்தால் 56.3 மில்லியன் கிலோ கிராம்களால் அதிகரித்தது. கொழும்பு இறப்பர் ஏலவிற்பனையில், லேரெக்ஸ் கிரேப் 1X இன் சராசரி விலை, 2020 இன் இறுதியிலிருந்த ரூ. 450 இலிருந்து 2021 இன் முதல் எட்டு மாதங்களுக்குள்,51.1 சதவீதத்தால் கிலோ கிராமொன்றுக்கு ரூ. 680 ஆக, குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. தெங்கு உற்பத்தி 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்குரிய 1,848.1 மில்லியன் தேங்காய்களிலிருந்து 10.1 சதவீதத்தால் 2,034.6 மில்லியன் தேங்காய்களாக அதிகரித்துள்ளது. இதற்குக் காரணமாக 2021 இல் நிலவிய சாதகமான காலநிலை உள்ளது. எதிர்காலத் தெங்குத் தேவைகளுக்காகவும், ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகவும், 2021 ஜுலையில், 100,000 தென்னங் கன்றுகள் நடப்பட்டன.

## தானியங்கள், மரக்கறிகள், பழங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் மருத்துவப் பயிர்கள்

தானியங்களின் செய்கை விவசாயத் துறை யின் வளர்ச்சிக்குச் சாதகமான வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வகையில் 2021 இன் முதலரைப்பகுதியில் 21.0 சதவீதமாகப் பங்களிப்புச் செய்துள்ளதுடன், தானிய இறக்குமதி மீதான விசேட பண்டங்கள் வரியை அதிகரிக்கும் அதே வேளை, உணவுப் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு அவ்வாறான பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளின் அதிகரிப்புக்கான அரசாங்கக் கொள்கையின் மூலம் நன்மை கிடைத்துள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட வகையில், மரக்கறிச் செய்கை 4.2 சதவீதத்தாலும், பழச்செய்கை 6.7 சதவீதத்தாலும் 2021 இன் முதலரைப் பகுதியின்போது விரிவடைந்துள்ளன. வாசனைத் திரவியங்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகள், நறுமண மற்றும் மருத்துவப் பயிர்கள் ஆகியன 2021 இன் முதலரைப் பகுதியின்போது, 2020 இன் அதே காலப்பகுதிக்கான 0.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 4.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

## மீன்பிடியும் கால்நடைகளும்

பெறுமதி சேர்க்கப்பட்ட வகையில், கடல் மீன்பிடியும் மீன் வளர்ப்பும் என்ற உப துறை 2021 இன் முதலரைப் பகுதியில், 2020 இன் அதே காலப்பகுதியில் இருந்த 23.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 0.9 சதவீதத்தால் சுருங்கியது. ஆயினும், நன்னீர் மீன்பிடியும் மீன் வளர்ப்பும் என்ற உப துறை, 2021 இன் முதலரைப் பகுதியில், 2020 இன் அதே காலப்பகுதியில் இருந்த 1.7 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 16.1 சதவீதத்தால் விரிவடைந்தது.

மொத்த மீன் உற்பத்தி 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்குரிய 283.5 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது,282.8 மெற்றிக் தொன்களாக ஓரளவுக்குக்குறைவடைந்தது. கால்நடை உற்பத்தி என்ற உப துறை, பெறுமதி சேர்க்கப்பட்ட வகையில், 2021 இன் முதலரைப் பகுதியில், 2020 இன் முதலரைப் பகுதியிலான 9.7 சதவீத சுருங்கலுடனும் ஒப்பிடும்போது, 11.1 சதவீதத்தால் விரிவடைந்தது.

## கைத்தொழிலும் தயாரிப்பும்

கைத்தொழிற் துறையானது 2021 இன் முதலரைப் பகுதியில், 2020 இன் அதே காலப்பகுதியின் 14.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 12.1 சதவீதத்தால் அதிகரித்தது. குறிப்பாக,இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் தயாரிப்புகள் (44.3 சதவீதம்), ஆடைகள், ஆபரணங்கள் மற்றும் தோலினாலான உற்பத்திகளின் தயாரிப்புகள் (22.0 சதவிதம்), உணவு, பான மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்புகள் (5.7 சதவீதம்), கட்டிடத்துறை (9.9 சதவீதம்), தளபாடத் தயாரிப்புகள் (24.9 சதவீதம்), சுரங்கமறுத்தலும் கற்பாறை உடைத்தலும் (9.9 சதவீதம்), இரசாயனப் பொருட் களினதும் அடிப்படை மருத்துவப் பொருட்களினதும் தயாரிப்புகள் (16.3 சதவீதம்), அடிப்படையான உலோக மற்றும் கலப்புலோகப் பொருட்களின் தயாரிப்புகள் (19.2 சதவீதம்), இயந்திரங்களையும் பொறிகளையும் பொருத்துதலும் திருத்தியமைத்தலும் (11.2 சதவீதம்) ஆகியன மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சாதகமான பங்களிப்புகளை வழங்கின. அவ்வாறே கடதாசி உற்பத்திகள், ஊடக உற்பத்திகளின் மறு தயாரிப்பு மற்றும் அச்சிடல் (17.0 சதவீதம்), உலோகமல்லாத கனிமப் பொருட்களின்

தயாரிப்புகள் (26.6 சதவீதம்), இயந்திரங்களினதும் பொறிகளினதும் தயாரிப்புகள் (20.0 சதவீதம்), தளபாடங்கள் தவிர்ந்த மரம் மற்றும் மரத்தாலானதும் தக்கையினாலானதுமான பொருட்களின் தயாரிப்புகள் (15.3 சதவீதம்), நீர் சேகரிப்பு, சுத்தீகரிப்பு மற்றும் வினியோகம் (3.4 சதவீதம்) ஆகியன 2021 இன் முதலரைப்பகுதியில் சாதகமான வளர்ச்சிப் போக்கைக் காண்பித்தன.ஆயினும், 2021 இன் முதலரைப் பகுதியின்போது,கற்கரி உற்பத்தி, சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கழிவு நீர், மற்றைய கழிவுகள் ஆகியவற்றை வெளியேற்றுதலும் சுத்தீகரித்தலும் ஆகிய உப துறைகள் முறையே 29.0 சதவீதத்தாலும், 5.7 சதவீதத்தாலும் சுருங்கின.

வரைபு 2.4 : கைத்தொழிற்துறை வகுதி 2021 இன் முதல் காலாண்டு




மூலம் : தொகைமதிப்புமற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம

மின்சாரம், வாயு, நீராவி ஆகியவற்றின் வினியோகம் மற்றும் குளிரூட்டுதல் ஆகியன, பெறுமதி சேர்ப்பு என்ற வகையில், 2021 இன் முதலரைப் பகுதியின்போது, 7.5 சதவீதத்தால் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. மொத்த சக்திவள உற்பத்தியானது, 2021 இன் முதலரைப் பகுதியின்போது, 2020 இன் அதே காலப்பகுதியின் 7,632 ஜிகாவாட்டுடன் ஒப்பிடும்போது, 6.4 சதவீதமான 8,120 ஜிகாவாட்டாக அதிகரித்தது. கைத்தொழில்களுக்கான மின்சார விற்பனையிலிருந்து கிடைத்த மொத்த வருமானம், 2021 இன் முதலரைப் பகுதியின்போது, 2020 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது, 24.7 சதவீதமான 2,343 ஜிகாவாட்டாக அதிகரித்திருந்தது. இதற்கு கைத்தொழிற் செயற்பாடுகளின் விரிவுபடுத்தல் காரணமாக அமைந்திருந்தது. கலப்புச் சக்திவள உற்பத்தி: வெப்ப (எண்ணெய் எரிபொருள்): வெப்ப (கற்கரி): பாரம்பரியமற்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் காற்றாலை ஆகியவற்றின் விகிதங்களான 26:21:40:13 என்ற வகையில் சாதகமான மாற்றம், 2020 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 20:29:41:10 என்ற விகிதங்களுடன் ஒப்பிடும்போது, 2021 இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஏற்பட்டது. இந்த மாற்றத்திற்கான காரணம் கடுமையான மழை வீழ்ச்சியாக இருந்தது.

வரைபு 2.5 : தயாரிப்புத் துறை வகுதி - 2021 இன் முதல் காலாண்டு




மூலம் : தொகைமதிப்புமற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம

**சேவைகள்**

சேவைகள் துறை 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 5.1 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. இதற்கான பிரதான காரணங்களாக பண்டகசாலை வசதிகள் உள்ளிட்ட போக்குவரத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் (8.1 சதவீதம்), தகவல் தொழில்நுட்ப மென்மொருள் தயாரிப்பு மற்றும் தொடர்புடைய ஆலோசனைச் சேவைகள் (19.9 சதவீதம்), தொலைத்தொடர்பு (19.3 சதவீதம்), நிதிச் சேவைச் செயற்பாடுகளும் துணை நிதிச் சேவைகளும் (13.8 சதவீதம்), காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியம் (12.9 சதவீதம்) ஆகியன இருந்தன. மொத்த மற்றும் சில்லறை வியாபாரத் தொழில் (2.3 சதவீதம்), தபால் மற்றும் 'கூரியர்' செயற்பாடுகள் (4.0 சதவீதம்), நிகழ்ச்சித் தயாரிப்பும் ஒலிபரப்பும் (3.5 சதவீதம்), வசிப்பிட உடைமை உள்ளிட்ட காணி விற்பனை (4.6 சதவீதம்) ஆகியனவும் சாதகமான வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்தன. அதேபோன்று, வாண்மைத்துவ சேவைகளினது பெறுமதி சேர்ப்புகள் (3.2 சதவீதம்), பொது நிர்வாகமும் பாதுகாப்பும் (1.2 சதவீதம்), கல்வி (0.9 சதவீதம்), மனித சுகாதாரச் செயற்பாடுகள் (3.6 சதவீதம்), மற்றைய தனிப்பட்ட சேவைச் செயற்பாடுகள் (2.2 சதவீதம்) ஆகியனவும் 2021 இன் முதலரைப் பகுதியில் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஆயினும், வதிவிடங்கள் மற்றும் உணவும் பானங்களும் வழங்கல் சேவைகள் ஆகியன 2021 இன் முதலரைப் பகுதியில், உல்லாசப் பிரயாணத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் மாகாணங்களுக்கிடையேயான பிரயாணக் கட்டுப்பாட்டாலும், 13.4 சதவீதத்தால் சுருங்கின.

**மொத்த மற்றும் சில்லறை விற்பனை, பொருட்களின் போக்குவரத்து, பண்டகசாலைகள் மற்றும் பிரயாணச் சேவைகள்**

மொத்த மற்றும் சில்லறை விற்பனைச் செயற்பாடுகள், 2021 இன் முதல் அரையாண்டில், 2020 இன் அதே காலப்பகுதியின் 1.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2.3 சதவீதத்தால் விரிவடைந்தன. போக்குவரத்துத் துறை, அதன் 2020 முதல் அரையாண்டின் 17.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடப்படும்போது, 8.1 சதவீதத்தால் வளர்ச்சியைப் பதிவு செய்தது. புதிய வாகனங்களின் பதிவுகள் 2021 இன் முதல் ஒன்பது மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்குரிய 180,886 என்ற எண்ணிக்கையுடன் இருந்து 24,909 எனக் கணிசமான அளவுக்குக் குறைந்தன. இதற்கான காரணம்,வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புத் துறையிலுள்ள சவால்களைச் சமாளிப்பதற்கு அதன் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அரசாங்கத்தினால் வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டதாகும். .

2021 இன் முதல் ஒன்பது மாதங்களில் மோட்டார் கார்களின் பதிவுகள் 85.5 சதவீதத்தால் குறைவடைந்த அதேவேளை அதே காலப்பகுதியில் பஸ்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களின் பதிவுகள் முறையே 53.3 சதவீதம்,70.5 சதவீதம்,95.8 சதவீதம் ஆகக் குறைவடைந்தன. ஆயினும், 2021 இன் முதல் ஒன்பது மாதங்களில் பொருட்களை ஏற்றியிறக்கும் வாகனங்களதும், நிலத்துடன் தொடர்புடைய வாகனங்களினதும் பதிவுகள் முறையே 4.5 சதவீதத்தாலும்,79.9 சதவீதத்தாலும் அதிகரித்தன.

வரைபு 2.6 : சேவைத்துறை வகுதி - 2021 இன் முதல் காலாண்டு




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

அட்டவணை 2.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| சுட்டி | 2017 | 2018 | 2019 | 2020[அ] | 2020 சன.-ஆகஸ்.[அ] | 2021 சன.-ஆகஸ்.[அ] |
|---|---|---|---|---|---|---|
| துறைமுக சேவைகள் | | | | | | |
| வருகை தந்த கப்பல்கள் (இல) | 4,879 | 4,874 | 4,707 | 4,337 | 2,925 | 2,823 |
| மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ '000) | 93,857 | 104,934 | 106,979 | 102,908 | 67,103 | 73,765 |
| மொத்த கொள்கலன் கையாடல் (TEU '000) | 6,209 | 7,047 | 7,228 | 6,855 | 4,545 | 4,797 |
| இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU '000)[ஆ] | 4,826 | 5,704 | 5,955 | 5,765 | 3,843 | 3,987 |
| தொலை தொடர்பாடல் சேவை | | | | | 2020 யூன் இறுதி [அ] | 2021 யூன் இறுதி [அ] |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண்."000)[ஆ] | 1,198 | 1,216 | 2,300 | 1,246 | 1,254 | 1,252 |
| கையடக்க தொலைபேசி (எண். '000) | 28,199 | 32,528 | 32,884 | 28,739 | 27,679 | 2,870 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். '000) | 1,405 | 1,269 | 1,055 | 1,367 | 1,074 | 1,618 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000) | 5,904 | 10,563 | 13,408 | 17,524 | 13,295 | 29,049 |
| சுகாதாரத் துறை | | | | | 2020 யூன் இறுதி [அ] | 2020 யூன் இறுதி [அ] |
| தனியார் வைத்தியசாலைகள் | 181 | 191 | 207 | 217 | 209 | 227 |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 612 | 612 | 603 | 609 | 605 | 609 |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 76,569 | 76,824 | 77,964 | 77,121 | 78,526 | 77,121 |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 20,349 | 19,692 | 18,130 | 19,615 | 18,041 | 18,992 |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 34,221 | 34,714 | 38,276 | 37,634 | 38,569 | 38,743 |
| நிதித் துறை | | | | | 2020 சன. - யூன் இறுதி [அ] | 2020 சன. - யூன் இறுதி [அ] |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 6,213 | 6,882 | 7,387 | 3,619 | 3,615 | 3,620 |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 1,486,545 | 1,710,671 | 1,854,103 | 1,984,525 | 1,903,091 | 2,045,716 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 45 | 43 | 42 | 1,459 | 1,368 | 1,471 |
| பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள் | 6 | 5 | 4 | 58 | 58 | 59 |

அட்டவணை 2.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| சுட்டி | 2017 | 2018 | 2019 | 2020(அ) | 2020 சன.-ஆகஸ்.(அ) | 2021 சன.-ஆகஸ்.(அ) |
|---|---|---|---|---|---|---|
| **சுற்றுலாத்துறை** | | | | | சன. - செப். (அ) | சன. - செப். (அ) |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 2,116,407 | 2,333,796 | 1,913,702 | 507,704 | 507,311 | 37,924 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ டொ.மில்.) | 3,925 | 4,381 | 3,607 | 682 | 682 | 51 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 73.3 | 72.8 | N.A. | 15 | - | – |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | சன. - செப். (அ) | சன. - செப். (அ) |
| பேருந்துகள் | 3,331 | 2,957 | 1,613 | 578 | 507 | 237 |
| கார்கள் | 39,182 | 80,776 | 38,232 | 21,021 | 20,048 | 2,905 |
| லொறிகள்(இ) | 16,742 | 16,931 | 3,738 | 3,941 | 3,102 | 3,241 |
| மோட்டார் சைக்கிள்கள் | 344,380 | 339,763 | 284,301 | 151,634 | 144,399 | 6,031 |
| முச்சக்கர வண்டிகள் | 23,537 | 20,063 | 15,490 | 7,150 | 7,040 | 2,080 |
| நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள் (ஈ) | 13,049 | 10,282 | 7,666 | 8,302 | 5,790 | 10,415 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*
*(அ) தற்காலிக*
*(ஆ) மீள்புதுப்பிக்கப்பட்டமை உள்ளடங்கலாக*
*(இ) பிரத்தியேக நோக்கம் கொண்ட வாகனங்கள், மோட்டார் லொறி மற்றும் ஏனைய லொறிகள் உள்ளடங்கியுள்ளது.*
*(ஈ) நில வாகனங்கள், கைநில வாகனங்கள், இழுவை வண்டிகள் உள்ளடங்கலாக*

2021 இன் முதல் எட்டு மாதங்களில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன் வாகனங்கள், 2020 இன் அதே காலப்பகுதியில் கையாளப்பட்ட 4.5 மில்லியன்கள் இருபது-அடிக்குச் சமமான அலகுகளுடன் (TEUs) ஒப்பிடும்போது, 4.8 மில்லியன்கள் இருபது-அடிக்குச் சமமான அலகுகளாக 5.5 சதவீத அதிகரிப்புடன் காணப்பட்டன. உள்நாட்டுப் போக்குவரத்திற்கும், பரிமாற்றங்களுக்கும், மீள்பாதுகாப்பு இடமாற்றத்திற்கும் கையாளப்பட்ட கொள்கலன்கள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில் முறையே 15.2 சதவீதத்தாலும்,3.7 சதவீதத்தாலும், 39.9 சதவீதத்தாலும் அதிகரித்தன. 2021 இன் முதல் எட்டு மாதங்களில் மொத்தமாகக் கையாளப்பட்ட சரக்குகள், 2020 இன் அதே காலப்பகுதியில் கையாளப்பட்ட 67.1 மில்லியன் மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது,9.9 சதவீதத்தால் 73.8 மில்லியன் மெற்றிக் தொன்களாக அதிகரித்தன. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் உலக விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட மீட்பு இந்த மிதமான வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது.

அட்டவணை 2.3 :சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ. மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020(அ) | 2021(ஆ) | 2017 | 2018 | 2019 | 2020(அ) | 2021(ஆ) |
| சனவரி | 219,360 | 238,924 | 244,239 | 228,434 | 1,682 | 407.0 | 448.5 | 460.3 | 307.0 | 2.3 |
| பெப்ரவரி | 197,517 | 235,618 | 252,033 | 207,507 | 3,366 | 366.3 | 442.3 | 475.0 | 278.9 | 4.5 |
| மார்ச் | 188,076 | 233,382 | 244,328 | 71,370 | 4,581 | 348.8 | 438.1 | 460.5 | 95.9 | 6.2 |
| ஏப்ரல் | 160,249 | 180,429 | 166,975 | - | 4,168 | 297.2 | 338.7 | 314.7 | - | 5.6 |
| மே | 121,891 | 129,466 | 37,802 | - | 1,497 | 226.1 | 243.0 | 71.2 | - | 2.0 |
| ஜூன் | 123,351 | 146,828 | 63,072 | - | 1,614 | 228.8 | 275.6 | 118.9 | - | 2.2 |
| ஜூலை | 205,482 | 217,829 | 115,701 | - | 2,429 | 381.1 | 408.9 | 218.1 | - | 3.3 |
| ஆகஸ்ட் | 190,928 | 200,359 | 143,587 | - | 5,040 | 354.0 | 376.1 | 270.6 | - | 6.8 |
| செத்தெம்பர் | 145,077 | 149,087 | 108,575 | - | 13,547 | 269.0 | 279.8 | 204.6 | - | 18.2 |
| ஒக்தோபர் | 152,429 | 153,123 | 118,743 | - | – | 283.0 | 287.4 | 223.8 | - | – |
| நவம்பர் | 167,511 | 195,582 | 176,984 | - | – | 311.0 | 367.1 | 333.6 | - | – |
| திசெம்பர் | 244,536 | 253,169 | 241,663 | 393 | – | 453.0 | 475.2 | 455.5 | 0.5 | – |
| மொத்தம் | **2,116,407** | **2,333,796** | **1,913,702** | **507,704** | **37,924** | **3,925.3** | **4,380.7** | **3,606.8** | **683** | **51.1** |

*மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை*
*(அ) தற்காலிகமானது*
*(அ) திருத்தியது*

## தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள்

தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் ஆகிய உப துறைகளுக்கான பெறுமதி சேர் உற்பத்திகள், 2020 அரையாண்டில் காணப்பட்ட 32.9 சதவீத சுருக்கத்திலிருந்து சற்று மேம்பட்டு 2021 முதல் அரையாண்டில் 13.4 சதவீதத்தால் சுருங்கின. உல்லாசப் பிரயாணிகளின் வருகைகளது எண்ணிக்கை, 2020 இன் முதல் எட்டு மாதங்களில் 507,311 இலிருந்து, 2021 இன் அதே காலப்பகுதிக்கு 37,924 ஆக 92.5 சதவீதத்தால் குறைவடைந்தது. அதனால், உல்லாசப் பிரயாணத் துறையிலிருந்தான வருமானம் 2021 இன் முதல் ஒன்பது மாதங்களில் 51.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக 92.5 சதவீதத்தால் கணிசமாகக் குறைவடைந்தது.

## தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்ப ஆலோசனை, தபால் சேவைகள்

தொலைத்தொடர்பு என்ற உப துறையின் பெறுமதி சேர் சேவைகள் அவற்றின் வளர்ச்சியைத் தொடர்ந்ததுடன், நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டதாலும், ‘வீட்டிலிருந்தான வேலை’ என்ற கருதுகோளின் அறிமுகத்தாலும் அவற்றிற்குக் கிடைத்த அபரிமித கேள்வியின் காரணமாக, 2021 முதல் அரையாண்டில் 19.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. தகவல் தொழில்நுட்ப மென்பொருள் தயாரிப்பு ஆலோசனைச் சேவையும் அதனோடிணைந்த சேவைகளும் 2021 முதல் அரையாண்டில், எண்மான வர்த்தகச் செயன்முறைகளது அதிக கேள்வி காரணமாக, 19.9 சதவீத வளர்ச்சியுடன் விரிவடைந்தன. அதற்கிடையில், தபால் மற்றும் கூரியர் சேவைகள், 2020 இன் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும்போது 4.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

## நிதிச் சேவைகள், காப்புறுதி மற்றும் காணி விற்பனை, மற்றும் ஏனைய சேவைகள்

நிதி மற்றும் நிதி தொடர்பான துணைத் துறையின் பெறுமதி சேர் சேவைகள், 2020 முதல் அரையாண்டின் 7.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2021 இன் அதே காலப்பகுதியில் 13.8 சதவீதத்தால் விரிவடைந்தன. உப துறையான காப்புறுதி 2021 முதல் அரையாண்டில் 12.9 சதவீத கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள், 2020 ஜூன் இறுதியிலிருந்த ரூ. 755.2 பில்லியன் பெறுமதியுடன் ஒப்பிடும்போது, 2021 இன் அதே காலப்பகுதியில் 7.9 சதவீதத்தால் அதிகரித்து ரூ 814.6 பில்லியன்களை பெறுமதியாகக் கொண்டிருந்தது.

வீடுகளின் உடைமை உள்ளிட்ட காணி விற்பனைச் செயற்பாடுகளின், 2020 முதல் அரையாண்டின் 6.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இன் அதே காலப்பகுதியில் 4.6 சதவீதத்தால் விரிவடைந்தன. பொது நிர்வாகமும் பாதுகாப்பும், கல்வி, வாண்மைத்துவச் சேவைகள், மனித சுகாதார மற்றும் சமூக சேவைச் செயற்பாடுகள் ஆகிய உப துறைகள் 2021 முதல் அரையாண்டில் முறையே 1.2 சதவீதத்தாலும், 0.9 சதவீதத்தாலும், 3.2 சதவீதத்தாலும்,3.6 சதவீதத்தாலும் விரிவடைந்தன.

அட்டவணை 2.4 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%)

| துறை | 2016 | 2017 | 2018 | 2019 | 2020[(a)] | முதல் காலாண்டு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2020[(அ)] | 2021[(ஆ)] |
| விவசாயம் | **4.7** | **-3.7** | **-0.4** | **6.5** | **-2.4** | **-7.3** | **7.1** |
| தேயிலை | -2.5 | -11.2 | 4.5 | 0.4 | -7.1 | -17.9 | 23.5 |
| நெல் | 25.0 | -31.3 | -7.1 | 44.7 | 5.7 | 16.0 | -5.6 |
| இறப்பர் | -10.1 | -10.7 | 4.9 | -0.3 | 4.6 | -10.1 | 15.8 |
| தானியங்கள் | 14.3 | -1.9 | 1.0 | -10.5 | 41.3 | 22.1 | 21.0 |
| மரக்கறிகள் | 2.7 | 2.9 | -5.3 | 4.0 | 10.1 | 8.4 | 4.2 |
| கால்நடைகள் | 8.1 | 7.3 | 5.6 | 8.0 | -4.9 | -9.7 | 11.1 |
| காடாக்கம், விறகு | 1.9 | 8.5 | 19.2 | -0.8 | -8.1 | -20.6 | 4.9 |
| மீன்பிடி | -2.5 | 1.6 | -0.5 | 0.2 | -16.6 | -20.4 | 2.0 |
| கைத்தொழில் | **4.1** | **1.2** | **3.0** | **6.7** | **-6.9** | **-14.6** | **12.1** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | -5.2 | 13.8 | -0.3 | -5.2 | -12.5 | -23.1 | 9.9 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | 2.3 | 2.9 | 4.7 | 1.8 | -3.9 | -10.9 | 14.0 |
| ஏனைய கைத்தொழில்கள் | 2.9 | 10.1 | 4.4 | 6.0 | -0.8 | -2.7 | 4.7 |
| நிர்மாணம் | -2.5 | 8.3 | 4.4 | -2.5 | -13.2 | -22.6 | 9.9 |

| துறை | 2016 | 2017 | 2018 | 2019 | 2020[(a)] | முதல் காலாண்டு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2020[(அ)] | 2021[(ஆ)] |
| **சேவைகள்** | **3.8** | **6.5** | **5.3** | **4.2** | **-1.5** | **-5.2** | **5.1** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 1.3 | 3.8 | 4.7 | 2.5 | 1.4 | 1.2 | 2.3 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | 5.4 | 4.5 | 5.5 | 4.1 | -6.7 | -17.1 | 8.1 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | -5.8 | 4.0 | -1.3 | 4.0 | -39.4 | -32.9 | -13.4 |
| தகவல், தொடர்பாடல் | 7.7 | 11.4 | 12.5 | 8.0 | 14.1 | 13.9 | 19.4 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 5.3 | 14.6 | 14.8 | 11.8 | 9.4 | 13.7 | 6.6 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | 12.8 | 6.4 | 9.6 | 4.2 | -1.2 | -6.0 | 4.6 |
| தொழிற்துறை சேவைகள் | 4.0 | 2.8 | -7.1 | -3.1 | -2.7 | -6.8 | 3.2 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | -10.8 | 5.7 | -1.6 | 4.5 | 2.0 | 2.1 | 1.7 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | -0.8 | 5.2 | 6.9 | 5.2 | 1.6 | 0.8 | 1.2 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக) | 10.0 | 8.6 | 2.9 | 1.3 | -6.5 | -13.5 | 2.2 |
| **மொ.உ.உ.** | **3.4** | **4.5** | **4.8** | **4.2** | **-3.6** | **-9.1** | **8.0** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*
*(ஆ) திருத்தியமைக்கப்பட்டது*

**வேலைவாய்ப்பின்மை**

2021 இன் முதல் அரையாண்டில் “புதிய சாதாரண நிலைமை”க்குப் பொருளாதார மீட்சியைப் பிரதிபலிப்பதற்கு, 2021 இன் இரண்டாவது அரையாண்டில் வேலையின்மை வீதமானது, 2020 இன் முதல் அரையாண்டில் காணப்பட்ட 5.7 சதவீதத்திலிருந்து, 5.1 சதவீதமாகக் குறைவடைந்தது. வேலைவாய்ப்பு வீதம் 94.3 சதவீதத்திலிருந்து 94.9 சதவீதமாக அதிகரித்த அதேவேளை, 2020 இன் இரண்டாம் காலாண்டில் 50.2 சதவீதமாக இருந்த தொழிலாளர் பங்குபற்றல் வீதமானது, 2021 இன் இரண்டாம் காலாண்டில் 49.8 சதவீதமாகக் குறைவடைந்தது.

**வரைபு 2.7 :** தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

2.3 நாணயத்துறையின் அபிவிருத்திகள்

மத்திய வங்கியானது, 2020 மார்ச்சிலிருந்து பெருந்தொற்றின் சவால்களைச் சமாளிப்பதற்காக இணக்கமானதொரு நாணயக் கொள்கையைப் பேணியது. மத்திய வங்கியானது, நிலைத்த வைப்பு வசதி வீதத்தையும் (SDFR);, நிலைத்த கடன் வசதி வீதத்தையும் (SLFR) முறையே 250 அடிப்படை அலகுகளால் 4.5 சதவீதத்திற்கும்,250 அடிப்படை அலகுகளால் 5.5 சதவீதத்திற்கும் 2020 ஜூலையில் கணிசமாகக் குறைத்தது. இவை 2019 இன் இறுதியில் முறையே 7.0 சதவீதமாகவும், 8.0 சதவீதமாகவும் இருந்தன. இதன் நோக்கம் தனியார்துறையின் கடன் வளர்ச்சியைத் தூண்டுவதனூடாக பொருளாதாரச் செயற்பாடுகளைப் புத்துயிர் பெறச் செய்வதாகும். வட்டி வீதத்தைக் குறைப்பதற்காகவும், தனியார்துறையின் கடன் வளர்ச்சியை அதிகரிப்பதற்காகவும் மத்திய வங்கி பல்வேறு கொள்கைத் தீர்மானங்களை மேற்கொண்டது. இவற்றுள் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகளுக்குரிய மூலதனத்திற்கான சலுகை வட்டியுடனான புதிய கடன் திட்டங்களின் அறிமுகமும் அடங்கும். கடுமையான கொள்கை அமுலாக்கத்துடன் தனியார்துறைக்கான கடன்கள் 2020 ஆகஸ்ட்டிலிருந்து 15.1 சதவீதத்தால் ரூபா 6,796 பில்லியன்கள் வரை, 2021 ஆகஸ்ட் இறுதி வரையான காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்டன.

ஆயினும், SDFR இனதும் SLFR இனதும் கொள்கை ரீதியான வட்டி வீதங்கள் ஒவ்வொன்றும் 50 அடிப்படை அலகுகளால் முறையே 5.0 சதவீதமாகவும், 6.0 சதவீதமாகவும் 2021 ஆகஸ்ட்டில் அதிகரிக்கப்பட்டன. அதேவேளை, பொருளாதார வளர்ச்சியின் உயர்வு கருதி, சட்டரீதியான ஒதுக்க விகிதத்தின் **(SRR)** அதிகரிப்பு 2021 செப்தெம்பரிலிருந்து 2.0 சதவீதத்திலிருந்து 4.0 சதவீதமாக இருந்தது.

சராசரியாக நிறையளிக்கப்பட்ட கடன் வீதம் (AWLR) 2021 ஜனவரியின் இறுதியில் 10.17 சதவீதமாக இருந்ததுடன், 2021 ஜூன் மாத இறுதியில் 9.5 சதவீதச் சரிவை நோக்கியிருந்ததுடன்,2021 ஆகஸ்ட் மாத இறுதியில் 9.38 சதவீதமாக மேலும் குறைந்தது. அதற்கிடையில்,சராசரியாக நிறையளிக்கப்பட்ட கடன் விகிதம் 2021 ஜனவரி இறுதியிலிருந்த 5.58 சதவீதத்திலிருந்து 2021 செப்தெம்பரளவில் 4.75 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பல வடிவங்களிலுமுள்ள பணப்புழக்கம் (ஆ2டி) ஜனவரி 2021 இன் இறுதியில் ரூபா. 9,533 பில்லியன்களிலிருந்து 10.3 சதவீதத்தால் அதிகரித்து,2021 ஆகஸ்ட்டின் இறுதியில் ரூபா. 10,514 பில்லியன்களாகக் காணப்பட்டதுடன், தனியார்துறைக்கான கடன்கள் 2021 ஜனவரி இறுதியில் ரூபா. 6,197 பில்லியன்களிலிருந்து 2021 ஆகஸ்ட்டின் இறுதியில் ரூபா. 6,796 பில்லியன்களாக அதிகரித்தது.

வரைபு 2.8 : விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*




### பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (CCPI) அடிப்படையாகக் கொண்டு, 2013=100 என்ற அடிப்படை ஆண்டைக் கொண்டு கணிக்கப்படும் முதன்மைப் பணவீக்கமானது, 2021 இல் ஜனவரி மாதத்தில் 3.0 சதவீதமாக இருந்து, மே மாதத்தில் 4.5 சதவீதமாக உயர்ந்தது. ஆயினும், ஜூன் 2021 இல் பணவீக்கம் 5.2 சதவீதத்திலிருந்து மேலும் அதிகரித்து ஆகஸ்ட்டில் 6.0 சதவீதமாக உயர்ந்தது. உணவுப் பொருட்களினதும் உணவல்லாத பொருட்களினதும் குறிப்பாக அரிசி, பால் மா,தேங்காய், மீன், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையுயர்வு இருந்ததுடன், இந்த எதிர்பாராத விலையுயர்விற்கு சர்வதேச ரீதியான விலையுயர்வுகளும் விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கல்களும், உள்ளூரில் கேள்விக்கும் நிரம்பலுக்குமிடையே ஏற்பட்ட பக்க விளைவுகளும் காரணங்களாக அமைந்தன.

அட்டவணை 2.5 : முதன்மை பணவீக்கம், உள்ளார்ந்த பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013 = 100)

| மாதம் | தலைக்குரிய பணவீக்கம் (%) | | | | மைய பணவீக்கம்* (%) | | | | உணவுப் பணவீக்கம் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | |
| | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 |
| சனவரி | 5.7 | 3.0 | 4.5 | 4.3 | 3.0 | 2.7 | 5.3 | 3.1 | 12.4 | 6.8 | 2.0 | 10.9 |
| பெப்ரவரி | 6.2 | 3.3 | 4.6 | 4.1 | 3.2 | 2.6 | 5.1 | 3.0 | 14.7 | 7.9 | 3.3 | 10.3 |
| மார்ச் | 5.4 | 4.1 | 4.7 | 4.0 | 2.9 | 3.1 | 4.9 | 3.0 | 12.8 | 9.6 | 4.4 | 10.1 |
| ஏப்பிரல் | 5.2 | 3.9 | 4.8 | 3.9 | 3.1 | 3.0 | 4.7 | 3.0 | 13.2 | 9.0 | 5.5 | 9.7 |
| மே | 4.0 | 4.5 | 4.7 | 3.9 | 2.9 | 3.2 | 4.4 | 3.0 | 9.9 | 9.9 | 6.3 | 9.7 |
| யூன் | 3.9 | 5.2 | 4.7 | 4.1 | 3.1 | 3.2 | 4.2 | 3.0 | 10.0 | 11.3 | 7.2 | 9.9 |
| யூ | 4.2 | 5.7 | 4.8 | 4.2 | 3.2 | 3.7 | 4.0 | 3.1 | 10.9 | 11.0 | 8.4 | 9.9 |
| ஆகஸ்ட் | 4.1 | 6.0 | 4.8 | 4.3 | 3.2 | 4.1 | 3.8 | 3.2 | 12.3 | 11.5 | 9.7 | 9.8 |
| செப்தெம்பர் | 4.0 | 5.7 | 4.7 | 4.5 | 2.9 | 5.0 | 3.6 | 3.3 | 11.5 | 10.0 | 10.4 | 9.7 |
| ஒக்தோபர் | 4.0 | - | 4.6 | – | 3.0 | – | 3.4 | – | 10.0 | – | 10.7 | – |
| நவம்பர் | 4.1 | - | 4.6 | – | 3.0 | – | 3.2 | – | 10.3 | – | 11.2 | – |
| திசெம்பர் | 4.2 | - | 4.6 | – | 3.5 | – | 3.1 | – | 9.2 | – | 11.4 | – |

*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**வரைபு 2.9 : தலைக்குரிய பணவீக்கம், முக்கிய பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013 = 100)**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

## 2.4 பங்குச் சந்தை

2021 இன் முதல் ஒன்பது மாதங்களில் பங்குச் சந்தை வேகம் பெற்றதுடன்,நாட்டில் முதலீடுகளில் இடம்பெற்ற மாற்றம் கொழும்பு பங்குச் சந்தையிலும், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவிலும் இடம்பெற்ற எண்ணிம மயமாக்கலும் காரணங்களாக அமைந்தன.சகல பங்குகளுக்குமான விலைச் சுட்டெண் (ASPI) மற்றும் 20 பாரிய கம்பனிகளுக்கான முதலீட்டுச் (S&P SL20) சுட்டெண் ஆகியன முறையே 58.1 சதவீதத்தையும் 43.5 சதவீதத்தையும் 2021 செப்தெம்பர் அளவில், 2020 இல் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது, பதிவுசெய்தன. சந்தை முதலீடுகள் 2021 செப்தெம்பர் இறுதியில், 2020 இன் அதே காலப்பகுதியிலிருந்த ரூபா 2,595.8 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 62.4 சதவீதத்தால் ரூபா 4,215.6 பில்லியன்களுக்கு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தன. அவ்வாறே,நாளாந்தச் சராசரிப் புரள்வு 2021 இன் முதல் ஒன்பது மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்குரிய ரூ. 1,481.6 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 200.7 சதவீதத்தால் ரூபா 4,455.0 மில்லியன்களுக்குக் கணிசமாக அதிகரித்தது. நிகர வெளிநாட்டு விற்பனைகள், 2021 இன் முதல் ஒன்பது மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்குரிய ரூபா 87.0 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, ரூபா 73.5 பில்லியன்களாக இருந்தது.

கொழும்புப் பங்குச் சந்தையானதுஇலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுடன் (SEC) சேர்ந்து, செப்தெம்பர் 2020 இல், பங்குதாரர்களது இடையுறாத அணுகலைப் பேணுவதற்காகவும், முதலீட்டாளர்களது வசதிக்காகவும், செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்குமாக, செயற்பாடுகளை எண்மானப் படுத்தியது. இதன் இரண்டாவது கட்டம் ஜூலை 2021 இல் பூர்த்தி செய்யப்பட்டதுடன், மூன்றாவது கட்டம் 2021 இன் நான்காவது காலாண்டினுள் பூர்த்தி செய்யப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. முதலாவது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டதிலிருந்து 21,110 புதிய கணக்குகள் திறக்கப்பட்டன. மேலும், புதிய கணக்குகளின் நாளாந்த எண்ணிக்கைகள் இரண்டு மடங்காகியுள்ளதுடன்,இளைய முதலீட்டாளர்கள் இதனால் கவரப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 2.6 :மூலதனச் சந்தை அசைவுகள்**

| Indicators | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | End Sep 2020 | End Sep 2021(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 6,895 | 6,228 | 6,369 | 6,052 | 8,120 | 6,774 | 5,985 | 9,460 |
| மிலங்கா விலைச் சுட்டெண்/ S&P SL 20 குறிகாட்டி | 3,626 | 3,496 | 3,672 | 3,135 | 3,062 | 2,638 | 2,463 | 3,535 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்) | 2,938 | 2,745 | 2,899 | 2,840 | 3,599 | 2,961 | 2,596 | 4,216 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 294 | 295 | 296 | 297 | 289 | 283 | 285 | 287 |
| வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்) | 253 | 176 | 221 | 200 | 171 | 397 | 218 | 793 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்) | 89,793 | 74,275 | 94,627 | 100,315 | 68,272 | 104,245 | 87,027 | 73,577 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 84,421 | 74,625 | 112,285 | 77,067 | 56,537 | 52,889 | 46,905 | 28,715 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | -5,372 | 350 | 17,658 | -23,248 | -11,735 | -51,356 | -40,122 | -44,862 |

*மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி*
*(அ) தற்காலிகமானது*

## 2.5 வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளின் அபிவிருத்திகள்

2021 ஆம் ஆண்டில் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுப் பொருளாதாரத் துறை பெருந்தொற்றிலிருந்து மீண்டெழுந்து சாதகமான பண்புகளைக் காட்டுகின்றது. கைத்தொழில், விவசாய, கனிம ஏற்றுமதித் துறைகள் முறையே 24.2 சதவீதத்தால் 6,093.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக, 16.5 சதவீதத்தால் 1,765.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக, 115.3 சதவீதத்தால் 30.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தன. இறக்குமதிச் செலவுகள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதியின் 10,257.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 13,411.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக 30.7 சதவீதத்தால் அதிகரித்தன.

இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவுகள் முறையே 39.5 சதவீதத்தால் அதிகரித்து 7,942.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், 27.9 சதவீதத்தால் அதிகரித்து 2,882.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், 12.1 சதவீதத்தால் அதிகரித்து 2,579.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் இருந்தன. 2021 இன் முதல் எட்டு மாதங்களில், உணவுப் பொருட்களல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவுகள் 11.8 சதவீதத்தால் 2,427.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்ததுடன், இதற்கு மருந்துப் பொருட்களின், குறிப்பாக தடுப்பு மருந்துகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் காரணமாக அமைந்தன.

மொத்தச் சென்மதி நிலுவையின் பற்றாக்குறை 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான பற்றாக்குறையான 722 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2,423 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் உள்வருகையானது,2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 351 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 398 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தன. மேலும்,மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 ஆகஸ்ட் முடிவின்போது 7.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த அதேவேளை,மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள்(GOR), 2021 ஆகஸ்ட் முடிவின்போது, சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட விசேட கடன் உரித்து (SDR) மூலம் பெறப்பட்ட தொகையாலும்,இலங்கை மத்திய வங்கிக்கும் பங்களாதேஷ் மத்திய வங்கிக்கும் இடையேயான இருதரப்பு நாணயப் பரிமாற்றத்தால் பெறப்பட்ட தொகையாலும், 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தன. இதற்கிடையில், இலங்கை நாணயம் அமெரிக்க டொலருக்கு எதிராக 2021 ஒக்தோபர் 18 இல், 6.8 சதவீதத்தால் மதிப்பிறங்கியது.

வரைபு 2.10 : வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**அட்டவணை 2.7 வெளிநாட்டு வர்த்தகம்**

| வகை | 2018 | 2019 | 2020 | சன. - ஆகஸ்ட் 2020 | சன. - ஆகஸ்ட் 2021[a] |
|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | **11,890** | **11,940** | **10,077** | **6,445** | **7,903** |
| விவசாய ஏற்றுமதிகள் | **2,580** | **2,462** | **2,336** | **1,516** | **1,766** |
| தேயிலை | 1,429 | 1,346 | 1,241 | 806 | 882 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,151 | 1,116 | 1,095 | 710 | 883 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | **9,258** | **9,427** | **7,702** | **4,905** | **6,093** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 5,318 | 5,597 | 4,423 | 2,853 | 3,435 |
| உணவு, குடிபானம், புகையிலை | 462 | 447 | 464 | 303 | 354 |
| இறப்பர் உற்பத்திகள் | 875 | 866 | 786 | 489 | 682 |
| இயந்திர மற்றும் உபகரணங்கள் | 435 | 400 | 338 | 210 | 329 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 622 | 521 | 374 | 268 | 295 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 1,546 | 1,596 | 1,317 | 783 | 998 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | **34** | **34** | **25** | **14** | **31** |
| வகுக்கப்படாதவை | **18** | **18** | **14** | **9** | **14** |
| இறக்குமதிகள் | **22,233** | **19,937** | **16,055** | **10,257** | **13,412** |
| நுகர்வுப் பொருட்கள் | **4,980** | **3,957** | **3,402** | **2,300** | **2,579** |
| உணவும் குடிபானமும் | 1,606 | 1,427 | 1,554 | 1,024 | 1,152 |

அட்டவணை 2.7 வெளிநாட்டு வர்த்தகம்

| வகை | 2018 | 2019 | 2020 | சன. - ஆகஸ்ட் 2020 | சன. - ஆகஸ்ட் 2021[(a)] |
|---|---|---|---|---|---|
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 3,374 | 2,530 | 1,847 | 1,277 | 1,427 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **12,488** | **11,369** | **9,077** | **5,692** | **7,942** |
| பெற்றோலியம் | 4,152 | 3,892 | 2,543 | 1,691 | 2,396 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 2,859 | 2,909 | 2,335 | 1,457 | 1,944 |
| கோதுமை மற்றும் சோளம் | 374 | 346 | 384 | 229 | 266 |
| ஏனையவை | 5,104 | 4,222 | 3,814 | 2,315 | 3,336 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,690** | **4,603** | **3,563** | **2,253** | **2,882** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,492 | 2,490 | 2,176 | 1,325 | 1,823 |
| கட்டிடப் பொருட்கள் | 1,525 | 1,509 | 1,036 | 671 | 804 |
| போக்குவரத்து உபகரணம் | 668 | 597 | 348 | 255 | 252 |
| ஏனையவை | 6 | 8 | 3 | 2 | 4 |
| வகுக்கப்படாதவை | **75** | **8** | **14** | **11** | **8** |
| வர்த்தகப் பற்றாக்குறை | **-10,343** | **-7,997** | **-5,978** | **-3,812** | **-5,509** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*
*(அ தற்காலிகமானது.*

### ஏற்றுமதிகள்

ஏற்றுமதிகளிலிருந்தான சம்பாத்தியங்கள்2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 6,445.0 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது,7,903.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக 22.6 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தன. இதற்குக் காரணமாக, ஏற்றுமதித் துறையால் வழங்கப்பட்ட உத்வேகத்துடனான கைத்தொழில், விவசாய, கனிமப்பொருட்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கூறலாம். கைத்தொழில் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 4,905.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தபோது, 6,093.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக 24.2 சதவீத அதிகரிப்புடன் இருந்தன. இதற்குக் காரணமாக, துணிகளினதும் ஆடைகளினதும் ஏற்றுமதியிலிருந்தான 20.4 சதவீதத்தாலான 3,434.8 மில்லியன் அமெரிக்க டொலர்களின் அதிகரிப்பு,மாணிக்கம் வைரம் மற்றும் ஆபரணங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியிலிருந்தான 73.4 சதவீதத்தாலான 178 மில்லியன் அமெரிக்க டொலர்களின் அதிகரிப்பு,இறப்பர் தயாரிப்புகளின் ஏற்றுமதியிலிருந்தான 39.4 சதவீதத்தாலான 681.7 மில்லியன் அமெரிக்க டொலர்களின் அதிகரிப்பு, இயந்திரங்களினதும் பொறிகளினதும் ஏற்றுமதியிலிருந்தான 57.1 சதவீதத்தாலான 329.1 மில்லியன் அமெரிக்க டொலர்களின் அதிகரிப்பு, பெற்றோலியப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தான 10 சதவீதத்தாலான 294.9 மில்லியன் அமெரிக்க டொலர்களின் அதிகரிப்பு ஆகியன இருந்தன. பெற்றோலியப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதிச் சம்பாத்தியத்தின் அதிகரிப்பானது,விமான மற்றும் ஏனைய கலங்களுக்கான எரிபொருட்கள் மற்றும் வெளிநாட்டுக் கலங்களுக்கான எரிபொருட்களின் விலையதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்பட்டதாகும். இதற்கிடையில்,விவசாய ஏற்றுமதிகளிலிருந்தான சம்பாத்தியங்களின் அதிகரிப்பு 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 1,516.0 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 16.5 சதவீதத்தால் 1,765.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. மரக்கறிகளும் சிறிய விவசாய உற்பத்திகளும் தவிர்ந்த தேயிலை, இறப்பர், தெங்கு, வாசனைத் திரவியங்கள், பதப்படுத்தப்படாத புகையிலை, கடலுணவுகள் ஆகியவற்றின் அதிகரித்த வருமானமே இதற்குக் காரணமாகும். இறப்பர், தெங்கு, வாசனைத் திரவியங்கள், கடலுணவுகள் ஆகியவற்றிலிருந்தான சம்பாத்தியங்கள் முறையே 52.7 சதவீதத்தால் 27.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும்,25.0 சதவீதத்தால் 276.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும்,45.2 சதவீதத்தால் 282.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும்,24.3 சதவீதத்தால் 165.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகரித்துள்ளன. தேயிலையிலிருந்தான சம்பாத்தியமானது, குறிப்பாக 2021 ஆகஸ்ட்டின் தேயிலை ஏற்றுமதி அளவுகளின் 805.6 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து,9.5 சதவீதத்தால் 882.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வளர்ந்துள்ளது. அதற்கிடையில், கனிமப் பொருட்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் 115.3 சதவீதத்தால் 30.7 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கணிசமாக அதிகரித்துள்ளதுடன், இதற்கான காரணம் மண் வளங்களினதும் கற்களினதும் சம்பாத்தியங்கள் அதிகரித்ததாகும்.

வரைபு 2.11 : ஏற்றுமதிகளின் வகுதி




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

## இறக்குமதிகள்

இறக்குமதிகளுக்கான செலவுகள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 10,257.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 30.7 சதவீதத்தால் 13,411.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கணிசமாக அதிகரித்துள்ளன. நுகர் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவுகள் 12.1 சதவீதத்தால் 2,579.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளதுடன், இதற்கான காரணமாக உணவினதும் பானங்களினதும், உணவல்லாத நுகர் பொருட்களினதும் இறக்குமதிகளின் அதிகரிப்பாகும். உணவினதும் பானங்களினதும் இறக்குமதிச் செலவுகள், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 1,023.7 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து, 12.5 சதவீதத்தால் 1,151.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளதுடன், தானியங்களினதும் அரைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திகளினதும் இறக்குமதிச் செலவுகள் 16.1 சதவீதத்தாலும், சீனியினதும் இனிப்புப் பொருட்களினதும் இறக்குமதிச் செலவுகள் 30.0 சதவீதத்தாலும் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். உணவல்லாத நுகர் பொருட்களின் இறக்குமதிச் செலவுகள் 11.8 சதவீதத்தால் 1,427.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளதுடன், விசேடமாக கொவிட்-19 இற்கான தடுப்பு மருந்துகள் உட்பட மருத்துவ மற்றும் மருந்துப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பும்,வீட்டுப் பாவனைப் பொருட்களினதும் தொலைத்தொடர்புச் சாதனங்களினதும் இறக்குமதி அதிகரிப்பும் இதற்குக் காரணமாகும். ஆயினும், தனிப்பட்ட வாகனங்கள் மீதான இறக்குமதிச் செலவுகள், மோட்டார் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, 2020 இன் அதே காலப்பகுதிக்கான 280.8 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து,97.2 சதவீதத்தால் 7.8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கணிசமாகக் குறைவுற்றுள்ளன. அதற்கிடையில்,இடைநிலைப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவுகள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 5,692.4 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து,39.5 சதவீதத்தால் 7,942.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக்கணிசமாக அதிகரித்துள்ளன. இதற்குக் காரணமாக எரிபொருள், துணி வகை, துணிகளுக்கான உப பொருட்கள், அடிப்படை உலோகங்கள், இரசாயனங்கள்,பிளாஸ்ரிக் பொருட்களும் இறப்பர் பொருட்களும் அதிகரித்து இறக்குமதி செய்யப்பட்டமையாகும். எரிபொருளுக்கான இறக்குமதிச் செலவுகள், சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பால்,41.7 சதவீதத்தால் 2,395.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளன.

வரைபு 2.12 : இறக்குமதி வகுதி




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

முதலீட்டுப் பொருட்களது இறக்குமதிச் செலவுகள்2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான 2,253.2 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து, 27.9 சதவீதத்தால் 2,882.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளன. மதிப்பாய்வுக்குரிய காலப்பகுதியில் இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் மற்றும் கட்டிடப் பொருட்களினதும் இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். அதன்படி, இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் இறக்குமதிச் செலவுகள் 37.6 சதவீதத்தால், 1,822.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்துள்ளதுடன், கட்டிடப் பொருட்களின் இறக்குமதிச் செலவுகள் 19.7 சதவீதத்தால் 803.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும், போக்குவரத்து உபகரணங்களின் இறக்குமதிச் செலவுகள் 1.2 சதவீதத்தால் 252.1 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகரித்துள்ளன.

### உல்லாசப் பிரயாணத்துறையும் ஊழியர்களது கொடுப்பனவுகளும்

உல்லாசப் பிரயாணிகளது வருகைகள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதியில் வருகைகளான 507,311 என்ற எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 95.2 சதவீதத்தால் 24,377 என்ற எண்ணிக்கைக்குக் குறைவடைந்தது. பெருந்தொற்று காரணமான உலக ரீதியான பிரயாணக் கட்டுப்பாடுகளும் இதற்குக் காரணமாக அமைந்தன. அதன்படி, உல்லாசப் பிரயாணத்துறையிலிருந்தான சம்பாத்தியங்கள், 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதியில்சம்பாதிக்கப்பட்ட 682 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடப்படும்போது, 95.2 சதவீதத்தால் 33 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் குறைவடைந்தது. ஊழியர்களது கொடுப்பனவுகள் 2021 இன் முதல் எட்டு மாதங்களில், 2020 இன் அதே காலப்பகுதிக்கான தொகையான 4,346 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2.8 சதவீதத்தால் 4,224 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஓரளவுக்குக் குறைவடைந்தது.

# அரசுடமைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை | 03

3.1 மேன்நோக்கு

அரசுடமைத் தொழில்முயற்சிகள் முக்கிய பங்காற்றுவ தற்கான வாய்ப்பினை கொவிட் - 19 நோய்த்தொற்று வழங்கியுள்ளது. ஆயினும், கொள்திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமையினால் உந்தப்படும் அரசுடமைத் தொழில்முயற்சிகளின் குறை செயலாற்றுகை மீது அதிகம் கவனஞ்செலுத்தப் பட வேண்டியுள்ளதோடு, அவற்றின் சில செயலாற்று கைகள் பொது திறைசேரிக்கும் சுமையாக மாறி யுள்ளன. எனவே அத்தகைய அரசுடமைத் தொழில் முயற்சிகளை நிதியியல் ரீதியாக வலுவானதும், போட்டித்தன்மையுடனும், புத்தாக்கமிக்க நிறுவனங்க ளாகவும் மாற்றியமைப்பதற்காக கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மேலும் அவசியப்படுகின்றன.

மூலோபாயமிக்க 52 அரசுடமைத் தொழில் முயற்சிகளின் 2021 திரட்டிய தேறிய இலாபம் ரூபா 7.3 பில்லியனாக காணப்பட்டதோடு, இவற்றில் 32 அரசுடமைத் தொழில் முயற்சிகள் ரூபா 102.8 பில்லியனினை வரிக்கு முன்னரான திரட்டிய இலாபமாகவும் பதிவுசெய்திருந்தன. ஆயினும், இத்தகைய செய லாற்றுகையானது, எஞ்சிய 20 அரசுடமைத் தொழில் முயற்சிகளின் ரூபா 95.5 பில்லியன் திரட்டிய தேறிய நட்டத்தின் மூலம் தாக்கத்திற்குட்பட்டன. நிதி மற்றும் தொலைத்தொடர்பாடல் துறைகளினால் செலுத்தப்பட்ட அதிகரித்த பங்கிலாபங்கள் மற்றும் அறவீட்டுக் கொடுப்பனவுகள் ஆண்டுக்கு ஆண்டு 63 சதவீத அதிகரிப்புடன், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களுக்காக 19 அரசுடமைத் தொழில்முயற்சிகள் மாத்திரமே ரூபா 13.7 பில்லியனினை அரசாங்கத்திற்கு பங்கிலாபங்களாகவும் அறவீடுகளாகவும் செலுத்தி யுள்ளன.

அரசாங்க கொள்கை கட்டமைப்பின் முக்கிய நோக்கங் களை அடைவதற்கு வசதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஊதியத் திட்டங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் குறித்து முடிவெடுப்பதற்காக அமைச்சரவையால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிக்கும் வகையில், இலங்கை முதலீட்டுச் சபைக்கு உயர் திறன்மிக்க நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும், அரசுடமைத் தொழில்முயற்சிகளின் நிதி மற்றும் தொழிற்பாட்டு முகாமை முறைமைகளுக்கு தொழில்நுட்பத்தினை உட்புகுத்துவதானது முன்கூட்டியே சரிசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கானதொரு நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக, அரசுடைமைத் தொழில்முயற்சிகள் திணைக்களம் அதன் கண்காணிப்பை மேலும் வலுப் படுத்துவதற்காக விரிவான இணைய வழியிலான தரவுத் தள முறைமையினை ஏற்கனவே பூர்த்திசெய்துள்ளது.

3.2 முக்கிய பத்து அரசுடமைத் தொழில்முயற்சிகள் பற்றிய மீளாய்வு

நிதி, காப்புறுதி, மின்சாரம், நீர் மற்றும் விமான போக்குவரத்து என்பனவற்றினை உள்ளடக்கிய முக்கிய பத்து அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையினை இப்பிரிவு மீளாய்வு செய்கிறது.

இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்துத் தளமானது, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 2,983 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் ரூபா 3,420 பில்லியனுக்கு 14.6 சதவீத்தினால் அதிகரித்து, நாட்டில் முன்னணி வர்த்தக வங்கி என அதன் இருப்பினைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இலங்கை வங்கியின் வைப்புத் தளமானது, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 2,475 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் ரூபா 2,633 பில்லியனுக்கு 6.3 சதவீத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், கொவிட் நோய்த்தொற்றுக் காலத்தில் வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய தொடர்சியியான கடன் தவணை கால நீடிப்பு போன்ற சலுகைகளிலிருந்து பயனடைந்து, வங்கியின் மொத்த அடையாளப்படுத்தப்படாத ஐயக் கடன் விகிதமும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய 4.8 சதவீத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் 4.5 சதவீத்திற்கு 30 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்துள்ளது. வங்கியின் வரிக்கு முனைய இலாபம், 2020 ஆம் ஆண்டின் முழு நிதியாண்டிற்குமாகவும் பதிவாக்கிய ரூபா 24 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது ரூபா 31 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துத் தளமானது, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய, ரூபா 2,230 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் ரூபா 2,495 பில்லியனுக்கு 11.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியன் வைப்புத் தளமும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,835 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ரூபா 2,081 பில்லியனுக்கு 13 சதவீத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் மொத்த அடையாளப்படுத்தப்படாத ஐயக் கடன் விகிதமும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய 3.2 சதவீதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில்

3.3 சதவீத்திற்கு 10 அடிப்படைப் புள்ளிகளினால் சற்று அதிகரித்துள்ளது. 2020 இன் முழு நிதியாண்டுக்குமாகவும் பதிவாக்கிய ரூபா 21.2

பில்லியனுடன் ஒப்பிடுகையில் வங்கியானது, 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போதும் ரூபா 15 பில்லியனினை அதன் வரிக்கு முன்னைய இலாபமாகப் பதிவாக்கியிருந்தது.

இதேவேளை, வங்கி அதன் ஒழுங்குமுறை விகிதங்களை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கடன் பத்திரங்களை விநயோகிப்பதன் ஊடாக மேலதிக வுநைச ஐ மூலதனத்திற்காக ரூபா 3.5 பில்லியனினை வெற்றிகரமாக திரட்டியுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி

2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 1,237 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ரூபா 1,363 பில்லியனுக்கு 10.2 சதவீத்தினால் அதிகரித்த வாடிக்கையாளர் வைப்புக்கள் (மொத்த சொத்துகளில் 90 சதவீதம்) மூலம் உந்தப்பட்டு, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 1,364 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியளவில் தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளமானது ரூபா 1,511 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், வங்கியானது 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாத காலத்தின் போது ரூபா 126 பில்லியன் பெறுமதியான வங்கி வைப்புக்களையும் திரட்டியுள்ளது. அத்துடன், வங்கியின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பட்டியலானது, 2020 ஆம் ஆண்டின்

இறுதியில் பதிவாக்கிய ரூபா 517 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ரூபா

510 பில்லியனுக்கு சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் முழு நிதியாண்டிற்குமாகவும் தேசிய சேமிப்பு வங்கி பதிவாக்கிய ரூபா 15.6 பில்லியன் வரிக்கு முன்னைய இலாபத்திடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது வங்கியானது ரூபா 16.6 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாகப் பதிவுசெய்துள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 2020 ஆம் நிதியாண்டிற்காக வரிக்கு முன்னைய இலாபமாக் பதிவாக்கிய ரூபா 23.7 பில்லியனோடு ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மதங்களின் போது இது ரூபா 13.7 பில்லியனாகக் காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம், 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்காகப் பதிவாக்கிய ரூபா 26.5 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது ரூபா 33.2 பில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 25 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் நிலவிய சாதகமான காப்புறுதி சந்தை நிலைமைகளை மூலதனமாக்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், அதன் சொத்துத் தளத்தை ரூபா 249.5 பில்லியனுக்கு விரிவுபடுத்தியுள்ளதோடு, அதற்கமைய, 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத நிதிகள் முறையே 147.6 பில்லியன், 18.5 பில்லியன் என அடையப்பெற்றிருந்தன.

இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபையின் மின் விற்பனை வருமானமானது, 2020 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 137 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது ரூபா 143 பில்லியனுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மக்கள் நடமாட்டம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் விளைவாக பொருளாதார செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இருப்பினும், நேரடி மின் உற்பத்தி செலவானது, அதிகரித்த மழைவீழ்ச்சியுடன் நீர் மின்னுற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பயனடைந்து, 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 110 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது ரூபா 94 பில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 14 சதவீதத் தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை, பாரம்பரியமல்லாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் குறிப்பாக, சிறிய அளவிலான நீர் மின்னுற்பத்தி உள்ளடங்கலாக காற்று மற்றும் சூரிய சக்தி மூலமான மின்னுற்பத்தி என்பனவும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தன. அவ்வாறே, விற்பனை புள்ளியில் அலகொன்றிற்கான உற்பத்திச் செலவினமும் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய கி.வோ. மணித்தியாலத்திற்கு ரூபா 20.08 இலிருந்து மீளாய்வுக் காலத்தின் போது கி.வோ.மணித்தியாலத்திற்கு ரூபா 17.30 இற்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 13 சதவீதத்தினால் 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு நட்டமானது, 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதிக்காக பதிவாக்கிய ரூபா 23.2 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாத காலப் பகுதியில் கிட்டத்தட்ட ரூபா 1 பில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 96 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மின்சார சபையானது, ரூபா 20 மில்லியன் பெறுமதியான, ஐந்து (5) ஆண்டுகள் முதிர்வு காலத்துடன் கூடிய சிரேஷ்ட, உத்தரவாதமற்ற, பட்டியலிடப்பட்டுள்ள, மீட்டெடுக்கமுடியுமான, மதிப்பீடுசெய்யப்பட்ட கடன் பத்திரங்களை, 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆந் திகதியன்று வெளியிட்டதோடு, இதற்காக ஒப்பப் பணங்களும் மிகையாக கிடைக்கப்பெற்றுள்ளன.

**அட்டவணை 3.1 : மின்னுற்பத்திக் கொள்ளளவு வகுதி**

| | 2020 சன - யூலை | | | 2021 சன - யூலை (தற்காலிக) | | |
|---|---|---|---|---|---|---|
| | நிறுவப்பட்டுள்ள | உற்பத்தி சதவீதம் | | நிறுவப்பட்டுள்ள | உற்பத்தி சதவீதம் | |
| | கொள்திறன் (மெ.வோ) | மொத்த மின்னுற்பத்தியில் | கி.வோ. மணி | கொள்திறன் (மெ.வோ) | மொத்த மின்னுற்பத்தியில் | கி.வோ. மணி |
| நீர் மின்னுற்பத்தி | 1,399 | 20% | 1,864 | 1,383 | 28% | 2,737 |
| அனல் மின்னுற்பத்தி இ.மி.ச. எ.பொ. | 654 | 10% | 961 | 654 | 8% | 841 |
| அனல் மின்னுற்பத்தி ஐ.பி.பி. எ.பொ. | 704 | 19% | 1,756 | 457 | 12% | 1,161 |
| காற்று - இ.மி.ச. | – | – | – | 31 | 2% | 150 |
| அனல் மின்னுற்பத்தி - நிலக்கரி | 900 | 41% | 3,936 | 900 | 38% | 3,825 |
| என்.சி.ஆர்.இ. மற்றும் காற்று | 660 | 8% | 782 | 698 | 10% | 1,024 |
| வீட்டுக் கூரை மீதுள்ள சூரிய மின்கலம் | 236 | 2% | 154 | 305 | 2% | 214 |
| **மொத்தம்** | **4,553** | **100%** | **9,453** | **4,428** | **100%** | **9,952** |

*மூலம் : அரசுடமை தொழில் முயற்சிகள் மற்றும் பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்*

இதேவேளை, மூலதனத் தேவைப்பாடுகளுக்காக அரச வங்கிகளிடமிருந்தான சபையின் கடன் பெறுகைகள், 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் போது பதிவாக்கிய ரூபா 41.5 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் ரூபா 24.5 பில்லியனுக்கு 41 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், திட்டக் கடன்கள் உள்ளடங்கலாக அரச வங்கிகளுக்கான இ.மி.சபையின் மொத்த நிலுவைக் கடப்பாடுகள், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 371.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் யூலை மாதம் இறுதியில் இது ரூபா 365.5 பில்லியனாக காணப்பட்டது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்கள் என்பனவற்றிற்கான வர்த்தக செல்மதிகள் என்பனவும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 136 பில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ரூபா 128 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 4,584 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களுக்காக

கூட்டுத்தாபனமானது ரூபா 61,886 மில்லியனினை நட்டமாகப் பதிவாக்கியிருந்தது. சர்வதேச எண்ணெய் விலைகள் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ.51 இலிருந்து பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ.75 இற்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தமை மற்றும் ஐ.அ.டொலருக்கு எதிராக ரூபா பெறுமதியானது ரூபா 182.73 இலிருந்து ரூபா 199.49 இற்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 9 சதவீத்தினால் பெறுமதியிறக்கம் அடைந்தமை என்பன இதற்கு பிரதான காரணங்களாக அமைந்தன. இருப்பினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி மீதான தாக்கமானது இரண்டு அரச வங்கிகளின் அதாவது இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவற்றின தற்காலிக நிதியளிப்பு மூலம் ஈடுசெய்யப்பட்டதோடு, 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் இது ரூபா 707,505 மில்லியனாக காணப்பட்டது.

பெற்றோலிய முடிவுப் பொருட்கள் மீதான 2,942 மில்லியன் கேள்வியைப் பூர்த்திசெய்யும் வகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூபா 253,668 மில்லியன் திரட்டிய செலவில் 18.4 மில்லியன் பீப்பாய் மசகு எண்ணெய்யினை இறக்குமதிசெய்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதிக்கு பதிவாக்கிய ரூபா 268,225 மில்லியன் மொத்த விற்பனைச் செலவுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது இது ரூபா 315,885 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 17 சதவீத்தினால் அதிகரித்துள்ளது.

ஒரு சில பெற்றோலிய செலவினங்களைத் தாங்கிக் கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் பெற்றோலியப் பொருட்களின் சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்ட போதிலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ரூபா 17,402 மில்லியன் தொழிற்பாட்டு இலாபத்தோடு ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது கூட்டுத்தாபனம் ரூபா 18,848 மில்லியனினை தொழிற்பாட்டு நட்டமாகப் பதிவுசெய்துள்ளது.

இதேவேளை, கடன் நிலுவைக் கடன்களை டொலர்களில் தீர்ப்பதற்கான அழுத்தம் காரணமாக, 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்கான ரூபா 11,516 மில்லியனோடு ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களுக்கான நிதிச் செலவினமானது ரூபா 13,709 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 19 சதவீத்தினால் அதிகரித்ததனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடுமையான நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியிலுள்ளவாறாக, ரூபா

152,430 மில்லியனுக்கு அதிகரித்த கடன் வருமதிகள் இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலமையினை மோசமாக பாதித்துள்ளது.

எனவே அனைத்துக் காரணிகளையும் ஒன்றுதிரட்டிப் பார்க்கையில், உலகளாவிய எரிபொருள் விலைகளின் தளம்பலினால் ஏற்படுகின்ற தாக்கத்தைத் தணிக்கும் வகையில் இலங்கைப் பெற்றொலியக் கூட்டுதாபனமானது, முதலீட்டாளர்களுடன் இணைந்து சுத்திகரிப்புத் திறன் மற்றும் களஞ்சியசாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக பன்முனை உத்திகளை பின்பற்றுவதற்கும் ஆராய்ந்துவருகின்றது.

இலங்கை துறைமுக அதிகார சபை

துறைமுகம் தொடர்பான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை அரசாங்கம் 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது தீவிரப்படுத்தியுள்ளது. அதற்கமைய, இலங்கை துறைமுக அதிகார சபையானது, தனியார் துறையின் பங்களிப்புடன் கிழக்கு மற்றும் மேற்கு கொள்கலன் முனையங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்ததோடு, அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் கிழக்கு மற்றும் மேற்கு கொள்கலன் முனையங்கள் என்பனவற்றின் அபிவிருத்திப் பணிகளை ஒன்றோடொன்று இணைந்த தாக அபிவிருத்திசெய்வதற்கான பணியில் ஈடுபட்டுள்ள தோடு, சர்வதேச கப்பல் போக்குவரத்துத் துறையில் அதிகரித்து வரும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 2025 ஆம் ஆண்டளவில் இத்திட்டத்தினை முழுமையாக செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது 2,249 சரக்கு மற்றும் ஏனைய பிற கப்பல்கள் இலங்கை துறைமுக அதிகார சபையினால் இயக்கப் படும் கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களுக்கு வந்து சென்றுள்ளன, இது 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 5 சதவீத வீழ்ச்சியாகும். ஆயினும், இலங்கை துறைமுக அதிகார சபையானது 1.28 மில்லியன் இருபது அடி நீளமான செயல்திறன்மிக்க மாத்த செயல்திறனமிக்க கொள்களன்களைக் கையாண் டுள்ளதோடு, 2021 இன் முதல் ஏழு மாதங்களில் இது 7 சதவீதம் அதிகரிப்பைப் பதிவாக்கியிருந்தது.

இலங்கை துறைமுக அதிகார சபையானது திசைப் படுத்தல், சரக்கு ஏற்றி இறக்குதல், கலத்துரை மேடை கையாளல், துறைமுக வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய சேவைத் தொழிற்பாடுகள் மூலம் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் திரட்டிய ரூபா 26,545 மில்லியன் வருமானத்தோடு ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது அதன் வருமானமானது, ரூபா 31,207 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 18 சதவீதத்தினால் அதிகரித்துள்ள வேளையில், இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த செலவினமும் ரூபா 18,340 மில்லியனுக்கு 6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின் வரிக்கு முன்னைய இலாபம், 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 8,436 மில்லியனோடு ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது இது ரூபா 11,525 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 37 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அத்துடன், நிறுவனத்தின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன் பட்டியலும், 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியளவில் முறையே, ரூபா 55,434 மில்லியன் மற்றும் ரூபா 8,364 மில்லியன் எனப் பதிவாக்கியிருந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் முழு மொத்த சனத்தொகைக்கும் தூய மற்றும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணித்த இலக்குடன் இணைந்த வகையில், 2020 ஆம் ஆண்டில் பதிவாக்கிய, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நீர் வழங்கல் பரப்பெல்லையினை 43.8 சதவீதத்திலிருந்து 78.8 சதவீதத்திற்கும், குழாய்வழி கழிவு நீரகற்றல் செயற்பாட்டினை 2.2 சதவீதத்திலிருந்து 3.0 சதவீதத் திற்கும் 2025 ஆம் ஆண்டளவில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மொத்த குழாய் நீர் வழங்கல் 55 சதவீதத்திற்கும், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் 95.1 சதவீதத்திற்கும், குழாய் வழி கழிவகற்றல் 2.05 சதவீதத்திற்கும் 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியிலுள்ளவாறு அதிகரித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ரூபா 15,928 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது ரூபா 16,560 மில்லியனைப் பதிவாக்கி ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது.

ஆயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த இலாபமானது, 2021 இன் முதல் ஏழு மாதங்களின் போது விற்பனைச் செலவில் ஏற்பட்ட சற்று அதிகரிப்பு மற்றும் ரூபா 1,011 மில்லியன் தொழிற்பாட்டு நட்டத்தில் அவதானிக்கப்பட்ட அதன் குற்றலைத் தாக்கம் என்பன காரணமாக 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ரூபா 198 மில்லியன் தொழிற்பாட்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, ரூபா 1,011 மில்லியனினை தொழிற்பாட்டு நட்டமொன்றாகப் பதிவாக்கியதன் காரணமாக சபையின் முதல் ஏழு மாதங்களின் போதான மொத்த இலாபமானது, ரூபா 6,298 மில்லியனுக்கு 7.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது தற்போதுள்ள 2.66 மில்லியன் மொத்த

இணைப்புகளுடன் 101,861 புதிய நீர் இணைப்புகளை முறைமையில் சேர்த்துள்ளதோடு, 471 மில்லியன் கன மீற்றர் நீரினை உற்பத்திசெய்து 352 மில்லியன் கன மீற்றர் நீரினை விற்பனைசெய்துள்ளது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் பதிவாக்கிய 24.6 சதவீத வருமானம் அல்லாத நீரானது, 2021 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியில் 25.3 சதவீதத்திற்கு அதிகரித்து, இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விவேகமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எச்சரித்துள்ளது.

நகர்புறத் திட்டங்களில் 50 சதவீதத்தினையும் கிராமப்புற திட்டங்களில் 75 சதவீதத்தினையும், தீராத சிறுநீரக நோய்க் குறைப்புத் திட்டங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 100 சதவீத கடப்பாட்டினையும் மொத்தமாகத் தீர்ப்பதற்கான அதன் பங்களிப்பாக, பொதுத் திறைசேரியானது 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது அதன் நிதி ஒத்துழைப்பாக ரூபா 8,447 மில்லியனினை மொத்த நிதி ஒத்துழைப்பாக சபைக்கு வழங்கி பங்களிப்புச் செய்துள்ளது.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்

கொவிட்ட-19 நோய்த்தொற்று மற்றும் அது தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் என்பன விமான சேவைகள் துறையில் பயணிகள் மற்றும் சரக்கு விமானப் பயணத்திற்கான தேவையை கணிசமாகக் குறைத்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 166,648 பயணிகளின் உள்வருகையும், 125,525 பயணிகளின் வெளிச்செல்கையும் மாத்திரமே பதிவுசெய்துள்ளன. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனம் முன்னைய நிதியாண்டில் பதிவாக்கிய ரூபா 3,748 மில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களின் போது ரூபா 1,792 மில்லியனை தேறிய நட்டமொன்றாகப் பதிவுசெய்துள்ளது.

2024 ஆம் ஆண்டளவில் ஆண்டொன்றுக்கு 15 மில்லியன் பயணிகளுக்கான கொள்திறனினை அதிகரிக்கும் நோக்கில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முக்கிய உட்கட்டமைப்பு திட்டங்களில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனம் முதலீடு செய்துள்ளது. எயார்போர்ட்ஸ் கவுன்சில் இன்டர்நேசனல் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள விமான நிலைய சுகாதார அங்கீகார சான்றிதழுடன் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையமானது, உலகளவிய ரீதியாக கி.த 17,600 வணிக ரீதியாக சான்றிதழ் அளிக்கப்பட்ட அத்தகைய விமான நிலையங்களுக்கு மத்தியில் 600 விமான நிலையங்களில் ஒன்றாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ்

எல்லைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டும், விமான நிலையங்கள் தொடர்ச்சியாக அடைக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய சுமை காவு விமானமாக ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம், உலகளாவிய வர்த்தகத்தைப் பேணி, நிர்க்கதியாகத் தவித்த இலங்கையர்களை நாட்டிற்குள் மீள அழைத்து வரும் பணியில் அதிகம் பங்களித்துள்ளது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்துடன் முடிவடைந்த முழு நிதியாண்டிற்காகவும் நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட 166,969 பயணிகளுடன் ஒப்பிடுகையில், ஆசனக் காரணிகளைப் பேணி 121,944 பயணிகளை அதவாது 20 சதவீத பயணிகளை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் யூலை வரையில் நகர்த்துவதற்கு நிறுவனத்திற்கு முடிந்துள்ளது. 2020∴21 ஆம் ஆண்டு முழுவதிலும் நிறுவனத்தினால் நகர்த்தப்பட்ட 56,406 தொன் மொத்த சரக்குகளுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் யூலை மாதம் வரையான காலப் பகுதியில் நிறுவனம் 29,442 தொன் சரக்குகளை மாத்திரமே நகர்த்தியுள்ளது.

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் 2021 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் முடிவடைந்த முழு நிதியாண்டுக்குமாகவும் வருமானமாகப் பதிவாக்கிய ரூபா 39,600 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் யூலை வரையான காலப் பகுதிக்காக நிறுவனம் ரூபா 28,600 மில்லியனினை வருமானமாக ஈட்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் யூலை வரையான நிறுவனத்தின் தேறிய நட்டமானது, 2020∴21 நிதியாண்டில் பதிவாக்கிய ரூபா 58,066 மில்லியனோடு ஒப்பிடுகையில் ரூபா 24,800 மில்லியனாக காணப்பட்டது.

**அட்டவணை 3.2 : பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டல் தன்மை**

ரூபா மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2019* | 2020* | 2021.07.31 அன்றுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை மத்திய வங்கி | 29,685 | 23,552 | 31,056 |
| 2 | மக்கள் வங்கி | 19,666 | 21,227 | 15,006 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 10,462 | 15,645 | 16,652 |
| 4 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 465 | 587 | 316 |
| 5 | எச்.டி.எப்.சி. வங்கி | 774 | 978 | 638 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 1,222 | 1,586 | 412 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதிய சபை | 29,761 | 32,500 | 2,475 |
| 8 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 19,865 | 23,663 | 13,728 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 3,009 | 9,015 | 4,523 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 253 | 265 | **183 |
| 11 | விவசாயம் மற்றும் கமநல காப்புறுதிச் சபை | 627 | 1,257 | 207 |
| 12 | இலங்கை மின்சார சபை | -85,411 | -62,561 | -929 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | -11,836 | 2,371 | -61,886 |

| | தொழில்முயற்சிகள் | 2019* | 2020* | 2021.07.31 அன்றுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான |
|---|---|---|---|---|
| 14 | இலங்கைத் துறைமுக அதிகார சபை | 16,155 | 20,327 | 11,525 |
| 15 | தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை | -1,111 | 663 | -825 |
| 16 | விமான நிலைய, விமான சேவைகள் கம்பனி | 15,223 | -3,748 | -1,792 |
| 17 | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் (அ) | -47,198 | -58,066 | -24,800 |
| 18 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 1,890 | -2,383 | -3,215 |
| 19 | இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம் | -976 | -997 | -730 |
| 20 | மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் | 340 | 261 | -6 |
| 21 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | -844 | -243 | -106 |
| 22 | மில்கோ லிமிட்டெட் | -619 | 417 | 240 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | -362 | 6 | **110 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | -330 | -150 | -95 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | -757 | -350 | -118 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 120 | 214 | 289 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 64 | 283 | 295 |
| 28 | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பனி | -53 | 43 | -34 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 43 | 15 | **2 |
| 30 | லங்கா மினரல்ஸ் சான்ட்ஸ் லிமிட்டெட் | 1,982 | 69 | 450 |
| 31 | லங்கா பொசுப்பேற்று லிமிட்டெட் | 21 | 66 | **23 |
| 32 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டெட் | 21 | 1 | 6 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,897 | 2,994 | 1,857 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,323 | 1,435 | **1,369 |
| 35 | அரச மருந்தாக்கல், உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 592 | 1,164 | 653 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் | 3 | 9 | 5 |
| 37 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 2,176 | 2,546 | 485 |
| 38 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை | -94 | 174 | 21 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | -571 | -213 | -244 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | -501 | -234 | -56 |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | -101 | -28 | 29 |
| 42 | இலங்கை கைப்பணிச் சபை | 99 | -98 | -58 |
| 43 | அரச மரக் கூட்டுத்தாபனம் | 317 | 464 | 80 |
| 44 | எஸ்டிசி ஜெனரல் ரேடிங் கம்பனி | -27 | -120 | **31 |
| 45 | லங்கா சதொச லிமிட்டெட் | -2,982 | -1,381 | **-151 |
| 46 | அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | -169 | 23 | **-226 |
| 47 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | -100 | -48 | -43 |
| 48 | இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனம் | -71 | -109 | -83 |
| 49 | இலங்கை உரக் கம்பனி லிமிட்டெட் | 189 | 268 | 12 |
| 50 | கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி லிமிட்டெட் | 306 | 241 | 58 |
| 51 | ஹோட்டல் டிவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி | -312 | -892 | -153 |
| 52 | லங்கா சீனிக்கம்பனி லிமிட்டெட் | -1,304 | 1,171 | 158 |
| | மொத்தம் | **3,821** | **33,879** | **7,344** |

*மூலம் : அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

* *தற்காலிகமானது*

** *2021.06.30 அன்றுள்ளவாறான இலாபமீட்டல் தன்மை (சன - யூன் 2021)*
*(அ) மார்ச்சு 31 அன்றுடன் முடிவடைந்த நிதியாண்டு (அ-து 2020-2020/21)*

## அட்டவணை 3.3 : அரசுடமைத் தொழில்முயற்சிகளின் அறவீடுகள் / பங்கிலாபம்

ரூபா மில்லியன்

| | மெய் | | | கணிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | **2019** | **2020** | 2021.07.31 அன்றுள்ள வாறு | **2022** | **2023** |
| **அறவீடு** | **22,634** | **14,769** | **10,058** | **22,537** | **22,610** |
| தேசிய சேமிப்பு வங்கி | 2,000 | 1,000 | 1,500 | 1,510 | 1,520 |
| இலங்கை வங்கி | – | 1,250 | 1,500 | 2,010 | 2,020 |
| மக்கள் வங்கி | 2,200 | 2,500 | 500 | 3,000 | 3,000 |
| தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 8,950 | 5,000 | 5,500 | 10,050 | 10,100 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 169 | - | - | – | – |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 50 | - | - | 50 | 50 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 3,268 | 782 | 412 | 2,000 | 2,000 |
| புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 2,300 | - | - | 350 | 350 |
| தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை | 25 | - | - | 15 | 15 |
| இலங்கை முதலீட்டுச் சபை | 250 | 156 | - | 500 | 500 |
| பிணையங்கள் மற்றும் பரிவரத்தனை ஆணைக்குழு | 53 | - | - | – | – |
| இலங்கை ஏற்றுமதி வரவுக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 15 | - | - | 25 | 25 |
| மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் | 25 | - | - | 25 | 25 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் | 500 | - | - | 300 | 300 |
| சிவில் விமானப் போக்வரத்து அதிகார சபை | 800 | - | - | 500 | 500 |
| அரச மருந்தாக்கல், உற்பத்திக் கூட்டுத்தாபனம் | | | | 200 | 200 |
| அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | | | | 200 | 200 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் | 200 | - | - | 200 | 200 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 650 | - | - | 500 | 500 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 50 | - | - | – | – |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் | 200 | - | - | 300 | 300 |
| இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு | 29 | - | - | 150 | 150 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 900 | - | - | – | – |
| தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகார சபை | - | 81 | 80 | 82 | 83 |
| தேசிய வணிக முகாமை நிறுவனம் | | | 16 | 18 | 20 |
| இலங்கை ஆயுர்வேத மருத்துவ கூட்டுத்தாபனம் | | | | 2 | 2 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | - | 4,000 | - | – | – |
| நில சீர்திருத்த ஆணையகம் | | | 350 | 350 | 350 |
| தேசிய லொத்தர் சபை | | | 200 | 200 | 200 |
| **பங்கிலாபங்கள்** | **5,025** | **2,855** | **3,685** | **5,818** | **5,881** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 30 | 65 | 70 |
| இலங்கை வங்கி | 346 | 347 | 173 | 350 | 355 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 158 | 320 | 321 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | 1 | 1 | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுததாபனம் | 1,720 | 695 | 899 | 2,000 | 2,000 |
| விமான நிலைய, விமான சேவைகள் லிமிடெட் | 500 | - | - | 350 | 400 |
| இலங்கை கனிப்பொருள் மணல்கள் | 130 | - | 500 | 500 | 500 |
| இலங்கை பொஸ்பேர்ட் லிமிடெட் | 7 | - | 5 | 5 | 7 |
| லங்கா லெய்லண்ட் லிமிடெட். | 13 | 2 | - | – | – |
| ரக்ணா ஆரக்சக லங்கா லிமிடெட் | 37 | - | - | 30 | 30 |

| | மெய் | | | கணிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | **2019** | **2020** | 2021.07.31 அன்றுள்ள வாறு | **2022** | **2023** |
| மந்தாய் சோல்ட் லிமிடெட் | – | 2 | 1 | 8 | 8 |
| லங்கா பேர்டிலைஸர் லிமிடெட் | 15 | 304 | - | 8 | 8 |
| கொழும்பு கொமர்சல் பேர்டிலைஸர் கம்பனி லிமிடெட் | 10 | - | - | 10 | 10 |
| பரந்தன் கெமிகல் கம்பனி லிமிடெட் | – | 10 | - | 20 | 20 |
| ஸ்ரீ லங்கா டெலிகொம் | 947 | 947 | 1,331 | 1,350 | 1,350 |
| டி லா ரு லங்கா லிமிடெட் | 133 | - | 159 | 175 | 175 |
| இலங்கை மின்சாரக் கம்பனி | 501 | - | 327 | 350 | 350 |
| இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழில் லிமிடெட் | 82 | 82 | - | 60 | 60 |
| சிலோன் எக்றொ இன்டஸ்ரீஸ் | 23 | 77 | 48 | 100 | 100 |
| லங்கா லொஜிஸ்ரிக் லிமிடெட் | – | - | - | – | – |
| லங்கா திரிபோஷ லிமிடெட் | | | | 30 | 30 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 172 | 12 | 53 | 86 | 86 |
| ஏனையவை | 12 | - | - | 1 | 1 |
| மொத்தம் | **27,659** | **17,624** | **13,743** | **28,355** | **28,491** |

*மூலம் : அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

# 04

# 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்

## 2022 வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படை விடயங்கள்

2022 பாதீட்டில் பேரண்டப் பொருளாதார மற்றும் நிதி தொடர்பான விடயங்கள், பாதீட்டுத் தயாரிப்பின்போது, தொடரானதொரு ஊகங்களுக்கு, ஆராய்வுகளுக்கு, பணியாட்தொகுதியினரது தீர்மானங்களுக்கும் அடிப்படைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மதிப்பீடுகளின் தன்மைகளை வழங்கும் அதே வேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகள் பற்றிய முன்னேற்றங்கள், வேலைவாய்ப்பின்மை போன்ற பேரண்டப் பொருளாதாரச் சுட்டிகளின் விபரங்களையும், மற்றும் வருமானத்தையும் செலவினங்களையும் கணிப்பதற்கான ஊகங்கள் ஆகியவற்றையும் இது தருகிறது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி

உள்நாட்டிலும் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளிலும் சவால்கள் எதிர்நோக்கப்பட்டாலும், 2021 இன் முதலாவது அரைப்பகுதியில் 8.0 சதவீத கவனிக்கத்தக்க பொருளாதார வளர்ச்சியுடன், இலங்கைப் பொருளாதாரத்தின் ‘V வடிவ’ பொருளாதார மீட்சியொன்று தொடர்கிறது. சிறந்த முகாமைத்துவத்துடனான தடுப்பு மருந்தேற்றல் மற்றும் பெருந்தொற்றைச் சமாளிப்பதிலும் எளிதாகப் பாதிக்கப்படத்தக்க மக்களைப் பாதுகாப்பதிலும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன், 2022 இல் பொருளாதார வளர்ச்சியானது 5.0 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவடைதலானது, துறைமுக நகரம், தொழில்நுட்பப் பூங்காக்கள், துணி தயாரிப்புப் பூங்கா, மருந்துவ வலயம் போன்ற விசேட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் ஆகியவற்றுக்கான எதிர்பார்க்கப்படும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மூலமும் மேலும் ஆதரவளிக்கப்படும். இலகுபடுத்தப்பட்ட துறைமுகச் செயற்பாடுகளுடனான அரசாங்கத்தின் எண்மானப்படுத்தும் முயற்சி மூலமாக இது மேலும் பலப்படுத்தப்படும். ஆயினும், பெருந்தொற்று சம்பந்தப்பட்ட அபாயங்களும் அவற்றின் இயங்குநிலையும், விநியோகங்கிளிலுள்ள தடங்கல்களும், வேலைவாய்ப்பின்மையினதும் பணவீக்கத்தினதும் அதிகரிப்பும் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியில் தாக்கம் செலுத்துபவையாக அமைந்துள்ளன.

கேள்விப் பக்கத்திலிருந்து, தனியார் மற்றும் அரச துறைகளது நுகர்வுச் செலவுகள், நிகர ஏற்றுமதிகளும் மொத்த நிலையான சொத்துக்களும் 2022 இன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் விடயங்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிரம்பல் பக்கத்திலிருந்து, விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகிய பாரிய பொருளாதாரத் துறைகள் வளர்ச்சிக்குச் சாதகமான பங்களிப்புகளை வழங்கும். விவசாயத்துறை குறிப்பாக, பழங்கள், மரக்கறிகள் மற்றும் பூக்கன்றுகளின் பாகங்கள் ஆகிய பாரம்பரியமற்ற விவசாயப் பொருட்களுக்கு மேலதிகமாக, பெருந்தோட்டப் பயிர்களும் ஏற்றுமதிப் பயிர்களும் எதிர்பார்க்கப்படும் சாதகமான காலநிலை மற்றும் தெளிவான கொள்கைகளால் மீட்சி பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. மற்றைய முக்கிய துறைகளுள், தயாரிப்புக் கைத்தொழில் மற்றும் கட்டிடத்துறை ஆகியவற்றிலிருந்தான நன்மைகளில், 2022 இல் கைத்தொழிற் துறை மீளெழுச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பாரிய பங்களிப்பை வழங்கும் சேவைத்துறையானது, சாதகமான பங்களிப்பை வழங்கி மேலும் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சாதகமான பங்களிப்புகள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், போக்குவரத்து, நிதிச் சேவைகள் மற்றும் காணி தொடர்பான சொத்துகள் விற்பனை ஆகியவற்றிலிருந்து கிடைக்கும். நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் சேவைத்துறையின் விரிவாக்கத்தில் ஊக்கிகளாகத் தொழிற்படும்.

### நுகர்வோர் விலைகள்

பெருந்தொற்றின் விளைவாக உள்நாட்டிலும் வெளிநாட்டுத் தொடர்புகளிலும் கேள்வி மற்றும் நிரம்பலில் ஏற்பட்ட பொருத்தமின்மை காரணமாக, 2021 இன் முதல் அரைப்பகுதியில் காணப்பட்ட விலை அதிகரிப்புகள் இருப்பினும், தற்போதுள்ள உயர் பணவீக்கம் 2022 இல் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன், மத்திய நிலை ஒற்றை இலக்க மட்டத்தில் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு வழங்கல் பக்கத்தைச் சீராக்குவதில் உதவும். இதற்கு மேலதிகமாக, வணிக மற்றும் நாணயக் கொள்கைக் கருவிகள், தேவையானபோது உரிய வரிகளையும் கொள்கைத் தீர்மானங்களையும் மாற்றியமைப்பதன் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான விலைகளை மாறாமற் பேணுவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2018 இன் பின்னர் முதற் தடவையாக ஒக்தோபர் 2021 இல் எரிபொருள் விலைகள் 80 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்ததுடன், வழங்கல் பக்கத்தில் ஏற்பட்ட தடங்கல்களும் கேள்விப் பக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பபும் இதற்குக் காரணமாக அமைந்தன. இதனால் இலங்கைக்கு இது ஒரு மேலதிக தாக்கமாக அமைந்தது. 2022 இல் இது வழமையான நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாணயக் கொள்கை நடவடிக்கைகளுடனான நிதிக் கையாளுகைச் செயற்றிறனின் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றத்துடன், பணவீக்கமானது உரிய இலக்கை 2022 இல் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேலைவாய்ப்பும் வேலைவாய்ப்பின்மையும்

அரசாங்கம், குறிப்பாக கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதனூடாக வேலைவாய்ப்பை நிலைத்ததொரு மட்டத்தில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தொடர்கிறது. பல வருடங்களாக அவதானிக்கப்பட்டதன்படி, தொழிற்பலத்தில் பெண்களது பங்களிப்பு அவர்களது கல்வித் தகைமைகளுடன் ஒப்பிடும்போது குறைவாகவுள்ளதுடன், 2020 இல் அது 32.0 சதவீதமாக இருந்தது. அதனால், நிகழ்நிலையில் சேவைகள் வழங்கப்படுவதற்கு

வசதியளிப்பதனூடாக நெகிழ்வான நிர்வாகச் செயற்பாடுகளுடன் பெண்களது தொழிற்பலப் பங்களிப்பை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வேலைவாய்ப்பின்மை வீதம் 2021 இன் இரண்டாம் காலாண்டில் குறைவடைந்ததுடன், இது புதிய வழமைப் பொருளாதார நிலைமை விரிவாக்கத்தினால் முதலாவது காலாண்டின் 5.7 சதவீதத்திலிருந்து 0.6 சதவீத குறைப்புடன் 5.1 சதவீதத்தைக் கொண்டிருந்தது. அதனால், 2022 இல் வேலைவாய்ப்பின்மை வீதம் மேலும் குறைவடைந்து ஏறக்குறைய 4.5 சதவீத மட்டத்தில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வெளிநாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகள்

இலங்கையின் வெளிநாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகள் ஏற்றுமதிகளிலான அதிகரிப்புடனும் முக்கியமற்ற பொருட்களின் இறக்குமதியிலுள்ள கட்டுப்பாடுகள் இருப்பினும், இறக்குமதிகள் வழமைக்குத் திரும்புதலுடனும் 2022 இல் மீண்டெழுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், வணிகப் பற்றாக்குறை சீர்திருந்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 2021 இலும் 2022 இலும் போக்குவரத்துச் சேவைகளும் தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வணிகச் செயற்பாட்டு வெளியக மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் சேவைகளும் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உல்லாசப் பிரயாணத்துறையும் ஊழியர்களது கொடுப்பனவுகளும் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புதலுடன் சேர்த்து மீட்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றால் வெளிநாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டுப் பற்றாக்குறை மத்திய தர நிலைமைக்கு மீளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உள்வருகை துறைமுக நகர செயற்றிட்டத்தின் ஆரம்பத்துடன் மீண்டெழுமென எதிர்பார்க்கப்படுவதுடன், 2022 இல் நிலையானதொரு நாணயமாற்று வீதமும் எதிர்பார்க்கப்படுகிறது.

### பணரீதியான திரட்டுகள்

பண விநியோகம் 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சாதாரண வளர்ச்சியுடன் சேர்த்து இணக்கமானதொரு மட்டத்தைப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயற்றிறனின் மேம்பாட்டுடனான நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகள் சந்தைக்கு மேலதிக வளங்களை வழங்குவதுடன், அவை 2020 இல் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தனியார்துறையின் முதலீட்டிற்கு பயனுள்ளதாக இருக்கும்.

### வருமானங்கள்

வருமான மதிப்பீடுகளுக்கான ஊகங்கள் இணைப்பு IV இல் தரப்பட்டுள்ளன.

### செலவுகள்

செலவு மதிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அடிப்படைகள் பின்வருமாறு:

- சம்பளங்களுக்கும் ஊதியங்களுக்குமான செலவு மதிப்பீடுகள் அரசாங்கத் துறையில் 1.5 மில்லியன் ஊழியர்கள் உள்ளனர், அவர்களுக்குரிய வருடாந்த சம்பள உயர்ச்சிகள் சாதாரணமான வருடாந்த அதிகரிப்பைக் கொண்டுள்ளன என்ற ஊகங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. புதிய ஆட்சேர்ப்புகளின் நிரந்தரப் பதவிகளுக்கான உறுதிப்படுத்தல் 2022 இற்கான சம்பளப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- ஓய்வூதியச் கொடுப்பனவுகளுக்கான செலவுகளை மதிப்பீடு செய்வதில் ஓய்வூதியதாரர்களது எண்ணிக்கை கிட்டத்தட்ட 0.71 மில்லியன்கள் என ஊகிக்கப்பட்டுள்ளது. இதில் 2021 இலும் 2022 இலும் ஓய்வு பெறுபவர்களாக முறையே 25,000 மற்றும் 28,000 பேரின் பகுதி ரீதியான தாக்கமும் உள்ளடங்கும்.
- பணவீக்கத்தில் ஏற்படத்தக்க மிதமான அதிகரிப்பின் விளைவாக 2022 இல் எதிர்பார்க்கப்படும் உள்ளக வட்டி வீதங்களுக்கான கொடுப்பனவுகள் ஏற்படுத்தும் செலவுகளில் அதிகரிப்பு ஏற்படும்.
- சேவைப் பயன்பாடுகள் மற்றும் விநியோகங்கள் போன்றவற்றிற்கான செலவுகள் நடுத்தரக் காலகட்ட நிதி இலக்குகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் மேலும் கட்டுப்படுத்தப்படும்.
- குடித்தனங்களுக்கான கொடுப்பனவுகளும் மானியங்களும், கொவிட்-19 பெருந்தொற்றால் சமூகத்திலுள்ள எளிதில் பாதிக்கப்படத்தக்க குழுவினருக்கான பண வழங்குகைகளுக்கு மேலதிகமாக பாடசாலைப் பிள்ளைகளுக்கும் மாற்றுத்திறனுடைய படைவீரர்களுக்கும் உதவும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இலவச மருந்துகள், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற, தேவையான மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரித் திட்டங்கள், விவசாய ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்களுடன் சேர்த்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.
- எல்லாத் துறைகளுக்குமான தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்புக்கும் எண்ணிமத் தீர்வுகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- அரச நிறுவனங்களுக்கும் கூட்டுத்தாபனங்களுக்குமான மாற்றங்கள் தேவைப்படும் அளவில் பேணப்படும் அதேவேளை அவற்றின் செயற்றிறனில் சிறந்த முன்னேற்றம் எதிர்பார்க்கப்படும்.
- வீதிகள், போக்குவரத்து, நீர், கல்வி, சுகாதாரம், தொழிற் பயிற்சி போன்ற இன்னோரன்ன மத்திய தர பொருளார மற்றும் சமூக உட்கட்டமைப்புகள் மீதான பொது முதலீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 – 7 சதவீதத்தைப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை பொருளாதாரச் செயற்பாடுகளில் தனியாருந்துறையானது தூண்டப்படும்.
- பொதுச் செலவுகளின் தரத்தை மேம் படுத்துதல் மற்றும் பயனற்ற செலவுகள் மீதான குறைப்புகள் ஆகியன பற்றிய முயற்சிகள் வலுப்படுத்தப்படும்.

- இரட்டைத் தன்மையைத் தவிர்ப்பதற்காகவும் பாதீட்டு ஏற்பாடுகளின் பயன்பாடுகளது தடங்கலற்ற செயற்பாடுகளுக்காகவும், பரவலாக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் ஆகியவற்றுடனான நெருங்கிய ஒத்துழைப்பு மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படும்போது பிரயோகிக்கப்படும்.
- நாணய மற்றும் பணப்புழக்க முகாமைத்து வத்துக்கான அர்ப்பணிக்கப்பட்ட கட்டுப் பாட்டுப் பொறிமுறைகள் நடைமுறைப் படுத்தப்படும்.
- செயன்முறை, சேவை வழங்கல்கள், சட்டத்தின்படியான நடவடிக்கைகள் ஆகியன சம்பந்தப்பட்ட நிறுவன அபிவிருத்திக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

கடன்கள்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமான அரசாங்கத்தின் கடன்கள் 2020 இல் 101.8 சதவீதத்திலிருந்து, 2021 இல் 102.8 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படும் என்பதுடன், 2022 இல மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 101.6 சதவீதத்திற்குக் குறைவடையும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமான அரசாங்கத்தின் கடன்கள் குறைவடைவதை உறுதிப்படுத்துவதற்காக, உள்ளக மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் முறையானதொரு இணைப்பு பேணப்படும். வரி வருமானத்தை அதிகரித்தல், செலவுகளை நியாயப்படுத்துதல், வெளிநாட்டு பொருளாதாரத் தொடர்புகளைப் பலப்படுத்துதல் ஆகியவற்றை அதிகரிக்கும் அதேவேளை, வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட நிதி இணைப்பு மூலமாக கடன்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தின் நிதித் தேவைகளுக்கான செலவுகளை அதிகுறைந்த மட்டத்தில் வைத்திருப்பதில் கூடிய கவனமெடுப்பதன் மூலம், கடன் முகாமைத்துவமானது தொடரப்படும்.

மதிப்பீடுகளுக்கான உணர்வுகள்

பொருளாதார எதிர்வுகூறல்கள் பின்வரும் சவால்களால் எளிதில் பாதிக்கப்படத்தக்கனவாக உள்ளன:

- 2022 இல் சர்வதேச சக்திவளத்தையும் மற்றைய பண்டங்களையும் அதிகரிப்பதற்கான உலகப் பொருளாதார மீட்சி எதிர்பார்க்கப்படுகிறது. இது அதிகரித்த ஏற்றுமதிகள் போன்ற நேர்மறையான தாக்கங்களை உருவாக்கினாலும், இறக்குமதிச் செலவுகள், உள்ளக நுகர்வோர் விலைகள், உற்பத்திச் செலவுகள் ஆகியவற்றிலும் அதேபோல் பாதீட்டுச் செலவுகளிலும் பாதகமான தாக்கங்களை உருவாக்கும்.
- கொவிட்-19 பெருந்தொற்று அல்லது அதனுடன் தொடர்புடைய சுகாதார அபாயங்கள் ஆகியவற்றின் தீவிரத்தன்மை.
- வெளியக தாக்கங்களுக்கான சரிப் படுத்தல் செலவுகள். இவை உள்ளக உற்பத்திகளில், வெளிநாட்டு வர்த்தகத்தில், உள்ளூர் விலைகளில் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எதிர்நோக்கத்தக்க சர்வதேச புவிசார் அரசியல் தளம்பல்கள் காரணமான அபாயங்கள்.
- சாதகமற்ற காலநிலை நிலவரங்கள் விவசாயம், நீர் மின்வலு உற்பத்தி, அரசாங்கப் பாதீடு ஆகியவற்றில் ஏற்படுத் தத்தக்க எதிர்மறையான தாக்கங்கள்.
- நிர்வாக ரீதியான மற்றும் கொள்வனவு தொடர்பான முட்டுக்கட்டைகள்.
- நடுத்தரக் கால மாற்றங்களின் திறனளவில் காணப்படும் தடங்கல்கள், வெளிநாட்டு நிதியளிப்பினால் மேற்கொள்ளப்படும் பாரிய செயற்றிட்டங்களில் நிதிகள் பயன்படுத்தப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதனால் முதலீட்டு மட்டத்திலும் பொருளாதார வளரச்சியிலும் ஏற்படத்தக்க தடைகள்.
- பொருட்களாலேற்படும் தாக்கங்கள் நிதி நிலைமைகளில் ஏற்படுத்தத்தக்க அபாயங்கள்.
